திருமந்திரச் சக்கரங்கள்



சி.எஸ். முருகேசன்

திருமந்திரச் சக்கரங்கள்

சி.எஸ். முருகேசன்

குறிஞ்சி

20, டீச்சர்ஸ் கில்டு காலனி,
இராஜாஜி நகர் விரிவு,
வில்லிவாக்கம், சென்னை-600 049.
தொலைபேசி: 26502086

THIRUMANTHIRA CHAKKARANGAL

C.S. Murugesan

© Publisher

பதிப்பு : 2006

விலை : ரூ. 55-00

மொத்தப் பக்கங்கள் : 184

ஒளி அச்சு மற்றும் முன் அட்டை வடிவமைப்பு : சு. அசோக்குமார்,
Digital Designer
பாடி, சென்னை-600 050.
தொலைபேசி: 26545532

அச்சிட்டோர் : சென்னை ஆர்ட் பிரிண்டர்ஸ்,
சென்னை-600 021.

1/6

முன்னுரை

இன்றைய காலக்கட்டத்தை யந்திர யுகம் என்று அறிமுகப்படுத்தினால் அஃது மிகையாகாது.

ஒவ்வொரு ஆன்மீக இதழ்களும் போட்டி போட்டுக் கொண்டு பலவிதமான யந்திரங்களை இலவசமாக அன்பர்களுக்கு வாரி வழங்கி வருகின்றன.

இயந்திரமயமான உலகில் சக்கரமாகச் சுழன்று உழலும் தங்களுக்கு ஏதேனும் மீட்சி இன்பம் கிடைக்காதா என்ற நம்பிக்கையில் ஒவ்வொருவரும் போட்டி போட்டுக் கொண்டு அதனைப் பூசை செய்து பயன் பெற முயலுகின்றனர்.

என்ன விலை கொடுத்தேனும் தம் துன்பங்களைக் குறைத்துக் கொள்ள முற்படும் இதயங்களுக்கு இந்த **"சக்கர வழிபாடு"** ஒரு பெரும் ஆறுதல் அளிக்கும் விஷயம் ஆகும்.

வாழ்க்கையில் அவ்வப்போது ஏற்படும் காரியத் தடைகள் இறைவனால் விதிக்கப்பட்ட ஊழ்வினைப் பயனால் உண்டானவை. இறைவனின் கருணையை வேண்டி இத்தகைய தடைகளை விலக்கும் வழிவகைகளை நாம் அறிந்து கொண்டால் வாழ்க்கையை வளமுள்ளதாகவும், நிம்மதியுள்ளதாகவும் நம்மால் உருவாக்கிக் கொள்ள முடியும்.

இறை வழிபாட்டுடன் இணைந்த மந்திரங்களையும், துன்பங்களை நீக்கிக் கொள்ளும் சாதனங்களாக உபதேசம்

செய்த சித்தர்கள் இவைகள் சாத்தியமாக வேண்டு மென்றால் இறைவனின் திருவருளும் வேண்டும் என்று திரும்பத் திரும்பக் கூறுகின்றனர்.

மந்திர வழிபாட்டினாலும், யந்திர வழிபாட்டினாலும் எண்ணிறந்த சக்தி பெற்றிருந்தாலும் அவைகள் செயலாக்கம் பெற இறைவனின் திருக் கருணை வேண்டும். அந்தக் கருணையைப் பெற மனிதனுக்கு நல்ல மனமும், நற்சிந்தனைகளும் வேண்டும் என்று வழிமுறைகளைக் கூறுகின்றனர்.

சித்தர்கள் சித்தாந்தத்தில் உருப்பெற்ற இந்த மந்திர யந்திர வித்தைகளைத் திருமூலரும் தம் திருமந்திரத்துள் அறிமுகப்படுத்தி வைக்கின்றார்.

அவர் அறிமுகப்படுத்தும் இந்த மந்திர யந்திர வழிபாடு மறைபொருள் நிறைந்தவை. மாறுபாடு இல்லாமல் மன நிம்மதியையும், மகிழ்ச்சியையும் அளிக்க வல்லவை.

மந்திர அமைப்புகளுடன் கூடிய யந்திரங்களை இன்று பொருட் பிழையில்லாமல் அறிந்திருப்போர் ஒரு சிலரே! அவர்களும் அதனைப் பெரும் இரகசியமாகப் பாதுகாத்து வருகின்றனர். ஆர்வமுள்ளவர்கள் அவர்களிடம் விளக்கம் கேட்டாலும், தக்க பதிலளிக்காமல் அவர்களது ஆர்வத்தைச் சிதைக்கும் வண்ணம் எதிர்க்கேள்வியும், நையாண்டித் தனமும், நக்கலும் செய்து அவர்களைக் கேலிக்குள்ளாக்கு கின்றனர்.

ஆர்வமுள்ள அந்த அன்பு இதயங்களுக்கு ஆறுதலளிக்கும் வண்ணம், பொருள் புரியாப் புதையலாய்

விளங்கும் திருமந்திரச் சக்கரங்களுக்கு ஒரு சிறு அறிமுகமேனும் நாம் அளிக்க வேண்டும் என்று என் நண்பர் திரு. ஆ.கோமதிநாயகம் அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் உருவானதுதான் இந்தத் திருமந்திரச் சக்கரங்கள்.

இறைவனுக்கும் நமக்கும் உள்ள தூரத்தைக் குறைத்துக் காட்டும் தொலை நோக்குக்ளாகவுள்ள இந்தத் திருமந்திரச் சக்கரங்கள், இறைவனின் தரிசனத்தை இருந்த இடத்திலிருந்தே காணும் வகையைச் சொல்கின்றன. அந்தப் பெருமைமிகு இறை தரிசனத்திற்குக் குறுக்கே நிற்க நான் யார்?

மறை பொருளாம் மந்திர யந்திரங்களை தெளிபொருளாய் உணர்த்த வாய்ப்பளித்த இறைவனுக்கும், மந்திரமாய் நின்ற திருமூலருக்கும் மண்மொழியாய் விளக்கம் உரைத்த சித்தர் பெருந்தகையினருக்கும், முயற்சி உருப்பெற ஊக்கமளித்த பதிப்பாளருக்கும் என் உத்தம நன்றி உரித்தாகட்டும்.

அன்புடன்,

சி.எஸ். முருகேசன்

யந்திர நெறி

மந்திரமுந் தேவும் மருந்துங் குருவருளுந்
தந்திரமும் ஞானந் தருமுறையும் - யந்திரமும்
மெய்யென்னில் மெய்யாய் விளங்குமே மேதினியிற்
பொய்யென்னிற் பொய்யாகிப் போகும்

-நீதி வெண்பா

மந்திரங்கள், தெய்வம், மருந்து, குருவருள், சாத்திரங்கள், ஞானோபதேசங்கள், சக்கரங்கள் இவை எழும் மெய்யென்று நம்புவோர்க்குப் பயனை அளிக்கும்.

நம்பாதவர்க்குப் பயனைக் கொடுக்காமல் பொய்யான தோற்றமளிக்கும்.

பொருளடக்கம்

1. யந்திரமும் தந்திரமும்

மனதில் இறைமையைக் காணும் அக வடிவம் இறை திருமேனிகள்; அதன் புற வடிவும்தான் மந்திரச் சக்கரங்கள்.

மந்திரங்கள், யந்திரங்கள் ஆகிய இரண்டுமே ஒலி அதிர்வுகளை மையமாகக் கொண்டு தோன்றியவை என்றாலும்; மந்திரங்கட்குப் புறத் தோற்றமாய் காட்சியளிப்பது யந்திரங்களே!

சிவமயமாய் ஸ்தாபிக்கப்பட்ட சக்கரங்களை சத்தியாம் உயிர் வழங்கி, செயலாக்கம் பெற வைப்பது மந்திர உச்சாடனங்களே. மந்திரங்கள் செயல் வடிவம் பெற யந்திர வடிவம் அவசியம்.

இறைவனுக்கும் மனிதனுக்கும் ஒலித் தொடர்பு சாதனமாக மந்திரங்கள் இருப்பது போலவே மந்திரங்களுக்கும் இறைவனுக்கும் ஒளித் தொடர்பு சாதனமாக விளங்குவது யந்திரங்களே!

அக வழிபாடாகிய மந்திரத்திலும் சரி, புற வழிபாடாகிய யந்திரப் பிரதிஷ்டையிலும் சரி, மனிதன் நம்பிக்கை வைப்பதால்தான் மனிதனின் விதி வழி உழலும் வாழ்க்கையில் முக்கியத் திருப்பங்கள் பல ஏற்படுகின்றன. சில திருப்பங்கள் நல்லவையாக இருக்கும்; சில தீமைகளாக அமையும். பரம ஏழை கோடீஸ்வரன் ஆவதும், கோடீஸ்வரன் பரம ஏழை யாவதும், இந்தக் காலச் சுழற்சியினாலே ஆகும்.

இந்தக் காலச் சுழற்சி மாற்றங்கள் அனைத்தும் விண்ணிலே உலாவரும் கோள்களின் சுழற்சி மாறுதல் காரணமாக ஏற்படுகிறது என்பது அறிவியல் முறைகளால் நிரூபிக்கப்பட்ட ஒன்றாக இருந்தாலும், அண்டத்தில் உள்ளதே பிண்டத்திலும் என்னும் அடிப்படைத் தத்துவத்தின்படி

கோள்களின் இயக்கத்தை இங்கிருந்தே கட்டுப்படுத்தும் கருவியாக (ரிமோட் கண்ட்ரோல்) சித்தர்கள் சக்கரங்களை வடிவமைக்கத் தொடங்கினர்.

அந்தச் சக்கரங்கள் விண் கோள்களையும் இறைவனின் அருள் நிலையையும் மாற்றி விடச் செய்யும் வல்லமை பெற்றவைகளாக உருமாறின. இதன் சூட்சுமத்தை அறிந்து கொண்ட மந்திரவாதிகள் சிலர் துர் தேவதைகளை வசப்படுத்தவும், அவைகளின் உதவியால் பல நாச வேலைகளைச் செய்யவும் முற்பட்டனர்.

விழித்துக் கொண்ட சித்தர்கள் அருள்நிலை அளிக்க வல்ல சக்கரங்களை மட்டுமே மக்களுக்கு அறிமுகப் படுத்தத் தொடங்கினர். அதனால் எத்தனையோ அரிய தற்காப்புச் சக்கரங்களை நாம் இழந்து நிற்கிறோம்.

இந்த யந்திரங்களைப் பற்றிய செய்திகள் அனைத்தும் தந்திரக் கலையின் வகையைச் சார்ந்தது. அறுபத்து நான்கு கலைகளில் தந்திர பேதம் என்பதும் ஒன்று. தெய்வ வழிபாட்டுக்குரிய மந்திர, யந்திர, தந்திரங்களைப் பற்றிக் கூறும் நூல். ஓரிடத்தும் வெளிப்படுத்தாத மந்திரத்தை வெளிப்படச் செய்யும் கலை என்று இதற்கு விளக்கமளிக்கும். 'சுக்கிர நீதி' இஃது அதர்வண வேதத்தின் உபவேதம் என்று மேற்கோள் காட்டுகின்றது.

தந்திரமாகிய ஆகமங்களுள் கூறப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கினுள் முதல் இரண்டும் இந்தத் தந்திரக் கலையில் அடங்கும்.

தன்னை அடைந்தோரைக் காப்பதும், தத்துவ மந்திரங்களின் பொருள்களை விளக்குவதும் தந்திரமாகும் என்று ஆகமங்களில் இச் சொல்லிற்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

தந்திரக் கலையின் ஓர் அங்கமாயுள்ள இந்த யந்திரக்கலை சித்தர் வழிபாட்டு நெறியில் ஆரம்பக்கட்ட அதிசய செயல்களுக்குப் பயன்படுத்தப்பட்டு, பின்னர் முக்தி நெறியின் சாதனமாக உருமாற்றம் பெறுகின்றது.

யோக சாதனையில் உடலைக் கோவிலாகக் காணும் சித்தர்கள் அங்கு ஆறாதாரச் சக்கரங்களை ஸ்தாபித்து தம் மந்திர செபத்தின் மூலம் இறை தரிசனத்தையும் கண்டனர்.

2. மந்திரமும் யந்திரமும்

இரகசியங்களை இரகசியங்களாகவே மொழிந்து சென்றவர் பதஞ்சலி. இரகசியங்களை விளக்கவுரைகளாக அறிமுகப்படுத்தியவர் திருமூலர். அதனால்தான் மக்களுக்குத் திருமந்திரம் அறிமுகமான அளவுக்கு யோக சூத்திரம் அறிமுகமாகவில்லை.

'மந்திரம்' என்ற சொல்லே மறைமொழியாக மயக்கமாயிருக்கிற நிலையிலே அந்த ஆற்றலை ஸ்தாபிக்கும் களமாக உருவெடுத்தது யந்திரங்கள். 'யந்திரம்' என்பது இயக்குதல், கருவி, பொறி எனப் பொருள்படும். அஃதாவது, வரைகளும், பீசம் முதலியவையும் முறைப்படி வரையப் பெற்று வழிபடப்படும் சக்கரம் என்பதாகும்.

இதன்கண் இறைவனது அருட்சக்தி பதிந்து விளங்கி நின்று சாதகரின் விழைந்த பொருளையும், வினையையும் இயக்குதற்கு நிலைக்களனாய் இருந்ததினாலே இஃது இப்பெயர் பெற்றது.

மந்திரம் என்பது உயிரைப் போன்றது. யந்திரம் உடம்பினைப் போன்றது என்று 'காமிகாகமம்' கூறுகின்றது. மந்திரம், தந்திரம் என்பன இரண்டும் சேர்த்துச் சொல்லப் படுதல் பெருவழக்காதல் போன்று, மந்திரம், யந்திரம் ஆகிய இவை இரண்டும் இணைத்துக் கூறப்படுதலும் பெருவழக்காகும். மந்திரம் உயிரைப் போன்றது. யந்திரம் உயிர்வளியைப் போன்றது. இதன் வடிவம் உடம்பைப் போன்றது என்று சித்தர்களால் கூறப் பெறுகின்றது.

சௌந்தரியலகரி உரையில் எல்லப்ப நாவலரும் ஆகமம் ஆவது, ஸ்ரீ வித்தை. அது மந்திரமும், சக்கரமும் என இருவகைத்து என்று சுட்டுகின்றார். அதுமட்டுமல்ல கந்தர் அனுபூதி, மனோன்மணி மாலை, வராகி மாலை, சௌந்தரிய லகரி முதலிய நூல்களில் உள்ள ஒவ்வொரு செய்யுட்களிலும் செந்தமிழ்த் தெய்வ மந்திரம் ஆம்ாறும், அம்மந்திரச் செய்யுள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே யந்திரம், தந்திரம், பிரயோகம், வழிபாட்டு முறை முதலியன அமைந்திருத்தலும், விதிப்படி வழுத்துபவருக்கும் பூசிப்பவருக்கும் கருதிய பயன்களை அவை பொய்க்காமல் அளித்து வரும் உண்மையையும் நோக்க, யந்திரத்தின் முக்கியத்துவம் புலனாகும்.

யந்திரங்கள் (சக்கரங்கள்) பொதுவாக மூல யந்திரம், பூசா யந்திரம், தாபன யந்திரம், தாரண யந்திரம், ரட்சா யந்திரம், பிரயோக யந்திரம், பிரயோகார்த்த பூசனை யந்திரம், சித்திப் பிரத யந்திரம், முத்தொழிற் சக்கரம், ஐந்தொழிற் சக்கரம், ஐம்பூதச் சக்கரம், சட்கர்மச் சக்கரம், அஷ்ட கர்ம சக்கரம், ஆறாதாரச் சக்கரம், ஏரொளிச் சக்கரம், சிவ சக்கரம்,

சிவகோணம், சக்தி சக்கரம், சக்தி கோணம், காலச் சக்கரம், ராசிச் சக்கரம், சாவுதோபத்ர சக்கரம், கஷ்புட சக்கரம், முக்கோணச் சக்கரம், சதுர்சிர சக்கரம், ஐங்கோணச் சக்கரம், அறுகோணச் சக்கரம், எண்கோணச் சக்கரம், நவகோணச் சக்கரம், விந்து வட்டச் சக்கரம், ரவிச் சக்கரம், பிறைமதிச் சக்கரம், நாற்பத்து முக்கோணச் சக்கரம், சம்மேளன சக்கரம், திருவம்பலச் சிதம்பரச் சக்கரம், பதினாறுபதச் சக்கரம், இருபத்தைந்து பதச் சக்கரம், முப்பத்தாறு பதச் சக்கரம் எண்பத்தொருபதச் சக்கரம், அறுபத்தி நான்கு பதச் சக்கரம் முதலியனவாகப் பல உள்ளன.

இது தவிர ஒவ்வொரு கடவுளருக்கும் தனித்தனியே சிறப்பாயுள்ள சக்கரங்கள் பலவும் கூறப்படுகின்றன. அவை வாலைச் சக்கரம், புவனைச் சக்கரம், திரிபுரைச் சக்கரம், வயிரவச் சக்கரம், நவாக்கரி சக்கரம், நவக்கிரக சக்கரம், ஏரொளிச் சக்கரம், சுதர்சனச் சக்கரம், விஷ்ணுச் சக்கரம், நரசிங்கச் சக்கரம், சரப சாளுவச் சக்கரம், விநாயகச் சக்கரம், வீரபத்திரச் சக்கரம், சண்முகச் சக்கரம், மிருத்யுஞ்சய சக்கரம், நீலகண்ட சக்கரம், சண்டிச் சக்கரம், துர்க்கைச் சக்கரம், இராம சக்கரம், சீதா சக்கரம், இலக்குமி சக்கரம், அனுமத் சக்கரம் இன்னும் பலவாக சக்கர வகைகள் விரிவடைந்து கொண்டே செல்கின்றன.

சித்தர்களனைவரும் தங்களின் கோடானுகோடி சித்த வித்தைகளை நிகழ்த்துவதற்கு அடிப்படையாக எண்வினை ஏவல் மந்திரங்களைப் பயன்படுத்தினர். இஃது சக்கரங்களாகச் சமைக்கப்படும்பொழுது துருவ, அத்துருவ இயக்கஅறைகளில் அட்சரக் குறியீடுகளால் வடிவமைக்கப்படுகின்றது. இதுவே அனைத்து சித்த வித்தைகளுக்கும் மூலம் என்றும் உணர்த்தப் பெறுகிறது.

திருமூலர் மூலனுடைய உடலில் புகுவதற்கு முன் சந்தரநாதர் தம் இயற்பெயருடன் விளங்குங் காலத்திற் செய்த

தமிழ் நூலாகிய திருமந்திரம் முந்நூறு என்ற நூல் முழுக்க முழுக்க சக்கரங்களுக்கு அதிபதியாகிய புவனாபதி சக்கரத்தையும் எண்வினை ஏவல்களுக்குரிய அஷ்ட கன்ம யந்திரங்களையும், அவைகளின் பூசை முறைகளையும் அப் பூசனைகளுக்கு அங்கமாயுள்ள ஓமம், தர்ப்பனம் ஆகியவற்றின் மந்திர தந்திரங்களையும் சமஸ்கிருத நியதிகளோடு விளக்கமளித்தார்.

அதுவே திருமூலராக திருமந்திரம் மூவாயிரம் சொல்லுங்காலத்தில், நமசிவாய எனும் பஞ்சாட்சரத்தை மூலமந்திரமாக்கி யந்திரங்களை அறிமுகப்படுத்தியுள்ளார். ஏன் இந்தத் தடுமாற்றம்? 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்ற தென்னாட்டு தமிழ் உடலின் நேசம், அவரை ஒரு தமிழ் மகனாகச் சிந்திக்கத் தூண்டியது போலும். எங்கும் எதையும் வெல்லும் தமிழ் என்பதன் சக்தி இதுவோ? தமிழ் மகன் ஒருவன் உடலில் புகுந்ததாலே, ஆரியரான சுந்தரநாதர், தமிழாய் விளங்கும் சிவபெருமானின் பெருமைமிகு ஆற்றல்களை, தீந் தமிழாய் , வேதத் தமிழாய் உருவாக்கினான் என்பது வியப்பு எய்தும் செய்தியல்லவா?

திருமந்திரத்துள் திருமூலரால் கூறப்பட்டுள்ள சக்கரங்கள் யாவும் மனித வாழ்வை வளப்படுத்தவே உரைக்கப்பட்டவை யாகும். யாரும் யாருக்கும் தீங்கு செய்து விடக்கூடாது என்ற நோக்கில் இறைத் தன்மையை உயர்வு செய்து அமைக்கப் பட்டவையாகும்.

இந்தத் திருமந்திரச் சக்கரங்களின் வடிவத்தை திருமூலரின் வழி நின்று காட்சி விளக்கம் பெற திருவம்பலத்தை நாடுவோம்.

3. திருவம்பலச் சக்கரங்கள்

இறைவன் இயற்றும் நடன வகைகளுள் அற்புதமும் ஆனந்தமுமாகிய இரண்டு நடனங்களே இன்பம் தருவன. அவற்றுள்ளும் ஆனந்த நடனமே பேரின்பம் தருவதாகும். அந்த ஆனந்த நடனமிடும் அம்பலங்கள் இப் பூவுலகில் ஐந்தாகும். சிதம்பரத்தில் சிற்றம்பலம் (பொன்னம்பலம்), மதுரையில் வெள்ளியம்பலம், திருவாலங்காட்டில் இரத்தின அம்பலம், திருநெல்வேலியில் தாமிர அம்பலம், திருக் குற்றாலத்தில் சித்திர அம்பலம் ஆகியவைகளாகும்.

இந்த ஐந்து அம்பலங்களுள் பெரும் சிறப்புபொருந்தியது சிதாகாயப் பெருவெளியாகிய சிற்றம்பலமே. இந்தச் சிற்றம்பலத்தின் பெருமைகளைக் கூற இம் மானிடப் பிறவியே போதாது.

அப்படி என்னதான் சிறப்பு இருக்கிறது இந்தச் சிற்றம்பலத்திற்கு என்று ஆவல் கொண்டோர்க்கு அழகுற அறிமுகப்படுத்துகின்றார் திருமூலர்.

மற்ற அம்பலங்களை விட இந்த அம்பலத்தில்தான் அற்புதத் தாண்டவம், ஆனந்தத் தாண்டவம், அனவரதத் தாண்டவம், பிரளயத் தாண்டவம், சங்காரத் தாண்டவம் என ஐவகைத் தாண்டவங்களையும் இறைவன் ஆடும் சிறப்புப் பெற்றது.

சிற்றம்பலம் என்ற பொருளிலே சிறிய சபை என்ற பொருளே தொக்கி நிற்க, இதைப் போய் ஐந்து கூத்துகளுமியற்றும் பேரம்பலம் என்கின்றனவே அஃது எவ்வாறு?

சிறிய அம்பலம் என்பதில் சிறிய என்பதற்கு நுணுக்கம் என்ற பொருள் கொண்டு பார்த்தால் சிற்றம்பலத்தின் நுட்பம் புரியும். இறைவன் அணுவினும் அணுவாய், அப்பாலுக்

கப்பாலாய் உருவமற்ற பெருவெளியில் அருவுருவாய் நிறைந்து எங்கும் பேரொளியாய் பிரகாசிக்கின்றார் என்ற உண்மை விளங்கும்.

இந்தப் பேரொளியை இரகசிய தரிசனமாக சிற்றம்பலத்தில் ஆடல் வல்லானுக்கு வலப்புறத்தில் பொற்றளங்களால் குறித்துக் காட்டுகின்றனர். இதுவே சிதம்பர இரகசியமாகும்.

இந்தச் சிதம்பர நடனத்திற்கு சிவபெருமானுக்கென்று திருமூலர் அமைத்த யந்திரச் சக்கரமே 'திருவம்பலச் சக்கரம்'. இதுவே நடராஜப் பெருமானின் எழுவகைத் தாண்டவத் திற்கும் நூற்றியெட்டுக் கரணங்களுக்கும் அடிப்படையாய் உள்ளது.

சிதாகாயப் பெருவெளியில் ஆனந்தக் கூத்தாடும் அம்பலவாணப் பெருமான் தன் அருட் சக்தியோடு மந்திர வடிவாய் நின்று நிலவும் இந்த யந்திரம் மந்த பக்குவிகளுக்கு உத்தார ஏதுவாய், தீவிர பக்குவிகட்கு அனுபவப் பொருளாய், தீவிர தரப் பக்குவிகட்கு ஆனந்தமாய் விளங்கி, நற்பயன் அளித்துக் கடைத் தேற்றுகிறது.

இந்த அற்புத யந்திர வடிவு இறைவன் திருக்கோயிலில் மட்டுமல்லாது, நல்லோர் மனத்திலேயும் புலப்படும் இயல்பு உடையது. இந்த அருவ நிழல் வடிவத்தை உருவ வடிவிலும் வரைந்து தரிசனம் செய்யலாம் என்று திருவம்பலச் சக்கரத்தை வரையும் முறையையும் சுட்டுகின்றார் திருமூலர்.

'சிவாயநம' எனத் திருவைந்தெழுத்தை ஓதினால் செம்பு பொன்னாகும். அவ்வண்ணம் செம்பு பொன்னாகத் திரண்டு ஒன்றானதே சிற்பரமாம். செம்பு உலோகம் அநாதியே களிம்போடு கூடியிருத்தல் போல, ஆன்மாக்களும் அநாதியே ஆணவ மலத்தோடு கூடியிருப்பன.

செம்பு இரசக் குளிகையினால், களிம்பற்றுப் பொன்னாவது போல ஆன்மாக்களும் ஞானாசாரியருடைய

நோக்கால், ஸ்பரிசத்தால், உபதேசத்தால் மல நீக்கம் பெற்று ஞான ஒளி பெற்றுத் திகழும்.

இப்படி ஆணவ மலம் நீங்கிச் சிவஞானம் பெற்று, அதிலே திளைத்து முற்றிய நிலையே சிற்பரம். அப்படி செம்பு பொன்னான நிலையே திருவம்பலம்.

இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த திருவம்பலத்தை வடிவமாக்கித் தரிசிக்க நெடுக்கும் குறுக்குமாக ஆறு கோடுகளைக் கீறி, மாறுபட்ட வம்பு அல்லேமாக இருபத்தைந்து அறைகளாக்கி அதில் சிவய் என்ற அச்சரங்களைப் பொறிக்க வேண்டும்.

இதில் சிகார எழுத்தாகிய சி நடுநாயகமாய் நின்று இரண்டு முக்கோணங்களாகப் பிரியும் வண்ணம் அமைத்து ஒடுக்கமுறையும் பஞ்சாட்சர மந்திரத்தை அமைத்துள்ளனர்.

இதில் 'சிவயநம' என்பது ஒவ்வொரு எழுத்தாக ஒலி குறைந்து, இறுதியில் சிகாரத்தில் ஒன்றும். இவ்விதம் ஒடுக்கம் காணும் யந்திரத்தை 884 ஆம் திருமந்திரப் பாடலாகக் கூறுகின்றார் திருமூலர்.

திருவம் பலமாகச் சீர்ச்சக் கரத்தைத்
திருவம் பலமாக ஈராறு கீறித்
திருவம் பலமாக இருபத்தைஞ் சாக்கித்
திருவம் பலமாகச் செபிக்கின்ற வாறே. (திருமந்திரம் 884)

சி	வ	ய	ந	ம
வ	சி	ய	ந	ம
ய	வ	சி	ந	ம
ந	ய	வ	சி	ம
ம	ந	ய	வ	சி

இதே இருபத்தைந்து அறை திருவம்பலச் சக்கரத்தை 903 ஆம் திருமந்திரத்தில் சிகாரம் முதலாக சிகாரம் ஈறாக மாறும் தோற்றமுறையையும் கூறி அக்கரங்களை மாற்றி அமைத்துக் காட்டுகின்றார்.

சி	வா	ய	ந	ம
ம	சி	வா	ய	ந
ந	ம	சி	வா	ய
ய	ந	ம	சி	வா
வா	ய	ந	ம	சி

எங்குமாய் இருக்கின்ற 'பரசிவம்' திருவம்பலச் சக்கரத்துள் நாற்கோண வடிவத்திலும் முக்கோண வடிவத்திலும் சம சதுர வடிவத்திலும் எங்குமாயும் ஒரு மனையிலேனும் ஒன்றியிருக்கும் என இறைவனின் எல்லாமாய், எங்குமாம் நிறைந்திருக்கும் நிலையைக் கூறி அதற்கொரு சக்கரத்தையும் அறிமுகப்படுத்துகின்றார் திருமூலர்.

பன்னிரண்டு நேர் கோடுகளை குறுக்கும் நெடுக்குமாக அமைத்து, நூற்றிருபத்தொரு மனைகளாக்க வேண்டும். இதில் சிவாக்கரமாகிய சிகாரத்தை மையமாக அமைத்து அதையே எண் திசைகளிலும் மூலைக்கொன்றாக அமைத்து இறைவன் எங்கும் நிறைந்திருக்கும் நிலையையும், ஓரிடத்து இருக்கும் நிலையையும் புலப்படுத்த வேண்டும் என்கிறார். இதில் மையத்தில் இடப்பட்ட 'சி' ஆனது இறைவன் ஆலயத்துள் உறையும் நிலையையும் ஏனைய எட்டு திசை கட்டங்களில் நிறைத்தது இறைவன் எங்குமாய் நிறைந்திருந் திருக்கும் நிலையையும் குறித்து நின்றது.

'சிவயநம' என்பதில் 'சி' இறைவனாகவும், 'வயநம' என்பது உயிர்களாகவும் சித்தரித்து 'சி' இறைவனை ஓரிடத்தும் எங்குமாயும் நிறைந்திருக்கின்ற நிலையைச் சுட்டிய திருமூலர் உயிர்கள் உய்யும் பொருட்டு இறைவன் பஞ்ச பூதங்களாயும் நிறைந்துள்ள நிலையை இத்திருவம்பலச் சக்கரத்துள் அமைத்துக் காட்டியுள்ளார்.

சிகாரத்தை மூல எழுத்தாகிய பிரணவமாகக் கொண்டு விண்ணாய், மண்ணாய், நீராய், காற்றாய், கனலாய் இறைவன் பஞ்ச பூதங்களிலும் கலந்துறையும் நிலையை சிகாரத்தை மையப் புள்ளியாகக் கொண்டு வகர சதுரமும், அதனை அடுத்து யகர சதுரமும், அதன்பின் நகர சதுரமும், தொடர்ந்து மகர சதுரமும், இறுதியாக எல்லாம் கலந்த திருவைந்தெழுத்தை ஒவ்வொரு மனையின் கண்ணும் அமைத்து இத் திருவம்பலச் சக்கரத்துக்கு மந்திர ஒளியை ஊட்டுகின்றார்.

இருந்தஇவ் வட்டங்கள் ஈராறி ரேகை
இருந்த இரேகைமேல் ஈரா றிருத்தி
இருந்த மனைகளும் ஈராறு பத்தொன்று
இருந்த மனையொன்றில் எய்துவன் றானே.

-திருமந்திரம் 894

வெறுமனே திருவம்பலச் சக்கரத்துள் இறைவனை வரைந்து அடைத்து விட்டால் மட்டும் போதுமா? அந்தச் சக்கரத்துள் இறைவன் திருக்கூத்தை இயற்றுவதற்கு மந்திர உருவேற்ற வேண்டுமே! அதற்காகத் திருமூலர் அசபை மந்திரத்தை அறிமுகம் செய்து வைக்கிறார்.

பல் கலைகளையும் தரிசித்து வல்லவராகிய அனுபவ ஞானிகளால் சொல்லப்படுவன ஹம், சம் என்னும் அசபை மந்திரம் இரண்டே. இந்த அசபாத் தியானத்தால் விளைவன பிரணவமும் பஞ்சாக்கராதிகளுமாம். இஃது சங்கார தாண்டவ

முறையில் உச்சரிக்கப்படுவது.1 ஆதலால் இது மூல்த்தில் அடங்கி நின்று, பரவுகின்றது.

சி	வ	ய	ந	ம	சி	வ	ய	ந	ம	சி
ம	ம	ம	ம்	ம	ம	ம	ம	ம	ம	வ
ந	ம	ந	ந	ந	ந	ந	ந	ந	ம	ய
ய	ம	ந	ய	ய	ய	ய	ய	ந	ம	ந
வ	ம	ந	ய	வ	வ	வ	ய	ந	ம	ம
சி	ம	ந	ய	வ	சி	வ	ய	ந	ம	சி
ம	ம	ந	ய	வ	வ	வ	ய	ந	ம	வ
ந	ம	ந	ய	ய	ய	ய	ய	ந	ம	ய
ய	ம	ந	ந	ந	ந	ந	ந	ந	ம	ந
வ	ம	ம	ம	ம	ம	ம	ம	ம	ம	ம
சி	ம	ந	ய	வ்	சி	ம	ந	ய	வ	சி

அசபா மந்திரமான 'ஹம்' என்பது உயிரையும் 'ஸ' என்பது சிவத்தையும் உணர்த்துவன. உயிரானது இறையொளியில் அடங்கி இருக்குமானால் இறைவனுடைய பிரணவ பஞ்சாக்கர வடிவுகள் அனுபவ சித்தியாம். அது மூலாதாரம் முதல் சங்கார

1. சங்கார தாண்டவ முறை என்பது ஞான நடன அமைப்பு. அதாவது 'சிவாயநம' என்ற முறை. இதில் 'ஹம்ச' என்று உயிரைச் சிவத்துடன் ஒன்றச் செய்வது சங்கார கிரமமாம்.

தாண்டவ முறையில் தியானிக்கப்படுவதால் வியாபகத் தன்மை சித்திக்கும் என்கிறார்.

திருக்கூத்து நிகழுகின்ற இடத்தில் எல்லாம் அமலமாய் இருக்குமாதலால் இந்த அசபையை இவ்வாறு அறிந்து அனுபவித்தலே ஆகமும், வேதமும், சிவகதியுமாய் அமையும்.

திருக்கூத்தே சிவமாய், சக்தியுமாய் எல்லாமுமாய் நிற்கும்; ஆதலால் அங்கு இறைவன் புலனாவான் என்று மந்திரத்தை அறிமுகப்படுத்தி வைக்கின்றார்.

மந்திரம் உச்சரிக்கும் முறை:

அசபையாக திருவைந்தெழுத்தினைத் தியானிப்ப வருக்குத் திருவருட் பேறும், ஞான சந்ததியும் ஆணவ மல நீக்கமும், சிவசாரூபமும் விளையுமாதலால் இம் மந்திரத்தைப் பொன்னைப் போலப் போற்ற வேண்டும்.

பொதுவாக மந்திரங்களைத் தன் காது கேட்க ஒலித்தலும், பிறர் காது கேட்க ஒலித்தலும் கூடாது என்பர். மந்திரங்களை மௌனமாக உதட்டளவில்உச்சரித்தால் மட்டுமே அதற்குப் பலனுண்டு. ஆதலால் பொன் போலப் போற்ற வேண்டும்.

ஆதலால் பொன் போலப் பொதித்து வைத்துக் கொள்ளக்கூடிய இம் மந்திரத்தை வாயினால் உச்சரிக்காமல் உதட்டளவில் திருவைந்தெழுத்தையே பிராண வாயுவாகக் கொண்டு பிர்ர்ணனோடு பூரகம்[1] செய்ய வேண்டுமென்றும்; அதனால் அந்தப் பிரர்ணனைத் தாங்கிய உடம்பு பொன்னாகும் என்றும்; இதற்கு மேலும் இம் மந்திரத்தைக் கும்பகம்[2] செய்ய வல்லாருக்கு இறைவனின் திருவடிப் பேறு சித்திக்கும் என்கிறார் திருமூலர்.

---

1. பூரகம் - மூச்சை உள்ளிழுத்தல்
2. கும்பகம் - மூச்சை உள்ளடக்குதல்

பெரும்பேறு:

இறைவனின் ஆனந்த நடனத் தரிசனத்தைக் காண செம்புத் தகட்டினில் யந்திரம் வரைந்து அட்சரங்களை மனைகளில் அடக்கி விட்டால் மட்டும் போதுமா? அந்த அற்புத சக்தி இறைவனின் திருநடனமாகக் காட்சியளிக்க 'சிவாயநம' என்ற திருவைந்தெழுத்தையும் ஓத வேண்டும். அப்படி ஓதும் பட்சத்தில் செம்பு பொன்னாகும். அஃதாவது திருவம்பலம் வரைந்துள்ள செம்புத் தகடு பொன்னம் பலமாகக் காட்சியளிக்கும். சொரூப நிலையில் இறைவன் பொன்னம்பலத்தில் ஆடும் ஆனந்தக் கூத்தை இப் பொன்னம் பலத்தின் கண்ணும் ஆடுவான். அரூப நிலையில் அந்த ஆனந்தத் தாண்டவத்தை சித்சபையாகிய புருவ நடுவுள் நாம் தரிசிக்கலாம் என்று கூறி இக்கூத்தின் தரிசனத்தால் கிடைக்கும் பயன்களையும் கூறிச் செல்கின்றார்:

இந்த ஆனந்த நடனத்தைத் தரிசிக்கும் பேறு பெற்றோர் ஆன்மாவுக்குரிய ஐவகை உடல்களுள் ஓர் உடலிலிருந்தே எல்லா இன்பங்களையும் நுகரலாம். நல்ல பெண்கள் விரும்பி உடன் வருவர். புத்திரப்பேறு உண்டாகும். ஆசாபாசங்க ளாகிறப் பாம்புகள் இவர்கள் சொன்னாலே நீங்கிப் போகும். ஆணவ மலம் நீங்கப் பெற்று ஆன்மா அறிவொளியைப் பெறும். இறைவனின் திருவடியே என்றும் தரிசிக்கச் சிவசாரூபமே எய்தலாம். இறைவனின் திருவடி மேல் ஆணை. இதுவே பொன்னம்பலத்தில் இறைவன் ஆடும் திருக்கூத்தின் இரகசியம் எனத் திருமூலர் சத்தியம் செய்கின்றார்.

4. தார பஞ்சாக்கரம்

செந்தமிழ்த் திருவைந்தெழுத்தாலாகிய 'சிவயநம' என்னும் திருக்கோயிலே இறைவன் உறையும் ஆலயம் ஆகும். இந்த 'சிவயநம' என்னும் ஐந்தெழுத்தும் பருமை, நுண்மை, மீநுண்மை, முதல், மாமுதல் என ஐவகைப்படும்.

பருமை 'நமசிவய' என்றும்; நுண்மை 'சிவயநம' என்றும்; மீநுண்மை 'சிவயசிவ' என்றும்; முதல் 'சிவசிவ' என்றும், மாமுதல் 'சிவ' என்றும் அழைக்கப்படும்.

இவற்றுள் பருமையாகிய 'நமசிவய' என்பதன் மேல் நுண்மையாக அறிகின்ற 'சிவயநம' என்பதைத் திருக்கோயிலாகக் கொண்டு இறைவன் அமர்ந்தான்.

இப்படி யந்திரக் கோயிலிலே அமர்ந்த இறைவனின் வடிவத்தையும் ஓர் ஓங்கார புருஷனாக வடிவமைத்து மந்திர எழுத்துக்களிலேயே கண், கால், முகம், உடல் முதலியன அமைத்து வழிபடுகின்றார். ஓங்கார நடுவில் சிவமும் நடுவட்டத்தில் 'நமசிவய' முகமுமாக அமைத்த நிலை இங்குப் புலனாகிறது. இதனையே அப்பர்

ஒருசுடராய் உலகேழு மானான் கண்டாய்
ஓங்காரத்துட் பொருளாய் நின்றான் கண்டாய்

என்று தம் திருத்தாண்டகத்தினுள் குறிப்பிட்டு வணங்குகின்றார்.

மகார நடுவே வளைந்திடுஞ் சத்தியை
ஓகாரம் வளைத்திட் டும்பீளந் தேற்றி
அகாரந் தலையாய் இருகண் சிகாரமாய்
நகரா வகாரநற் காலது நாடுமே.

-திருமந்திரம் 901



மகாரத்தை நடுவே வளைத்துள்ள சக்தி பீஜத்தை ஓகாரம் வளைத்து, மகாரத்தை உகாரத்தால் பிளந்து மேலேற்றி, யகாரம் தலையாகவும், சிகாரம் இரு கண்களாகவும், நகாரம், அகாரம் இரண்டும் இரு கால்களாகவும் கொண்ட தார பஞ்சாக்கரச் சக்கரம் இது.

திருவம்பலச் சக்கரத்துள் கூத்தனை மந்திர புருஷாகாரமாகக் காணும் இதில் அ + உ + ம் = ஓம் நமசிவய என்ற தார பஞ்சாக்கரம் அமைந்திருத்தலால் இஃது தார பஞ்சாக்கரச் சக்கரமாயிற்று.


5. பிரணவச் சக்கரம்

'ஓம்' என்ற பிரணவ மந்திரம் அகார, உகார, மகார, நாத, விந்து ஆகிய இவைகளின் கூட்டுறவால் விளைந்ததாகும். சிவபெருமானும் பிரணவ வடிவமானவன்.

'ஓ' என்னும் ஓரெழுத்தாலேயே உலகெங்கும் நிறைந்து நின்று; அகாரமும் உகாரமும் ஆகிய ஈரெழுத்தாலே சிவமும், சக்தியுமாகிய இருவராகப் பொருந்தி நின்று; அகார உகார மகாரமாகிய மூவெழுத்தாலே சிருஷ்டியின் முகமாய் காட்சியளிக்கின்ற ஒளிப்பிழம்பாகிய சிவத்தை ஓங்கார பிரணவச் சக்கரமாக அமைத்து அறிமுகப்படுத்துகின்றார் திருமூலர்.

நாடும் பிரணவ நடுவிரு பக்கமும்
ஆடு மவர்வாய் அமர்ந்தங்கு நின்றது
நாடு நடுவுண் முகநம சிவாய
வாடுஞ் சிவாயநம புறவட்டத் தாயதே.

-திருமந்திரம் 902



பிரணவத்தை நடுவாகக் கொண்டு இரு பக்கமும் சிவசக்திகளாய்ப் பிரிந்து நின்று தோற்றம் தந்து, 'வ', 'ய' என்னும் எழுத்துக்களை மேலும் கீழுமாகப் பொருந்தி, 'நம' என்பதைப் பாத எழுத்தாக உருக்கொண்டு, நடுவில் ஓங்கார நிலையும் 'நமசிவய' என்பது உள்வட்டமாயும் 'சிவயநம' என்பது புறவட்டமாயும் கொண்டு பிரணவ சக்கரம் அமைக்கப் படுகின்றது.

இதன்கண் ஓங்கார நடுவில் சிவமும், நடுவட்டத்தில் 'நமசிவய' முகமுமாக அமைத்தல் கூறப்பெறுகின்றது. இதில் நடுவில் முகம் 'நமசிவாய' என்பதும், புற வட்டத்துள்

ஆடுகின்ற 'சிவாயநம' சிவம் என்பதும், உள்வட்டத்துள் 'நமசிவய' ஆடுகின்ற சக்தி என்பதும் ஆக இங்கு புலப்பட்டு நின்றது.

உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா.... [1]

என்று மாணிக்கவாசகர் தம்முள்ளத்துள்ளே ஓங்கார ஒலியாய் இறைவன் ஒலித்துக் கொண்டிருக்கும் நிலையைச் சுட்டிக் காட்டுவது இங்கு திருமூலர் ஓங்கார பிரணவ சக்கரத்துள் இறைவனை அடைத்த தன்மையை ஒப்பு நோக்கிக் காணப்படுகிறது.

6. பஞ்சபூதச் சக்கரம்

'நமசிவய' என்பதே சிவ மூல மந்திரமாகும். இதில் 'சிவயநம' என்பதற்கு முன் 'ஹம்' என்னும் ஆகாய பீசமும், 'மசிவயந' என்பதற்கு முன் வாயு பீசமாகிய 'யம்' என்பதும், 'நமசிவய' என்பதற்கு முன் அக்கினி பீசமாகிய 'ரம்' என்பதும், 'யநமசிவ' என்பதன் முன் பிருதிவி பீசமாகிய 'லம்' என்பதும், 'வயநமசி' என்பதன் முன் அப்பு பீசமாகிய 'வம்' என்பதும் சேர்த்து பஞ்ச பூதச் சக்கரம் அமைத்தல் வேண்டும்.

இதில் சிகார வாச்சியனாகிய சிவன் ஆகாயம் போல் அனைத்தையும் தன்னகத்தே அடக்கி நின்றான். அதற்கு ஆகாய பீசம் அமைவதாயிற்று.

காற்று, நீர், தீ, ஆகாயம், மண்ணாகிய ஐம்பூதங்களுக்கு உரியவாகிய யம், வம், ரம், லம், ஹம் என்ற பீசங்கள் முயலும் எழுத்திற்கு முதலாக நின்றன.

---

1. திருவாசகம் - சிவபுராணம் - 33-34

இறைவன் எழுந்தருளியிருப்பது சக்தி பீசமாகிய 'ஹ்ரீம்' என்பதனுள். இறைவியாகிய சக்தி எழுந்தருளி இருப்பது சிவ பீசமாகிய 'சௌ' என்பதனுள். அவ்வண்ணம் இருவரும் ஒருவரில் ஒருவராகப் பொருந்தியிருத்தலால் சிவசக்தி பீசங்கள் இவையென்று அறியலாம்.

இவ்விதமாக அமைக்கப்படும் திருவம்பல ஐம்பூத சக்கரத்தின் கண் நில முதல் வான் ஈறாகக் கூறப்படும் பூதங்கள் ஐந்தினுக்கும் உரிய ய, ல, வ, ர, ய, அ ஆகியவைகள் ஏற்ற இடத்தில் அமைத்தல் வேண்டும்.


ஐந்தைந்து மனைகளாகப் பிரிக்கும் கோடுகளுக்கு நுனியில் சூலமும் அவற்றின் நுனியில் சக்தி எழுத்தாகிய ஹ்ரீம் என்பதும் இரு சூலங்களுக்கு இடையில் நாதமாகிய (:) விசர்க்கத்தையும் விந்துவாகிய (O) அநுஸ்வாரத்தை யும் கூட்ட வேண்டும். இதுவே பஞ்ச பூதச் சக்கரமாகும்.

எவ்வகை மந்திரங்களுக்கும் முதன்மை வாய்ந்ததாய், தலையாய்த் திகழும் திருவைந்தெழுத்துள் நடுவாய் விளங்குவது யகாரமாகும். இதனை முதலெழுத்தாக வைத்து ய, ந, வ, இடையெழுத்தாக வைத்து வ, ய, ந; ந, வ, ய என இறுதியில் வைத்தும் பஞ்சபூதச் சக்கரம் அமைக்கப்படுகிறது.

பரமாய அஞ்செழுத் துள்நடு வாகப்
பரமாய நவசிம பார்க்கில் மவயநசி
பரமாய சியநம வாம்பரத் தோதிற்
பரமாய வாசி மயநமாய் நின்றே -திருமந்திரம் 926

நின்ற எழுத்துக்கள் நேர்தரு பூதமும்
நின்ற எழுத்துக்கள் நேர்தரு வண்ணமும்
நின்ற எழுத்துக்கள் நேர்தர நின்றிடில்
நின்ற எழுத்துள்ளும் நின்றனன் தானே. -திருமந்திரம் 927

என்றும் நின்று நிலவும் திருவைந்தெழுத்தாலேயே ஐம்பூதங்களும் திகழ்வன. ஐம்பூதங்களுக்குரிய ஐந்து நிறங்களும் அவ்வைந்தெழுத்தாலே விளங்குவன.



இவ்வைந்தெழுத்துக்களும் முதன்மை பெற நின்றவிடத்து அவ்வெழுத்துக்களின் உள்ளீடாய் நின்று செலுத்துபவன் சிவபெருமான்.

அந்தச் சிவபெருமானை ஐம்பூத தரிசனமாக இச்சக்கரத்தினுள் தரிசிக்கலாம் என்று திருமூலர் கூறுகின்றார்.

7. ஆலமுண்டானது ஐம்பத்தோரெழுத்துச் சக்கரம்

விந்து சுழி வடிவானது (0). நாதம் (-) நேர்கோட்டு வடிவானது. இந்த விந்துவும் நாதமும் இணையும்போது 'உ' ஆகிறது. 'உ' சக்தியட்சரம் விந்து நாத இணைப்புச் சக்தியே அட்சரங்களாக எழுத்துக்களாக அமைகின்றன.

இந்த எழுத்துக்கள் ஒளி எழுத்துக்களாக, சிவனின் வடிவங்களாக, மூல முதல் புருவ நடு ஈறாகவுள்ள ஆறு ஆதாரங்களிலும் நிலை கொண்டுள்ளன. இவையே ஒலி எழுத்துக்களாக, சக்தியின் வடிவங்களாக, பிரணவத்துடன் இணைந்து பிரபஞ்சமெங்கும் ஓசைகளாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. இந்த ஓசைகள் மொத்தம் ஐம்பத்தொன்று. இதுவே ஒலியின் வேத இரகசியமாகும்.

இந்த சக்தியின் மந்திர வடிவத்திற்கு அவரவர் மனம் போன போக்கிற்கு விளக்கங்கள் அளிக்கின்றனர். விளக்கங்கள் வடிவம் பெறும்போது குழப்ப நிலையே உண்டாகிறது.

மந்திரங்களுக்கெல்லாம் முதலாக ஓதப்படும் ஓங்காரத்துடன் ஏனைய உயிரெழுத்துப் பதினைந்துங் கூட மொத்தம் உயிரெழுத்துப் பதினாறு மெய்யெழுத்து முப்பத்தைந்து ஆக மொத்தம் எழுத்து ஐம்பத்தொன்று[1].

முதற்கண் அக்காத்தலாகிய தொழில் ஒன்றினாலேயே ஓதப்படும் எழுத்தாகிய அகரம் அதனோடு, உயிர்க்கலை மூவைந்து முதல் வரையுள்ள பதினைந்தெழுத்துக்கள் ஓதும் எழுத்தோடு உயிர்க்கலை மூவைந்து முதல் வரை யுள்ள பதினாறு எழுத்துக்கள்.

1. திருமூலர் காலத்தில் தமிழ்மொழியில் உயிர் எழுத்துக்கள் பதினாறும் மெய்யெழுத்துக்கள் 35ம் இருந்தனவாகத் தெரிகிறது. திருமந்திரம் - கழக வெளியீடு.

உயிர் எழுத்து கலை என்று குறித்து இவ்வைம்பத்தொரு எழுத்தினை திருமூலர் குறிப்பிடுகின்றார்.

ஓதும் எழுத்தோ டுயிர்க்கலை மூவைந்தும்
ஆதி எழுத்தவை ஐம்பதோ டொன்றென்பர் -திருமந். 942

முதற்கண் ஓதப்படும் எழுத்தோடு உயிர் எழுத்துக்கள் பதினைந்தும் முதல் எழுத்துக்களாகிய மெய்யெழுத்துக் களோடும் பிரணவத்தோடும் கூட ஐம்பத்தோரக்கரமாம் என்பர்.

உயிர் எழுத்துக்கள் பதினாறு கலைகள் என்று குறிப்பிட்டதாவது. உயிர் ஒன்றும், ஐவர்க்கம் ஐந்தும், ய, , , வ, ஷ, , ஹ, க்ஷ, ஓம் என்பவை ஒவ்வொன்றாகப் பத்தும் ஆக பதினாறு ஆகும். இஃது ஞான விளக்கம் செய்தலின் கலை என்று குறிப்பிட்டனர்.

குண்டலினி யோகத்தால் மூலாதாரத்தில் 4 இதழ்களும் சுவாதிட்டானத்தில் 6 இதழ்களும், மணி பூரகத்தில் 10 இதழ்களும், அநாகதத்தில் 12 இதழ்களும், விசுத்தியில் 16 இதழ்களும், ஆக்ஞையில் 3 இதழ்களும் ஆக ஐம்பத்தொன்று இதழ்கள் உள்ளன. இவ்விதழ்களில் ஏற்படும் 51 அதிர்வுகளே 51 ஒலிகள்.

உயிரெழுத்து	12
க, ச, ட, த, ப வரிசை 4 (4 x 5)	20
ங, ஞ, ண, ந ஒவ்வொன்று (1 x 4)	4
ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன	9
வடசொல்	5
	50

ஆக அட்சரங்கள் இவை அனைத்தும் தோன்றும் பிரணவமாகிய ஓம் என்னும் எழுத்துடன் அட்சரங்கள் ஐம்பத்தொன்று ஆகின்றன.

ஆறு ஆதாரங்களில் முதலாவதான மூலாதாரத்தில் பிரணவ ஒலி தோன்றும் என்றும், மற்ற ஐந்து ஆதாரங்களில் மற்ற ஐம்பது ஒலி தோன்றும் என்றும் கூறுவர்.[1]

இந்த ஐம்பத்தோரக்கரத்தையும் ஒரு சக்கரத்துள் அடக்கி அதன் மந்திர வலிமையாலே இறைவனாகிய சிவபெருமானை திருநடனமிட வைக்கிறார் திருமூலர்.

அடைவினில் ஐம்பதும் ஐயைந் தறையின்
அடையும் அறையொன்றுக் கீரெழுத் தாக்கி
அடையு மகாரத்தில் அந்தமாம் க்ஷவ்வும்
அடைவின் எழுத்தைம்பத் தொன்றும் அமர்ந்ததே.

அமர்ந்த அரகர வாம்புற வட்டம்
அமர்ந்த அரிகரி யாமத னுள்வட்டம்
அமர்ந்த அசபை யாம்அத னுள்வட்டம்
அமர்ந்த இரேகையும் ஆகின்ற சூலமே.

சூலத் தலையினில் தோன்றிடுஞ் சத்தியுஞ்
சூலத் தலையினில் சூழும்ஓங் காரத்தால்
சூலத் திடைவெளி தோற்றிடும் அஞ்செழுத்து
ஆலப் பதிக்கும் அடைவது வரமே.


அதுவாம் அகார இகார உகாரம்
அதுவாம் எகாரம் ஒகாரம தைந்தாம்
அதுவாகுஞ் சக்கர வட்டமேல் வட்டம்
பொதுவாம் இடைவெளி பொங்குநம் பேரே.

-திருமந்திரம் 904-907.

குறுக்கும் நெடுக்குமாக ஆறு கோடுகளைக் கீறி இருபத்தைந்து அறைகள் கொண்ட யந்திரம் ஒன்றை வரைந்து, அதில் அறைக்கு இரண்டு எழுத்துக்களாக ஐம்பது

---

1. சித்தர்கள் கண்ட இறைமை - சி.எஸ். முருகேசன் பக்.23



எழுத்துக்களையும் அடக்கி, இவ்வறைகளை அடக்கிய பெரு எழுத்தாக ஓங்காரத்தை வரைய வேண்டும். இதுவே ஐம்பத்தோரெழுத்துக்களையும் அடக்கிய முறையாகும்.

இதில் அறைகளமைக்க உதவிய ரேகைகளில் சூலமும், அவற்றின் நுனியில் சக்தி எழுத்தாகிய 'ஹ்ரீம்' என்பதும், சூலத்தைச் சுற்றி வளைத்து அமைக்கப்பட்ட ஓங்காரத்தை

அடுத்து 'சிவ சிவ' என சிவாக்கரமத்தையும் அதனைச் சூழ்ந்து 'ஹம் ஸம்' என்றும் அதனை யடுத்த வெளிவட்டத்துள் 'ஹரி, ஹரி' எனவும் அதனையுமடுத்த வெளிப்புற வட்டத்தில் 'ஹர, ஹர' என்று அமைத்து சூலங்களுக்கு இடையில் திருவைந்தெழுத்தும் அமைக்க வேண்டும்.

இதுவே ஆலமுண்டபதிக்கு அடைவாகிய இடமாம் என்று ஆலமுண்டானது ஐம்பத்தோரெழுத்துச் சக்கரத்தை அறிமுகப்படுத்தி வைக்கிறார் திருமூலர்.

இம் மந்திரச் சக்கரத்துள் ஓங்காரத்தை அடுத்துள்ள 'சிவ சிவ' என்ற முதல் அட்சர வட்டம் சிவனும் சிவையும் கூடும் அந்தரார்த்ம நிலையை விளக்கி நின்றது.

விட்ட எழுத்தை விடாத எழுத்துடன்
கட்டவல் லாருயிர் காக்கவல் லாரே

-திருமந்திரம் 898

சிவனும் சிவையும் பிரிப்பின்றி ஒட்டியுறையும் வழிவகை யறியின் விட்ட எழுத்தாகிய 'வ' விடாத எழுத்தாகிய 'சி' இவ்விரண்டினை இணைத்து 'சிவ'என்றும் செந்தமிழ்த் தனி மறையினை இடையறாது கணிக்க வல்லார் தம்முயிர் திருவடியிற் கூடிப் பேரின்பம் எய்தும் நிலையினைப் பேண வல்லவராவர் என்றுமுதல் வட்டத்திற்கு விளக்கமளிக்கிறார் திருமூலர்.

இரண்டாவது வட்டத்துள் அமைக்கப்பட்டது. அசபா மந்திரமாகிய ஸோஹம், ஹம்சம் என்னும் அட்சரங்களாகும்.

உயிருக்கும் இறைக்கும் மேனியாக உள்ள ஹம், ஸம் என்னும் மந்திரங்களை ஸோஹம், ஹம்ஸம் என எது முந்தியது எது பிந்தியது என்று விளங்காதபடி ஜெபிக்க வேண்டும். இப்படி விளங்காமல் விரைந்து செபிக்க பசு போதங் கெட்டுப், பதி போதம் மிக்கு பொருந்துவதால் சீவத்தும் நீங்கச் சிவத்தும் எய்தும் நிலை உணர்த்தப் பெறுகின்றது.

உயிருக்கும் இறைக்கும் மேனியாக உள்ள ஹம் ஸம், ஸோஹம் இரண்டும் ஊ, ஆ, ஈ, ஏ, ஓ என்னும் திருவைந்தெழுத்தின் பீசங்களாகும். அவையே ஈ, ஓ, ஊ, ஆ, ஏ என மேனியாகித் திருக்கூத்து நிகழ்த்தும் அற்புதத்தையும் திருமூலர் இங்கு அமைத்தார் போலும்.

மேனி யிரண்டும் விலங்காமல் மேல்கொள்ள
மேனி யிரண்டுடு மிக்கார் விகாரியா
மேனி யிரண்டும்-ஊ- ஆ -ஈ-ஏ-ஓ என்னும்
மேனி யிரண்டும்-ஈ- ஓ-ஊ-ஆ -ஏ- கூத்தாமே.

-திருமந்திரம்-891

இதே அசபை மந்திர விளக்கத்தை வேறொரு பாட்டினிலும் திருமூலர் விளக்கமாக எடுத்துரைக் கின்றார்.

ஏழா யிரமாய் இருபதாய் முப்பதாய்
ஏழா யிரத்தும் எழுகோடி தானாகி
ஏழா யிரத்துயிர் எண்ணிலா மந்திரம்
ஏழா யிரண்டாய் இருக்கின்ற வாறே.

-திருமந்திரம் 879

இருக்கின்ற மந்திரம் ஏழா யிரமாம்
இருக்கின்ற் மந்திரம் இத்திறம் இல்லை
இருக்கின்ற மந்திரம் சிவன்திரு மேனி
இருக்கின்ற மந்திரம் இவ்வண்ணந் தானே

-திருமந்திரம் 880

என்று இறைவன் திருமேனி அம்ச மந்திரங்களாய் விளங்கும் தன்மையை உணர்த்துகின்றார்.

இருபதாய், முப்பதாய் என்றது ஐம்பது அட்சர மந்திரங்களை, ஏழாயிரத்து உயிர் எண்ணிலா மந்திரம் - இந்த ஏழாயிரத்தும் கணக்கற்ற ஜீவனாயுள்ள மந்திரம்.

ஏழாய் - சப்த கோடி மகா மந்திரங்களாய், இரண்டாய் - சோ ஹம் என்ற இரண்டு மந்திரங்களாய் இருக்கும் இம் மந்திரங்களைக் காட்டிலும் சிறந்த மந்திரங்களில்லை என்று சிவபெருமானுடைய திருமேனியே மந்திர அட்சரங்களின் விளக்கவுரை என்று திருமூலர் கூறி அசபா மந்திரத்தை விளக்கமுறை வைக்கின்றார்.

மந்திரமே இறைவனுக்குத் திருமேனி என்பதை,

சுத்தமாம் விந்துத் தன்னில் தோன்றிய வாதலானும்
சத்திதான் பிரேரித் துப்பின் தானதிட் டித்துக் கொண்டே
அத்தினாற் புத்திமுத்தி யளித்தலால் அரனுக் கென்றே
வைத்தவாம் மந்திரங்கள் வடிவென மறைக ளெல்லாம்

என வரும் சித்தித் திருவித்தத்தாலும் உணரலாம்.

'ஹம்' என்பது உயிரையும் 'ஸ' என்பது சிவத்தையும் உணர்த்துவன. உயிர் இறையொளியில் அடங்கி இருக்குமானால் இறைவனுடைய பிரணவ பஞ்சாக்கர வடிவுகள் அனுபவ சித்தியாம் என்று விளக்கமுற வைக்கின்றார்.

படுவ திரண்டும் பலகலை வல்லார்
படுவதோங் காரம் பஞ்சாக் கரங்கள் -திருமந்திரம் 873

இதில் பலகலைகளைத் தரிசித்து வல்லவராகிய அனுபவ ஞானிகளால் சொல்லப்படுவன 'ஹம்', 'சம்' என்னும் மந்திரங்களுள் இரண்டு மட்டுமே என்றும் அங்ஙனமே அசபாத் தியானத்தால் விளைவன் பிரணவமும், பஞ்சாக்கராதிகளுமாம் என்று விளக்கம் புகுந்தார்.

இதனை அடுத்துள்ள வட்டத்தில் அரிகரி, ஹரி ஹரி என்ற அட்சரம் மந்திர விளக்கமாய் சூழ்ந்துள்ளது. இஃது சத்தியின் பீஜ மந்திரமாய் சிவை நடனத்தை உணர்த்தி நின்றது.

அடுத்துள்ள புற வட்டத்தில் ஹர ஹர என்ற சிவன் திருப்பெயரே அட்சரமாக அமைக்கப்பட்டுள்ளது. இஃது முக்தி நிலை திரும்பலச் சக்கரத்துள் இறைவனது தரிசனத்தைக் கண்டபின் அப்பேறு பெற்ற பயனால் அமரராகி முக்தி எய்துவர் என்பதை குறிப்பால் உணர்த்தி அமைத்தனர் போலும். இதனைத் தமது திருமந்திரப் பாட்டில்

அரகர என்ன அரியதொன் றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும்பிறப் பன்றே

-திருமந்திரம் 896

முக்தி மந்திரமாக திருமூலர் குறித்துச் செல்கிறார். அரகர என்றால் அமரராகலாம். பிறப்பை அறுக்கலாம். முக்தி எய்தலாம் என்று கூறும் முகத்தான் இந்த ஐம்பத்தோரட்சர சக்கரத்திற்குரிய மூல மந்திரத்தையும் குறிப்பால் உணர்த்தி வடிவமைத்துள்ளார் திருமூலர்.


8. அகார பீட இலிங்கச் சக்கரம்

அகார எழுத்தைப் பீடமாக இட்டு, 'ஹர' என்பதனை அதன் மேல் வைத்து அதற்கும் மேல் இகாரத்தைப் பொருத்திப் பார்த்தால் இலிங்க வடிவாக இருக்கும்.

இந்நிலையில் அகாரத்தினைக் கபாலத்தில் பிராண வாயுவோடு பொருந்தச் செய்தால் தகராகாயத்தில் பிரணவ வடிவாய்ச் சுடர்க் கொழுந்தாய் விளங்குகின்ற சிவம் வெளிப்பட்டுத் தோன்றும் என தகராகாயத்தில் பிரணவ சொரூபமான சிவம் இருக்கும் நிலையைக் குறித்து அதனையே யந்திரமாக வரைந்தும் காட்டுகின்றார் திருமூலர்.

அவ்விட்டு வைத்தங் கரவிட்டு மேல்வைத்து
இவ்விட்டுப் பார்க்கில் இலிங்கம தாய்நிற்கும்
மவ்விட்டு மேலே வளியுறக் கண்டபின்
தொம்மிட்டு நின்ற சுடர்க்கொழுந் தாமே.

-திருமந்திரம் 912



திருவருட் குறியாம் சிவலிங்கத்தின் சிறப்பு அருவம், உருவம் என்னும் இரண்டும் கலந்த நிலை, இதனை 'அருவுருத் திருவுரு' என்று சிறப்பித்துக் கூறுவர்.

இந்தத் திருவடிவம் அடிப்பகுதியில் 'அ' எனவும் நடுப்பகுதியில் 'அர' (ஹர) எனவும் முடிப் பகுதியில் 'இ' எனவும் எழுத்துருவில் சக்கரமாக அமைத்துக் கொள்ளும் நிலை இங்கு விளக்கம் பெறுகின்றது.

அ என்பது அறிவினையும், ஹர என்பது தொழிலினை யும் இ என்பது இன்பத்தினையும் குறிக்கும்.

மகரத்தையிட்டு உச்சித் தொளையின்கண் உயிர்ப்புச் செல்லுவதை உணர்ந்தபின் அவ்விடத்துத் 'தொம்தோம்' என்று இறைவன் திருக்கூத்தியற்றும் காட்சியைக் காண முடியும். தோம் என்பது தமிழ் ஓம். இதனைத் தகர ஓங்காரம் என திருமுறைகள் சிறப்பித்துக் கூறும். இறைவன் தகர ஓங்கார ஒலிக்கேற்ற திருக்கூத்தை இச்சக்கரத்தில் நிகழ்த்தும் திறம் வடிவமைக்கப் பட்டுள்ளது.


9. சாம்பவி மண்டலச் சக்கரம்

தன்னந்தனியாக அகார பீட இலிங்கமமைத்த திருமூலர் அந்த இலிங்க வடிவினையே சக்கரத்துள் அமைத்து இறைவனின் திருநடனக் காட்சியைக் காண அழைத்தார்.

சாம்பன் என்றால் சிவன். சாம்பவி என்றால் சக்தியோடு இயைந்த நிலை. அஃதாவது சிவசக்தி நிலை. அம்மையப்பராக விளங்கும் ஆற்றலே சாம்பவி. சிவலிங்கத் திருமேனியில் பாணமாகிய சிவமும் பீடமாகிய சக்தியும் விளங்குவதாய் இவ்விரண்டும் கூடிய சிவலிங்கத் திருமேனி நிறைந்துள்ள சக்கரம் சாம்பவி சக்கரமாகும்.

இந்த சாம்பவிச் சக்கரத்தை அமைக்க எட்டெட்டு கட்டங்கள் மேலும் கீழும் வரும்படியாக (8x8=64) கட்டங்களைச் சம சதுர அளவில் வரைந்து விந்து, நாதம், சக்தி, சிவம் என்னும் மையப் பகுதியில் வரும் நான்கு கட்டங்களில் எட்டிதழ் தாமரையை வரைந்து கொண்டு பின்னர் மொத்தமுள்ள 64 கட்டங்களையும் 4x4=16 சிறிய கட்டங்கள் வரும்படியான நான்கு பெரிய சம பகுதிகளாகப் பிரித்து அதில் நான்கு சிவலிங்கங்கள் (தலைகீழாக இரண்டும் நேராக இரண்டும்) வரும்படி வரைதல் வேண்டும்.

இதில் திரிபு முதலிய வேறுபாடுகள் அகல வடக்கு, தெற்கு ஆகிய இருபுறங்களிலும் இரண்டு 2x3 உள்ள நீள வட்ட கட்டங்களை வீதிகளாக விட வேண்டும். இந்நிலையில் சிவலிங்க அமைப்பானது, வடக்குத் தெற்காக இரண்டும், தெற்கு வடக்காக இரண்டும் நான்கு சிவலிங்கங்கள் ஒன்றின் தலையில் ஒன்றை இடித்துள்ள நிலையில் காணப்படும்.



சாம்பவி மண்டலச் சக்கரஞ் சொல்லிடில்
ஆம்பதம் எட்டாக விட்டிடின் மேலதாங்
காண்பதந் தத்துவ நாலுள் நயனமும்
நாம்பதங் கண்டபின் நாடறிந் தோமே.

-திருமந்திரம் 1273

இவ்விதம் அமைக்கப்பட்ட சாம்பவி மண்டலச் சக்கரத்தை முறையாக வழிபாடு செய்பவர்க்கு இந்த உலகம் முழுவதும் அறியப்படுகின்ற பெரிய கீர்த்திக் கிட்டும்.

10. சுவஸ்திகா சாம்பவி மண்டலச் சக்கரம்


சாம்பவி மண்டலச் சக்கரத்தையே சில உரையாசிரியர்கள் சுவஸ்திகா சக்கர அமைப்பிலும் விளக்கம் அளிக்கின்றனர்.

முதலில் கூறியவாறே சாம்பவி மண்டலச் சக்கரத்தை வரைந்து கொண்டு, நடுவிலும் அவ்விதமே எட்டிதழ் தாமரையை அமைத்து பின்னர் அனைத்துக் கட்டங்களையும் நான்கு பெரிய சம சதுரக் கட்டங்களாகப் பிரித்து சிவலிங்கங்களையே வீதிகளாக அமைத்தல் வேண்டும்.

முதல் சிவலிங்க ஒளி வீதி, தலைத் தெற்குப் பகுதியாக வடமேற்கு மூலையிலும், இரண்டாம் சிவலிங்க ஓசை வீதி தலை மேற்குப் பகுதியாக வட கிழக்கு மூலையிலும், மூன்றாம் சிவலிங்க சிவை வீதி தலை வடக்குப் பகுதியாகத் தென் கிழக்கு மூலையிலும், நான்காம் சிவலிங்க சிவ வீதி தலைக் கிழக்குப் பகுதியாகத் தென்மேற்கு வீதியிலும் காணப்படும். இஃது சுவஸ்திகா சிவலிங்க வீதி அமைப்பாகும்.

நாடறி மண்டலம் நல்லவிக் குண்டத்துக்
கோடற வீதியுங் கொடர்ந்துள் இரண்டழி
பாடறி பத்துடன் ஆறு நடுவீதி
ஏடற நாலைந் திடவகை யாமே.

-திருமந்திரம் 1274



இப்படி இந்த சுவஸ்திகா சிவலிங்க அமைப்பை முறைப்படி தியானித்து வழிபடுபவரின் நெஞ்சத்தில் இறைவன் நினைத்தவுடன் தோன்றி சிறப்பளிப்பான்.

11. சாம்பவி மண்டல மந்திரச் சக்கரம்

சாம்பவி மண்டலச் சக்கரத்தை மந்திர அட்சரங்கள் நிறைந்த சாம்பவி மண்டல மந்திரச் சக்கரமாகவும் வடிவமைத்துக் காட்டுகின்றார் திருமூலர்.

இரண்டு பக்கங்களிலும் வீதிகள் அமைத்துச் சிறந்ததாகக் காணப்படும் எட்டிதழ் நடுவிலுள்ள பதினாறு வீதிகளுள் இதழ்கள் அகல நான்கு புறமும் இருபது பதமுள்ள மண்டலம்.

அதில் நடுவிலுள்ள நாலு வீதிகளில் நல்ல இலிங்க வடிவாயும் நூறு நற்கோணங்களிலும் நந்நான்கு இலிங்கமாயும் அவற்றின் இடைவெளியாகிய நற்கோணங்களிலும் நாலிதழ் பூக்கள் நாலும் நடுவிலும் அவ்விதமே நாலிதழ் பூவொன்றை பொருத்த வேண்டும்.

முதற் சுற்றில் ஒரு பதத்தில் ககாரம் முதல் க்ஷகாரம் வரையுள்ள முப்பத்தைந்து மெய்யெழுத்துக்களையும் சிவாயநம என்பதையும் வலமாக எழுதி அமைக்க வேண்டும்.


ஒவ்வொரு சிவலிங்கத்திலேயும் 'சிவயநம' என்ற அட்சரங்களை இடுவதுடன் அந்த மந்திரத்தை முறையுடன் உச்சரிக்கவும் வேண்டும் என்று சாம்பவி மண்டல அட்சரச் சக்கரத்தை திருமூலர் அறிமுகப் படுத்துகின்றார்.

இந்த சாம்பவி மந்திரமாம் சிவயநம என்பதை யாரும் ஓதலாம். இந்த மந்திரத்தைச் செபிக்கத் தக்கார் தகாதார் என வேறுபாடு இல்லை. யாரும் செபிக்கலாம். அதனால் விளைவது ஆனந்த வடிவாம்.

நாலைந் திடவகை யுள்ளதோர் மண்டலம்
நாலுநல் வீதியுள் நல்ல இலிங்கமாய்
நாலுநற் கோணமும் நந்நால் இலிங்கமாய்
நாலுநற் பூநடு நண்ணலவ் வாறே.

ஆறிரு பத்துநா லஞ்செழுத் தஞ்சையும்
வேறுரு வாக வீளைந்து கிடந்தது
தேறி நிருமல சிவாய நமவென்று
கூறுமின் கூறிற் குறைகளும் இல்லையே.

-திருமந்திரம் 1275-1276



சாம்பவி மண்டலத்தைப் பணிந்தவர்களிடம் பகையில்லை என்றும், நகைப்பிற்கு உரிய நிகழ்ச்சிகளும் உள்வாகா. நாடோறும் நன்மைகள் உண்டாகும். தீவினைகளும் அவற்றால் விளையும் மாறுபாடுகளும் இல்லை. இம்மந்திரத்தை உருவேற்றியவர் தாமும் பலரறியும் நறுமணம் போன்று மேன்மையுறுவர் என்று சாம்பவி மந்திரமான திருவைந்தெழுத்தின் பெருமையை திருமூலர் குறிக்கின்றார்.

12. மந்திரமேனிச் சக்கரம்

இறைவன் நாம் செய்த இருவினைக்கு ஈடாகத் தானாகவே எண்ணிப் பார்த்து இப்பிறவியைத் தந்தார். எடுத்த இம்மானிடப் பிறவியிலே நாம் மெய்ஞானம் பெற்ற மறையவனாக நடத்தல் வேண்டும். அப்படி நடப்பவர்கள் திருவைந்தெழுத்தைத் தியானிக்கப் பெற்ற புண்ணிய விசேடத்தால் அஞ்செழுத்து வடிவான மறையவனே ஆவார். அதாவது திருவைந்தெழுத்தை ஓதுபவர் அதன் வடிவமே ஆன சிவமே ஆவார்.

இறைவனுடைய திருவடிகள் இரண்டும் அந்நகாரமாய் நிலைபெறும். நாபிச் சுழியுள் அவ்விடத்தே மகாரம் பொருந்துவதாம். சிகாரம் இரண்டு தோளாய் வகாரத்தை வாயாகக் கண்ட பிறகு இறைவன் திருமுடிக்கண் விளங்குகின்ற அச்சுடர் யகாரத் தன்மையை உடையதாக விளங்கும்.

ஆகின்ற பாதமு மந்நவாய் நின்றிடும்
ஆகின்ற நாபியுள் அங்கே மகாரமாம்
ஆகின்ற சீயிரு தோள்வவ்வாய்க் கண்டபின்
ஆகின்ற வச்சுடர் யவ்வியல் பாமே.

-திருமந்திரம் 921

அவ்வியல் பாய இருமூன் றெழுத்தையுஞ்
செவ்வியல் பாகச் சிறந்தனன் நந்தியும்
ஒவ்வியல் பாக ஒளியுற நோக்கிடிற்
பவ்வியல் பாகப் பரந்துநின் றானே.

-திருமந்திரம் 922

மந்திர வடிவாகிய இறை வனே வேதமாயும் விளங்குகின்றான். அந்த வேதத்தில் சீபஞ்சாக்கரமாகிய ஆறெழுத்தையும் தமக்குத் திருமேனியாகக் கொண்டு

மந்திரமேனிச் சக்கரம்



செம்மையாகிய இல்போடு சிவ பரம்பொருள் விளங்குகின்றான், அந்த ஓங்கார சொருபத்தை ஓங்காரமாகிய பிரணவத்தின் தன்மையாக ஒளி பொருந்தத் தியானிக்கின் அவன் அக்கரங்களாலான பாவின் தன்மையாயும் பரந்து நின்றான்.

அதாவது பாவடிவாகிய வேதத்தை மந்திரமே வடிவான மகேசுரனை பிரணவ வடிவாக எண்ணினால் அவனே வேத வடிவாகவும் தென்படுவான் எனத் திருமந்திரம் தெரிவிக்கின்றது.

13. யகார மையச் சக்கரம்

என்றும் நின்று நிலவும் 'சிவயநம' என்னும் திருவைந்தெழுத்தாலேயே ஐம்பூதங்களும் நிகழ்வன. அந்த ஐம்பூதங்களுக்குரிய ஐந்து நிறங்களும் அவ்வைந் தெழுத்தாலேயே விளங்குவன. இவ்வைந் தெழுத்துக்களும் முதன்மை பெற நின்ற இடத்து அவ்வெழுத்துக்களின் உள்ளீடாய் நின்று செலுத்துபவன் சிவபெருமான். அந்தச் சிவபெருமானின் திருமந்திரமாம் 'சிவயநம' என்னும் முதன்மை வாய்ந்த திருமந்திரத்துள் நடுவாய் விளங்குவது யகரமாகும்.


இவ்வெழுத்தை ய நமசிவ, மவயநசி, சியநமவ, வசியநம என நான்காகக் கணிக்கப்படும். இவ்விதம் எழுத்துக்களை நிலைமாறிக் கணித்தல் பொருளுண்மை நன்கு புலனாய்ப் பதிதற்கே யாம் என்று யகாரமைய சக்கரம் அமைத்தற்கு அமைதி கூறுகின்றார் திருமூலர்.

பரமாய அஞ்செழுத் துள்நடு வாகப்
பரமாய நவசிம பார்க்கில் மவயநசி
பரமாய சியநம வாம்பரத் தோதிற்
பரமாய வாசி மயநமாய் நின்றே -திருமந்திரம் 926

இறைவனின் உடுக்கை வடிவில் யகாரத்தை மையமாக வைத்து இருபத்தைந்தறைச் சக்கரத்தை 'சிவயநம' என்று எழுத்துக்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு நடுவாகப் பாவித்து மத்தியில் யகரம் அமைந்த யகாரமையச் சக்கரத்தை இங்கு அறிமுகப்படுத்துகின்றார்.

குறுக்கு நெடுக்குப் பாதைகளை நாற்புறமும் அமைத்து அதில் நாற்பத்தெட்டாம் எழுத்தாகிய 'ஸ' என்பதின்மேல் ஆறாம் எழுத்தாகிய ஊ காரத்தையும் பதினாலாம் எழுத்தாகிய ஔகாரத்தையும் ஏறிட்டு அதன் மேல் விந்துவாகிய (O) அநுஸ்வரத்தையும் நாதமாகிய (:) விசர்க்கத்தையும் கூட்டிச் சீறவிட்டு, நிலைபெற்று சிவாயநம என்று செபிக்க மும்மலங்களும் பிளந்து கூவிக் கொண்டு ஓடும் என்று

இச்சக்கரத்தின் பாதை எழுத்துக்களை விவரிக்கின்றது திருமந்திரம்.



மேலும் இறைவன் எழுந்தருளியிருப்பது சக்தி பீசமாகிய ஹ்ரீம் என்பதனுள். பெண்ணினல்லாளாகிய எம்பிராட்டி எழுந்தருளியிருப்பது சிவ பீசமாகிய 'சௌ' என்பதனுள். இவ்விதம் இச்சக்கரத்துள் ஒருவருள் ஒருவர் பொருந்தியிருக்கும் வகையையும் கூறி, இவ்வைந்து சக்கரங்களையும் நன்னான்கு சூலங்களால் இணைத்து இரண்டு வெளிவட்டக் கோடுகளிலிருந்து இறைவனை அடைய இராஜ கோபுரங்களையும் அமைக்கின்றார்.

இந்த யகரார மையச் சக்கரத்தைச் சற்று உற்று நோக்குவோமானால் ஒரு சிவாலயத் தோற்றத்தினை நினைவூட்டும் உள் பிரகாரங்களும் வெளிப்பிரகாரங் களுமாக அமைந்த மிகப் பெரிய சிவாலயத் தோற்றமாக வடிவமைக்கப் பட்டுள்ளது நன்கு புலனாகும்.

14. உள்ளொலிச் சக்கரமும் அக வழிபாட்டுச் சக்கரமும்

எங்கும் பரவியுள்ள பூமியெல்லாவற்றிலும் நிலை பெற்றிருக்கும் திருவம்பலச் சக்கரத்தையே தமது நிலைக் களனாகக் கொண்டு நின்ற இறைவனை ஆவின் கன்றாகத் தனது உருமறைந்த நந்தியெம் பெருமான் தியானித்துக் கயிலையங்கிரி காவற்றலைமை பூண்டார்.

திருவம்பலச் சக்கரத்தால் பெறப்படும் நன்மைகள் பல. அவற்றுள் சிறந்தன படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலாகும் இருபத்தைந்து அறைகொண்ட இச் சக்கரத்தினுள்ளே ஐவகைத் திருமேனிகளும், ஐந்து எழுத்துக்களும் இறைவனுடைய நடனங்களும் அடங்கியுள்ளன.

அந்த நடனத் திருவுரு கீழிருந்து மேல் நோக்கினால் 'நமசிவய' எனவும், மேலிருந்து கீழே நோக்கினால் 'சிவயநம' எனவும் தோற்றமளிக்கும்.

திருவம்பலமாகிய பரவெளியில் சக்கரக் கீற்றுகளில்லை. திருவம்பலச் சக்கரத்துள் கீற்றுகள் உண்டு. குற்றமற்ற உகரம் தீயின் அடையாளம். நெளிவு சேர்ந்த கோடு ஒளியாகிய விந்து வாகும், நெளிவில்லாத நேர்கோடு ஒலியாகிய நாதமாகும். இவற்றைத் தெளியும்போது சிவ என்னும் மந்திரம் உருப்பெறும்.

இந்தத் திருவம்பலச் சக்கரத்தினுள் இடப்படும் அகர உகரம் ஓங்காரத்தைக் குறிக்கும். சிகர வகரம் திருவைந் தெழுத்தைக் குறிக்கும். இவை 'ஓம் நமசிவய' எனவாகும். இவற்றை **ஆறெழுத்து மந்திரம்** என்பர். இந்த **சிவசிவ** என்னும் மந்திரத்தை இந்தத் திருவம்பலச் சக்கரத்துள் இடையறாது ஓதி வழிபடின் அங்கு ஓங்கார முதற் பொருளாகிய

சிவபெருமான் தோன்றியருளுவான் என்று திருவம்பலச் சக்கர அமைப்பைக் கூறும் திருமூலர், இந்தத் திருவம்பலச் சக்கரத்தினை இரண்டு விதமாக வடிவமைத்துக் காட்டுகின்றார்.

பன்னிரண்டு சூலங்களைக் குறுக்காகவும், பன்னிரண்டு சூலங்களை நெடுக்காகவும் அமைத்து, நடுவே பிரணவத்தை அமைத்து அதனுள்ளே ஔவும் சவ்வுமாய் வடிவமைப்பது ஒருவகை. இதனை உள்ளொலியந்திரம் என்று கூறுகின்றார்.

பரமாய அஞ்செழுத் துள்நடு வாகப்
பரமாய நவசிம பார்க்கில் மவயநசி
பரமாய சியநம வாம்பரத் தோதிற்
பரமாய வாசி மயநமாய் நின்றே.

ந	உ	ஶி	வ	ய	ஶி	உ	வ	ய	ந	ஶி
ய	ந	வ	ஶி	உ	வ	ஶி	ய	ந	உ	வ
உ	வ	ய	ந	ஶி	ய	வ	ஶி	உ	ய	ந
ஶி	ய	ந	உ	வ	ந	ந	உ	ஶி	வ	ய
வ	ஶி	உ	யு	ந	உ	ய	ந	வ	ஶி	உ
ஹ	ஈ	ஹ	ஈ	ஓம்	[illegible]	ஓம்	ஹ	ஈ	ஹ	ஈ
வ	உ	ந	ய	ஶி	ஓம்	ஶி	ந	ய	வ்	உ
ஶி	ந	ய	வ	உ	ஹ	உ	ஶி	வ	ந	ய
உ	ஶி	வ	ந	ய	ஈ	ய	வ	ஶி	உ	ந
ய	வ	ஶி	உ	ந	ஹ	ந	ய	உ	ஶி	வ
ந	ய	உ	ஶி	வ	ஈ	வ	உ	ந	யு	ஶி

கொண்டஇச் சக்கரத் துள்ளே குணம்பல
கொண்டஇச் சக்கரத் துள்ளே குறியைந்து
கொண்டஇச் சக்கரங் கூத்தன் எழுத்தைந்துங்
கொண்டஇச் சக்கரத் துள்நின்ற கூத்தே.

-திருமந்திரம் 926, 929

சூல முடிச்சுகளாக ஒவ்வொரு மூலையிலும் இரு சூலங்களாக எட்டு சூலங்கள் இடையில் மையத்திலுள்ள ஓங்காரத்தைக் கீழிருந்து மேலாக, மேலிருந்து கீழாக, இடமிருந்து வலமாக, வலமிருந்து இடமாக, ஒரு பாதை செல்லும் வண்ணம் இரு சூலக் கோடுகளாக மொத்தம் எட்டு சூலங்களுமாக வடிவமைக்கப்பட்டிருக்கும் சக்கரம் அகவழிபாட்டு யந்திரமாகும்.


இதில் உள்கோட்டு வடிவ அறைகள் மூலைக்கு மூலைகளாக குறுக்குக் கோடுகளாக அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். மேலும் இதில் ஓங்காரச் சூழல் இல்லை. நடு நாயகமாக மட்டுமே பிரணவம் இடம் பெற்றுள்ளது.

அக வழிபாட்டுச் சக்கரம்

வெளியி லிரேகை யிரேகையி லத்தலை
சுளியில் உகாரமாஞ் சுற்றிய வன்னி
நெளிதரு கால்கொம்பு நேர்விந்து நாதந்
தெளியும் பிரகாரஞ் சிவமந் திரமே.

அகார வுகார சிகார நடுவாய்
வகாரமோ டாறும் வளியுடன் கூடிச்
சிகார முடனே சிவன்சிந்தை செய்ய
ஒகார முதல்வன் உவந்துநின் றானே

-திருமந்திரம் -930, 931



இந்த அகவழிபாட்டுச் சக்கரத்தில் கோடுகள் குறுக்குக் கோடுகளாக சூல முடிச்சுகளாக அமைக்கப்பட்டிருப்பது விசேடமாகும். நான்கு சம சதுரங்களை கிழக்கு, மேற்கு, வடக்கு தெற்காக இரு குறுக்குக் கோடுகள் பாதைகளாக அமைக்கப்பட்டு நெடுக்குக் கோடுகளாகக் காட்சி தருகின்றன.

15. சிவ சக்கரம்

சிவ சக்கரம் பெரிய தவஞ்செய்து அடையும் பயனைச் செய்யும்; அச்சக்கரத்துள்ளே விளங்கும் பராபரப் பொருளாகிய சிவத்திடத்துத் தம்மை முழுமையாக ஒப்படைத்தவர்களுக்கு எல்லா நலன்களும் விளையும்.

இந்த சிவ சக்கரத்தை கருவூர் தேவர்

வீதியந்த ஆறுதெரு அமைந்த வீதி
விளையாடி நின்ற திருமாளிகை கண்டாய்

என மாளிகையாகச் சிறப்பிக்கின்றார்.

எட்டு வரையின்மே லெட்டு வரைகீறி
இட்ட நடுவுள் இறைவன் எழுத்தொன்றில்
வட்டத்தி லேயறை நாற்பத்தெட் டும்மிட்டுச்
சிட்டஞ் செழுத்துஞ் செபிசீக் கிரமே.

தானவர் சட்டர் சதிரர் இருவர்கள்
ஆனஇம் மூவரோ டாற்றவ ராதிகள்
ஏனைப் பதினைந்தும் விந்துவும் நாதமுஞ்
சேனையுஞ் செய்சிவ சக்கரந் தானே.

-திருமந்திரம் 964, 965

குறுக்கும் நெடுக்குமாக எட்டுக் கோடுகளின் மேல் எட்டுக் கோடுகள் கீறப்பட்டால் அதன் கண் நாற்பத்தொன்பது அறைகள் அமையும். அவற்றுள் நடுவறையில் 'சிவ' எழுத்தாகிய 'சி' பொறிக்கப்படுதல் வேண்டும். மேலும் கீழும், பக்கமும் ஒவ்வோர் அறைகள் தள்ளப்பட ஐவைந்தறை களாகும். இவற்றின்கண் திருவைந்தெழுத்தை (சிவயநம) அமைத்தல் வேண்டும்.

18	19	20	21	22	23	24
17	சி	வ	ய	ந	ம	1
16	ம	சி	வ	ய	ந	2
15	ந	ம	சி	வ	ய	3
14	ய	ந	ம	சி	வ	4
13	வ	சி	ய	ந	ம	5
12	11	10	9	8	7	6

இந்தப் பஞ்சாட்சர அமைப்பைச் சுற்றி அதன்மேல் ஒன்று முதல் இருபத்து நான்கு அறைகளிலும் ஊர்க்காவலராம் ஐயனாரும், நகர்க்காவலராம் வைரவரும், திருக்கோயில் காவலராம் பிள்ளையாரும், முருகரும், திருவாயிற் காவலர்களான துவாரபாலகர்கள் இருவரும், விந்து, நாதம் முதலாகக் கூறப்படும் தூமாயை ஐவரும், சிவகணத் தலைவர்களும் இந்தச் சிவ சக்கரத்தினுள் பாதுகாவலர்களாக காட்டப்படுகின்றனர். இவர்களை எண் வடிவில் அமைத்துக் காட்டுகின்றார் திருமூலர்.

இப்படி 1 முதல் 24 வரை அமைக்கப்படும் எண் தேவதைகளைச் சிலர் அரபு குறியீடுகளாகவும், சிலர் தமிழ் குறியீடுகளாகவும் அமைப்பர்.

இந்த இருபத்து நான்கு எழுத்துக்கும் திருமூலர் வேறொரு விளக்கமும் அளிக்கின்றார்.

ஆறெழுத் தாவ தாறு சமயங்கள்
ஆறுக்கு நாலே இருபத்து நாலென்பர்

சாவித் திரியில் தலையெழுத் தோன்றுள
பேதிக்க வல்லார் பிறவியற் றார்களே.

-திருமந்திரம் -970-

'ஓம் சிவாயநம' என ஆறெழுத்தும் ஆறு சமயங்கள். இவை உலகிலே பரந்து செல்லும்படி உயிரைச் செலுத்தி, அதனின்று திரும்ப விடாது. உயிரானது அவற்றைச் சாராது பிணிப்பினின்றும் நீங்கிச் சிவத்தைச் சாரின் முக்தியாகும்.

பிரணவத்தால் காணாபத்யமும் (கணபதியை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம்), சிகாரத்தால் சைவமும் (சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம்), வகாரத்தால் சாக்தேயமும் (சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம்), யகாரத்தால் கௌமாரமும் (முருகனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம்), நகாரத்தால் சௌரமும் (சூரியனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம்), மகாரத்தால் வைணவமும் (மாயாவாதம் – திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம்) இப்படி ஆறெழுத்துக்குள்ளேயே ஆறு சமயங்களும் அடங்கின.

இவற்றுள் ஒவ்வொன்றும் அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என நான்காய் விரிவு பட (6X4=24) இருபத்து நான்கெழுத்தாம். இதனை காய்த்திரி மந்திரமாகப் போற்றுவர்.

காயத்திரி 24 எழுத்துக்களைக் கொண்டது. இந்தக் காயத்திரியின் முன் சேர்ந்து மொழியும் எழுத்து ஓங்காரமாகும். இந்தப் பிரணவத்தை மட்டும் தனியே பகுத்துணர்வராயின் அங்கும் 'சிவயநம' என ஐந்து பொருளுண்மையும் அறியப்படுதலின் சைவத்தின் மேன்மை புலனாகும்.

உலகில் நிலவும் பலவகையான சமயங்களுக்கும் ஆதாரம் ஓம் நமசிவய. இஃதுவே சைவத்தின் பஞ்சாட்சரமுமாகும். இந்தக் காயத்திரியைச் சொல்லி சிவ சக்கரத்தை வழிபடின் உயிர்கள் எய்தும் முடிந்த எல்லையாகிய பெரு முதல் அங்கு வெளிப்படும் என்று திருமூலர் விளக்கமளிக்கின்றார்.


16. உமாபதி சக்கரம்

குறுக்கும் நெடுக்குமாக எட்டெட்டு அறைகள் வரைந்து அதில் ஓரறையிலே அடைக்கப்பட்ட ஒன்றை எட்டாகக் காணும்படி முறையேயிட்டு, இவற்றைப் பிரணவத்தால் வளைத்து அமைக்கப்படும் சக்கரம் உமாபதி சக்கரம் ஆகும்.

இந்த எட்டறைச் சக்கரத்துள்ளே மையத்தில் இட்ட எழுத்தே எட்டுத் திசையிலும் சீபஞ்சாக்கம் அமைந்து தோன்றும்.

எட்டினில் எட்டறை யிட்டோ ரறையிலே
கட்டிய ஒன்றெட் டாய்க் காண நிறையிட்டுச்
சுட்டி இவற்றைப் பிரணவஞ் சூழ்ந்திட்டு
மட்டும் உயிர்கட் குமாபதி யானுண்டே.

-திருமந்திரம் 971



க	உ	ங	ச	ரு	சா	எ	அ
உஅ	சி	வ	ய	ந	ம	சி	கூ
உஎ	வ	சி	வ	ய	ந	ம	ய
உசா	ய	ந	ம	சி	வ	ந	யக
உரு	ந	ம	சி	வ	ம	ய	யஉ
உச	ம	சி	வ	ய	சி	வ	யங
உங	சி	வ	ய	ந	ம	சி	யச
22	2க	20	யகூ	யஅ	யஎ	யசா	யரு

இச் சக்கரத்தை ஓங்காரமில்லாமலும் அமைத்து பொருள் தருபவரும் உளர்.

'பிரணவஞ் சூழ்ந்திட்டு' என்று திருமூலர் குறிப்பிடுவதால் இந்த உமாபதி சக்கரத்தை (8 x 8 = 64) ஓங்காரத்தைச் சூழ அமைப்பதே சாலப் பொருந்தும்.

17. சுவஸ்திகா சக்கரம்

இருபத்தைந்தறைச் சக்கரம் ஒன்றமைத்து அதில் சிகாரத்தை மத்தியிலமைத்து ஒன்பது எழுத்துக்களாய மந்திரமமைத்தல் வேண்டும். நான்கு திசையிலும் யகாரமும் நான்கு திசையிலும் வகாரமும் அமைய இங்கு 16 எழுத்துக்களாய்ப் பரிணம் காட்டத் துவங்கும்.

	ய	வ —	ய	
	வ —	சி —	வ	
	ய —	வ	ய	

நம்முதல் அவ்வொடு நாவின ராகியே
அம்முத லாகிய எட்டிடை யுற்றிட்டு
உம்முத லாகவே உணர்பவர் உச்சிமேல்
உம்முத லாயவன் உற்றுநின் றானே

-திருமந்திரம் 972

இதனை எழுத்திடையீட்டுச் சக்கரம் எனவும் வழங்குவர். நகாரம் முதலாகஅகாரமாகிய உயிர் இறுதியாக உள்ள எழுத்துக்களோடு உரைக்கின்ற நாவினையுடையராகி உந்தி முதலாகிய சிகரம் நடுவாக யகரம் முதலாகிய எழுத்துக்களை இடைக்கண் உள்ள அறைகளில் பொருந்தச் செய்து அறிகின்ற சாதகருடைய உச்சிமேல் சக்தி யுத்தனாகிய சிவம் பொருந்தி விளங்குவான் என்று இந்தச் சக்கரத்தின் பெருமையைத் திருமூலர் உரைக்கின்றார்.

18. ஆறாதார நிலைச் சக்கரம்

சிவனை வழிபடுவதற்கு யாகம் வளர்த்தல் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. கோயில்களில் தீமூட்டி, ஆகுதி செய்து, தேவர்களை அழைத்து, அவிர்பாகம் அளிக்கின்றனர். அப்படித் தீமூட்டுதற்கு யாக குண்டங்களை விதவிதமான வடிவங்களில் அமைக்கின்றனர். அந்த வடிவங்களின் பொருள் தெரியாமல் பாட்டனார் செய்த்தைத் தந்தையும், தந்தை செய்ததைத் தனயனும் தொடர்கதையாக இஃது தொடர்கிறது. இந்த யோக குண்டங்களை நவ குண்டங்களாக வடிவமைக்கும் வழிவகைகளை திருமந்திரத்துள் திருமூலர் விளக்கிச் செல்கின்றார்.

புறத்தே கோயில்களில் யாகசாலைகளில் வளர்க்கப் பெறும் இந்த யாகம் அகத்தேயும் எழுப்பப் பெறுதலின் பயன்பற்றி விளக்கமுற எடுத்துரைக்கின்றார்.

ஆஞ்ஞை வரையில் வியாபித்திருப்பதாக உள்ளே வெளிப்பட்ட சிவம் பிராணயாமமாகிற காற்றை அறிந்தடக்க உள்ளே தியானத்திடமாகப் பொருந்திய செஞ்சோதி பிருதிவி புவனங்களையும் அகண்ட முகட்டையும் கடந்து நிற்கின்றது.

இப்படி அகமார்க்கத்தில் கொண்ட இக் குண்டத்துள்ளே எரிகின்ற சோதியில் ஈரேழு அண்டங்களையும் படைத்து அழிக்கலாம். அங்கு பதினாறு கலைகளாக விளங்கித் தோன்றும் என்று இந்த நவகுண்டத்தை யோகமார்க்கத்தால் வைத்து உணர்த்துகின்றார்.

இந்த நவ குண்டத்தையும் தம்முட் கண்ட யோகிக்கு உலகம் முழுதும் அறியப்படும் அதுவே சாதனமாம்.

ஒன்பது குண்டங்களாவது:

சதுரம், யோனி, பிறை, முக்கோணம், வட்டம், அறுகோணம், பதுமம், அட்டகோணம், வர்த்துலம் என்பன.

யாக சாலைகளில் இவை முறையே யாக மண்டபத்தின் கிழக்கு, அக்கினி, தெற்கு, நிருதி, மேற்கு, வாயு, வடக்கு, ஈசானம், ஈசானத்திற்கும் கிழக்கிற்கும் நடு என இவ்விடங்களில் அமைக்கப்படும்.

நாற்கோணமும், முக்கோணமும், வில் நுனியும், வட்டமும், அறுகோணமும், அட்ட கோணமும், பதுமமும், யோனியும், வட்டமும் ஆகிய ஒன்பதுமே இறைவனை நாடும் ஒன்பது கோணங்களில் அமைந்த குண்டங்களாம்.

நாற்கோணமாகிய சதுர குண்டம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற சாதனங்களை உருவகப்படுத்தி நின்றது.

யோனி குண்டமாகிய முக்கோணம் தட்சிணாக்கினி, ஆகவநீயம், காருகாபதியம் என்ற மூன்று தழல்களுக்கும் இருப்பிடமாய் நின்றது.

இறைவனின் வளைந்த வில்லைக் குறிப்பது பிறை குண்டம்.

வேதங்கட்குத் தலைவனாகிய பிரமனுக்கும் தலைவனான சிவரூபத்தின் ஆகாய வடிவம் வட்டம். இஃது விருத்த குண்டமெனப்படும்.

அனுபவம் விளையும் இடமாகிய ஆறு ஆதாரங்களின் வடிவமே அறுகோண குண்டம்.

பூமியின் நிலை அதன் எட்டு திசைகளையும் வடிவமைத்து நிற்பது அட்ட கோண குண்டம்.

ஞானத்தின் வடிவமாம் அரசமரம். அதன் இலையின் வடிவமாம் யோனி குண்டம்.

தாமரையின் உருவகம் பதும குண்டம்.

கோழியின் வடிவம் வட்டம். குக்குட வடிவாகிய கோழியின் விளக்கமே வர்த்துல குண்டம்.

இங்கு கூறப்பட்டவை புற வடிவில் ஆலயங்களில் அமைக்கப்படும் யாக குண்டங்கள். 'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்' என வாழும் சித்தர்கள் இந்த நவ குண்டங்களையும் அகத்தே அமைத்து அதில் இறை தரிசனம் கண்டார்கள்.

ஒன்பது குண்டங்களையும் சித்தர்கள் அகத்தே பஞ்சபூத வடிவிலும் குண்டலினி வடிவாயும் அமைத்து வழிபட்டனர்.

மூலாதாரத்திலுள்ள பூமண்டலம் சதுர குண்டமாகும். சுவாதிட்டானத்திலுள்ள நீர் மண்டலம் பிறைக்குண்டம். அநாகத சக்கரத்திலுள்ள வாயு மண்டலம் அறுகோண குண்டமாகும். மணிபூரகத்திலுள்ள அக்கினி மண்டலம்

முக்கோணம குண்டமாகும். விசுத்த சக்கரத்திலுள்ள ஆகாய வடிவம் வட்ட குண்டமாகும்.

பதும குண்ட மென்பது ஆஞ்ஞா சக்கரத்திலுள்ள சுக்கில பதுமத்தைக் குறிக்கும். யோனி குண்டம் மூலாதாரத்திற்கும் சுவாதிட்டானத்திற்கும் இடையிலுள்ள காம வாயுவிற்கும், காம பீஜத்திற்கும் இடமாக வுள்ள திரிகோணத்தைக் குறிப்பது.



அஷ்ட கோண குண்டம் என்பது சிரத்திற்கு மேலுள்ள ஒன்பது இதழ் கமலத்தைக் குறிப்பது. வர்த்துல குண்டம் என்பது துவாத சந்தத்திலுள்ள பராகாயத்தைக் குறிப்பது.

இப்படி அகக் கிரியையிலே குண்டலங்களைத் தமக்குள்ளேயே தியானித்து அந்த அந்த அதி தெய்வங்களை அவ்வக் குண்டங்களில் எரியும் சோதியாகப் பாவித்து தரிசனம் கண்டால் உள் நாடிகளில் குண்டலினியையும் பிராண வாயுவை எழுப்பும் பயனையும் கண்டு கொள்ள இயலும் என்று திருமூலர் உரைக்கின்றார்.

உடலொளியாக் உண்டான இஃது உயிரொளியாக உலகெங்கும் பரவி உபதேச ஒளியாகவும் மெய்யொளியாகவும் குண்டலினி ஒளியாக உடலில் மிளிர்கின்ற முறையை ஆறாதாரச் சக்கரத்துள்ளும் அமைத்துக் காட்டுகின்றார்.

ஒளி மயமாய் நின்ற குண்டம் ஆறு ஆதாரங்களிலும் சக்கரமாக அவற்றைச் சுற்றிலும் பழமைபோல வட்ட வடிவ மாகிய பிரணவமானது ஒளி விட்டெழும், முப்பத்தாறு தத்துவங்களும் இதனுள் கலந்து எழ இக்குண்டத்துள் சிவாக்கினி எழும்.

எடுக்கின்ற பாதங்கள் மூன்றெ தெழுத்தைக்
கடுத்த முகம்இரண் டாறுகண் ணாகப்
படித்தெண்ணு நாவெழு கொம்பொரு நாலும்
அடுத்தெழு கண்ணான தந்தமி லார்க்கே

-திருமந்திரம் 1006

அந்தமில்லாத இந்தச் சிவாக்கினிக்கு எடுக்கின்ற பாதங்கள் மூன்றும், ஏழு கைகளும் கடுகடுத்த முகம் இரண்டும், ஆறு கண்களும், கற்று எண்ணும் நாக்கள் ஏழும், கொம்புகள் நாலுமாகப் பொருந்தி எழுகின்ற இடமாயிற்று என்று ஆறாதாரச் சக்கரமாக இறைவடிவம் மனித உருவில் விளங்கும் முறையை திருமூலர் தெரிவிக்கின்றார்.

19. திரிபுரைச் சக்கரம்

மூன்று கண்டங்களான முக்கோணச் சக்கரத்துள் விளங்குபவள் அன்னை பராசக்தி.

மாமாயை என்னும் சுத்த மாயையாகியும் அசுத்த மாயையாகியும் விந்துவாகியும், வைகரிவாக்காகியும், ஓம் எனும் பிரணவமாகியும், உள்ளொளியாகியும் ஆறு இறுதியினையுடைய மந்திர வடிவான சக்திகள் தாமாயும் அவற்றைக் கடந்து அல்லவாயும் விளங்குபவள் திரிபுரை.

இந்தத் திரிபுரை சிவை, திருமகள், கலைமகள் என மூவுருவாய், இம் மூன்றாற்றலையும் தாமே தாங்கி ஒருருவாய் உமையாக நிற்பவள். பொன், செம்மை, வெண்மை நிறத்தையுடையவளாக முந்நிறமாய், கல்வியும் போகமும் மோட்சமும் ஆகிய முப்பயன்களையும் அளிப்பவள்.

மலத்தோடு கூடி கேவலத்துட்பட்டு வருந்தும் ஆன்மாக்களாகிய பொருளல்லாதவரையும் தன் தடையிலாக் கருணையால் எடுத்துப் பொருளாகக் கொண்டு ஆளும் தன்மையை உடையவள். அவள் ஞான சொரூபி.

அவளை அறியா அமரரும் இல்லை. தேவர்கள் (அமரர்கள்) தமது வாழ்நாள் இன்பமாகக் கழிய அன்னையின் அருளை வேண்டிய நற்பாராதலின் அவளை அறியாத அமரர்கள் இருக்க முடியாது.

அவளன்றிச் செய்யும் தவம் இல்லை.


தவஞ் செய்வார்க்குக் குண்டலினி சக்தியாக மதிமண்டலம் வரை ஏறி, பராசக்தியாகத் தவப் பயனைத் தருபவள் சக்தியாதலால் அவளன்றிச்செய்யும் தவமும் இல்லை.

அவளன்றி ஐயராலாவ தொன்றில்லை.

பிரம்மா, விஷ்ணு, இந்திரன், மகேசன், சதாசிவன் என்னும் இவர்கள் சக்தியின்றி எத்தொழிலும் ஆற்ற இயலாதவர் ஆதலால் அவளன்றி ஐவராவதொன்றில்லை.

இந்திரியங்களும் தத்தம் புலன்களைச் சென்று நுகர வேண்டுமாயின் தாயின் கருணை வேண்டும். சக்தி நிபாதம் பெற்றாலன்றி வீடுபேறு அடைதல் இயலாது.

ஞானிகள் பராசக்தியை ஆனந்த வடிவினள் என்பார்கள். அவர்களே ஞான சொரூபி என்றும் அழைப்பார்கள். நாம் செய்யும் செயல்களனைத்தும் அவளிச்சைப்படியே நடக்கிறது என்பார்கள். எல்லாம் சக்தியின் ஆற்றலே. சக்தி தனியே நின்று அனைத்தையும் ஏன் சிவத்தையும் ஆட் கொள்ளும் என்று திரிபுரையின் பெருமை கூறும் திருமூலர் அவளைச் சக்கரமாகவும் வரைந்து வழிபடுகின்றார்.



ஆதி விதமிகத் தண்டந்த மால்தங்கை
நீதி மலரின்மேல் நேரிழை நாமத்தைப்
பாதியில் வைத்துப் பலகாற் பயில்விரேல்
சோதி மிகுத்துமுக் காலமுந் தோன்றுமே.

-திருமந்திரம் 1045

சிவபெருமானின் ஆதித் தொழிலாகிய படைப்புப் பெருக, பேரளியாகிய பெருங்கருணை புரிந்தவள் திருமாலின் தங்கை. அந் நேரிழையின் திருப் பெயராகிய 'நமசிவய' என்னும் தமிழ் ஐந்தெழுத்து அருள் மந்திரத்தை முறையாக எட்டிதழ் தாமரை வரைந்து அதன் மத்தியில் அமைக்க, பலமுறை உருவேற்றத் திருவருள் ஒளி பெருகும். அது பெருக அகக்கண் திறந்து முக்கால வுணர்ச்சியும் கைகூடும். இதுவே யோகக்காட்சி என்று திரிபுரை சக்கரத்தில் அம்மை எழுந்தருளும் அருமையைக் கூறுகின்றார் திருமூலர்.

ஓங்காரத்தினுள்ளே நான்கு வாயில்களையுடைய சதுரத்தை அமைத்து, அவ்வாயில்களில் திருமகள் பீஜாட்சரமாகிய '**ஸ்ரீம்**' என்பதனை அமைத்து, அப்பு மண்டலமாகிய சுவாதிட்டானத்தில் உள்ள எட்டிதழ் தாமரையை வரைந்து, அங்கு நடுவில் '**வம்**' என்று அப்பு பீஜத்தை இட வேண்டும். அதில் நாராயணரும் லட்சுமியும் இணைந்து நிற்கும் நிலை தென்படும் என்று இச்சக்கர அமைப்பை திருமந்திரம் கூறுகின்றது. இச் சக்கரத்தை *ஓங்காரத் தாமரைச் சக்கரம்* என்றும் அழைப்பர்.

20. மனோன்மணித் தாமரைச் சக்கரம்


தொடக்க நட்பாற்றலாகிய ஆதியும், தொன்மை வனப்பாற்றலாகிய அனாதியும், தனக்கோர் காரணம் இல்லாதவளும் தான் எல்லாவற்றுக்கும் காரணமாயுள்ளவளும், ஒளிக்குள் ஒளியாய்த் திகழ்பவளும், பேரின்பமருளும் அழகிய முதல்வியும், இனிய அமைதி தருபவளும், மனத்தின் கண் சிவ நினைப்பை நிலைபெறச் செய்பவளும், மங்கல குணமுடையவளும் ஆகிய இறைவி மனோன்மணி யாவாள். அவளே ஆதி என்னும் இறைவி.

ஆருயிர்களின் நிலைமைகளை இடையறாது நோக்கிக் கொண்டிருக்கும் தவமுடைய பெண்ணணங்கு உலகம் அனைத்திற்கும் அன்பாயிருப்பவள். உயிரை உய்விக்கும் அழகிய 'நமசிவய' என்னும் குருமொழியினை அருளுபவள், அவளே அதற்குரிய நானெறியாம் நற்றவப் பேற்றினை நல்குபவள்.

ஆருயிர் அனைத்திற்கும் உய்யும் வழி வகைகளை அருளிச் செய்யும் ஒப்பில்லாத முழுமுதல்வி மனோன்மணி எல்லாவற்றையும் படைத்துக் காக்கும் அந்த நல்லாளை, சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் மெய்த்தவம் நன்மையின் தலைவியை, ஆருயிர்களின் மயக்கங்கள் அத் தவப் பேற்றால் அகலும் படி திருக் கடைக்கண் நோக்கருளும் மனோன்மணி மங்கையை, அமைதியாய் அமர்ந்து திருமுறை ஓதி வழிபாடியற்றிப் பணியுங்கள். பணிந்த பிறகு கொடிய பிறவிநோய் அற்று ஒருகாலும் மீண்டும் பொருந்தாதகலும் என்று மனோன்மணியம்மையின் பெருமை கூறும் திருமூலர், அவளை எட்டிதழ்த் தாமரைக்குள் பலபிரமதனி, சர்வபூத தமனி, வாமா, ஜேஷ்டா, ரௌத்ரி, காளி, கலவிகரணி, பலவிகரிணி எனும் எட்டு கன்னியர் புடைசூழ நிற்கும் நிலையில் சக்கரமாக அமைத்துக் காட்டுகின்றார்.

பூரித்த பூவிதழ் எட்டினுக் குள்ளே யோர்
ஆரியத் தாளுண்டங் கெண்மர் கன்னியர்
பாரித்த பெண்கள் அறுபத்து நால்வருஞ்
சாரித்துச் சத்தியைத் தாங்கள்கண் டாரே.

-திருமந்திரம் 1060



மணி மந்திர யோகத்தின்பால் யோகியர்க்கு கேட்கும் நவநாத ஒலியாகத் திகழும் மனோன்மணியானவள் நிறைந்த எட்டிதழ்த் தாமரைக்குள் புசிக்கத் தக்கவளாய் எண்மர் கன்னியரும் அறுபத்து நான்கு பெண்களும் புடைசூழ இந்த மனோன்மணி சக்கரத்துள் எழுந்தருளி இருக்கின்றாள்.

எல்லா அண்டங்களையும் திசைகளையும் துன்பம் சூழாமல் காக்கும் திருவருளே செல்வமாகவுடையவள் பராசக்தி அவளை மனோன்மணிச் சக்கரமாம் மனத் தாமரையுள் வைத்துப் பூசித்தல் வேண்டும் என மனோன்மணி சக்கரத்தை வழிபடும் நிலையைக் கூறுகின்றார் திருமூலர்.

21. ஸ்ரீ சக்கரம்

தேவி பராசக்தியின் யந்த்ர ரூபம் ஸ்ரீ சக்கரம். இந்த ஸ்ரீ சக்கரத்தின் பெருமை சௌந்தர்யலக்ரியில் ஆதிசங்கரரால் விளக்கம் பெற்றுள்ளது.

ஹ்ரீம், பீஜத்தை ஒன்றுக்கொன்று பார்வையான திரிகோணங்களின் நடுவில் எழுதி அதைச் சுற்றி விருத்தம் வரைந்து அதை மேல்பாகத்தில் அஷ்டதளத்தால் அலங்கரித்து அதில் தேவியினுடைய திருவடிகளைத் தியானித்துக் கொண்டு சௌந்தர்யலஹரி சுலோகங்களைப் பக்தியுடன் பாராயணம் செய்து வந்தால் கனவிலும் நனவிலும் பராசக்தியின் தரிசனமும் பரிபூர்ண கடாக்ஷமும் ஏற்படும் என்று ஆதிசங்கரர் கூறுகின்றார்.

ஸ்ரீ சக்கரம் என்பது ஒன்பது முக்கோணங்களால் ஆனது. அதில் கீழ் நோக்கிய முக்கோணங்கள் ஐந்தும் சக்தி சக்கரங்கள் என்றும், மேல் நோக்கிய முக்கோணங்கள் நான்கும் சிவசக்கரங்கள் என்றும் கொள்ளப்படும்.[1]

இதனையே சற்று விளக்கமாக முக்கோணம், எட்டுக்கோணம், இரண்டு பத்துக் கோணங்கள் பதினான்கு கோணம் ஆகிய ஐந்தும் சக்தி சக்கரங்கள். மற்ற பிந்து, எட்டிதழ்க் கமலம், பதினாறிதழ்க் கமலம், நாற்கோணம் ஆகிய நான்கும் சிவசக்கரங்களாகும் என்று லலிதாத்ரிசதி விளக்குகின்றது.

இந்த ஒன்பது சக்கரங்களும் அண்டமாகிய உலகிற்கும் பிண்டமாகிய உடலுக்கும் மூலகாரணங்களான தத்துவங் களைக் குறிப்பவையாதலால் அவை 'மூலப்பிரகிருதிகள்' என்றும் 'யோனிகள்' என்றும் கூறப்படுகின்றன.

உடலிலுள்ள மூலப் பொருள்களில் மஜ்ஜை, சுக்கிலம்,

1. வரிவஸ்யா ரஹஸ்யம் 2, 42

பிராணன், ஜீவன் இவை நான்கும் சிவாம்சம். தோல், குருதி, மூளை, எலும்பு இவை ஐந்தும் சக்தி அம்சம். இவை ஸ்ரீ சக்கரத்தின் அக விளக்கமாகும். பாவனோபநிஷத்து, தேகத்தை ஸ்ரீ சக்கரமாகப் பாவித்து உபாசனை செய்யும் முறையை விரிவாகக் கூறுகிறது.

ஸௌபாக்ய வர்த்தனீ என்ற வியாக்கியானத்தில் ஸ்ரீ கைவல்யாச்சிரமம் ஸ்ரீ சக்கரம் வரைவதற்குப் பின்வரும் முறையைக் குறிப்பிடுகின்றார்.

தமக்குத் தேவையான அளவில் வரைந்த ஒரு செங்குத்துக் கோட்டை வட்டமாகக் கொண்டு ஒரு வட்டம் வரைந்து அவ்விட்டத்தை 48 சம பாகங்களாக்க வேண்டும். அதன் உச்சியிலிருந்து தொடங்கி 6வது படியிலும் அதற்குப் பின் ஆறாவது, அதனையடுத்து ஐந்தாவதும் பின்னர் மூன்றாவதும் மறுபடியும் மூன்றாவதும், நான்காவதும் பிறகு ஆறுக்கும் ஆறுக்கும் என ஒன்பது புள்ளிகளைக் குறிப்பிடுதல் வேண்டும்.

இப்படிக் குறிப்பிட்ட புள்ளிகள் வழியாக விட்டத்திற்குச் செங்குத்தான ஒன்பது நாண்களை வரைதல் வேண்டும். இவற்றில் ஒன்று முதல் ஒன்று, இரண்டு, நான்கு, ஐந்து, ஆறு, எட்டு, ஒன்பது ஆகிய ஏழு நாண்களின் இரு கோடிகளி னின்றும் வரிசையாக $^{3}/48$, $^{5}/48$, $^{16}/48$, $^{18}/48$, $^{16}/48$, $^{4}/48$, $^{3}/48$ பாகங்களை நீக்கி விடுதல் வேண்டும்.

இப்படிக் குறைக்கப்பட்ட ஒன்று, இரண்டு, நான்கு, ஐந்து, ஆறு, எட்டு, ஒன்பது ஆகிய கோடுகளைப் பீடமாகவும்; ஆறு, ஒன்பது, எட்டு, ஏழு, இரண்டு, ஒன்று, மூன்று ஆகியவற்றின் மையங்களை அந்த வரிசையின் உச்சிகளாகவும் கொண்டு ஏழு முக்கோணங்கள் வரைதல் வேண்டும்.

ஒன்றன் மேல் ஒன்றாக முக்கோணங்களை வரையும்போது மூன்று கோடுகள் சந்திக்கும் மர்மஸ்தானங்கள்

பிசகாமல் இருக்கும்படி கவனமுடன் கோடுகளை வரைதல் வேண்டும்.

இப்படியாக நடு முக்கோணம் ஒன்று, பிறகு எட்டு, பின்பு இரண்டு பத்து, முடிவில் பதினான்கு ஆக நாற்பத்து மூன்று முக்கோணங்கள் கொண்ட ஸ்ரீ சக்கரம் தோன்றுகிறது.

இந்த முக்கோணங்களைத் தொடர்ந்து எட்டு தாமரை இதழ்களைக் கொண்ட தாமரைத் தளத்தை வட்டமாக இடுதல் வேண்டும். உச்சியில் தொடங்கி எட்டுத் தளத்திற்கு மேல் ஒரு வட்டம் வரைந்து அதற்கு மேல் பதினாறு தாமரை இதழ்களைக் கொண்ட ஒருதளத்தை வரைய வேண்டும். அதனைத் தொட்டுக் கொண்டு ஒரு வட்டமும் பின் சம இடைவெளியில் இரண்டு வட்டங்களுமாக மூன்று வட்டங் கொண்ட மேகலையை அமைத்தல் வேண்டும்.

இந்த மேகலையைத் தொடாமல் அதனைச் சுற்றி மூன்று நேர்கோடுகளாலானதும் சதுர வடிவானதுமான பூக்ருஹம் அமைக்க வேண்டும். இதில் நான்கு புறமும் நான்கு வாயில்கள் அமைத்தல் வேண்டும்.

இதுவே சோம, சூரிய, அக்கினி மயமானதும் தெய்வீக ஒளி பொருந்தியதுமான ஸ்ரீ சக்கரமாகும். இதன் மையத்திற்கு பிந்து என்று பெயராகும்.

இதில் கீழ் நோக்கியுள்ள ஐந்து முக்கோணங்கள் சக்தி வடிவம். மேல் நோக்கியுள்ள நான்கு முக்கோணங்கள் சிவ வடிவம் என்று வாமகேசுவர தந்திரம் கூறுகின்றது. ஆனால் லக்ஷ்மீதரர் சமய மதப்படி சக்தி முக்கோணங்கள் ஐந்தும் மேல் நோக்கி இருக்க வேண்டும் என்றும், சிவ முக்கோணங்கள் நான்கும் கீழ்நோக்கி இருக்க வேண்டும் என்றும் கூறுகின்றார்.

வாமகேசுவர தந்திரத்தின்படி வரைந்த ஸ்ரீ சக்கரத்தைத் தலைகீழாகத் திருப்பினால் லக்ஷ்மீதரர் கூறுகின்றபடி அமையும்.

லக்ஷ்மீதரர் ஸ்ரீ சக்கரம் வரைவதில் வெளியே இருந்து உள்ளே செல்லும் முறையாக சம்ஹாரக் கிரமம் என்று ஒன்றும், உள்ளே இருந்து வெளியே வரும் முறையாக சிருஷ்டிக்கிரமம் என்று மற்றொன்றையும் கூறுகின்றார். சமயாசார முறைப்படி வரையும் சிருஷ்டிக் கிரம சக்கரத்தில் நடு முக்கோணம் மேல் நோக்கியது. கௌலாசாரப்படி வரையும் சம்ஹாரச் சக்கரத்தில் நடு முக்கோணம் கீழ் நோக்கியது.

இந்த வேறுபாட்டுடன் ஸ்ரீ சக்கரம் வரையும் முறையை லக்ஷ்மீதரர் சற்று விளக்கமாக எடுத்துரைக்கின்றார்.

மேலே உச்சி உள்ளதாகவும் கீழே பீடம் உள்ளதாகவும் முதலில் ஒரு சம பக்க முக்கோணம் வரைதல் வேண்டும். இதனுள் பீடத்திற்குச் சற்று மேலே பிந்துவை வைத்து, அதற்கு மேல் பீடத்திற்கு இணையாக ஒரு கோடு வரைந்து மேல் நோக்கிய முக்கோணம் வரைய வேண்டும்.

முதல் முக்கோண உச்சியின் வழியாக இரண்டாவது முக்கோண அளவில் இணைக்கோடு வரைந்துஅதைப் பீடமாகக் கொண்டு கீழ்நோக்கிய முக்கோணம் ஒன்று வரைதல் வேண்டும். இதன் பக்கங்கள் இரண்டாவதுமுக்கோணத்தின் பீடமும் முதல் முக்கோணப் பக்கங்களும் வெட்டும் புள்ளிகளின் வழியேச் செல்ல வேண்டும். இப்புள்ளிகளின் வழியே மூன்று கோடுகள் செல்லுகின்றன.

இவைகளுக்கு மர்மங்கள் என்பது பெயர். இரண்டு கோடுகள் வெட்டும் இடத்திற்குச் சந்தி என்பது பெயர் இப்படியாக எட்டுக் கோணச் சக்கரம் தோற்றமளிக்கிறது.

இந்த எட்டுக் கோணச் சக்கரத்தின் மேல் கோட்டையும், கீழ்க் கோட்டையும் இருபுறமும் நீட்டி ஓர் அறுகோணம் அமைக்கவும். நாலு மூலைகளிலும் உள்ள மர்மங்களில் நாலு முக்கோணங்களை உள்ளடக்கி உள் பத்துக்கோணச் சக்கரம் அமைக்க வேண்டும். இவ்வாறே வெளிப் பத்துக் கோணச்

சக்கரமும் அமைத்தல் வேண்டும். அதனைத் தொடர்ந்து பதினான்கு கோணச் சக்கரம் ஒன்றை அமைக்க வேண்டும்.

உள் பத்துக் கோணத்தின் மேல் கீழ்க் கோடுகளைப் பீடங்களாகக் கொண்டு அறுகோணம் வரைந்து, நான்கு மூலைகளிலும் உள்ள மர்ம ஸ்தானங்களில் முக்கோணங்களை உண்டாக்க வேண்டும். பின்னர் மீதியுள்ள நான்கு மர்ம ஸ்தானங்களிலும் அப்படியே முக்கோணங்களை உண்டாக்கிச் சக்கரத்தைப் பூர்த்தி செய்தால் பதினான்கு கோணச் சக்கரம் தோன்றும்.

இப்படியே 43 கோணங்களும் 24 சந்திகளும் 24 மர்மங்களும் ஸ்ரீ சக்கரத்தில் காணப்படுகின்றன.

14+10+10+8+1=43 கோணங்கள். சிவ சக்கரங்களைத் தன்னுள் அடக்கிக் கொண்ட பிந்துவானது 44 ஆவது கோணமாகும்.

இஃது புற வடிவில் ஒரு கோணமாகக் காணப்படாததால் கோணங்கள் நாற்பத்து மூன்று மட்டுமே என்று கூறப்படுகின்றது. இங்கு கூறப்பட்ட ஸ்ரீ சக்கரத்தின் மூலத் திரிகோணம் மேல் நோக்கியதாக வரையப்பட வேண்டும் என்பது மிக முக்கியமாகும்.

கௌல முறைப்படி திரிகோணத்தின் மத்தியில்பிந்து காணப்படுகிறது. ஆனால் சமய முறைப்படி நாற்கோணத்தின் மத்தியில் பிந்து காணப்படுகின்றது. கௌல சக்கரம் ஒன்பது முக்கோணங்களால் ஆவதால் கோணசங்கினியை வரையறுக்கப்படுவதில்லை.

ஒன்பது முக்கோணங்களின் சேர்க்கையால் மர்மங்களும், சந்திகளும் மட்டும் உண்டாகின்றன என்பது ஸ்ரீ சக்கர இரகசியம்.

முக்கோணங்களில் மட்டுமே வேறுபாடுகள் காணப்படும். இரண்டு சக்கரங்களிலும் இவ்வமைப்பிற்கு

மேல் பொதுவாக அஷ்டதள பத்மம், ஷோடசதளபத்மம், திரிமேகலை நான்கு வாயில்களுடன் கூடி மூன்று கோடுகளினாலான பூபுரச் சதுரம் அமைந்து காணப் படுகின்றன.

வடமொழி நூல்களிலும் பாஷ்யங்களிலும் அற்புதமாக வடிவமைத்துக் காட்டப்பட்ட இந்த ஸ்ரீ சக்கரத்தை திருமூலரும் தம் திருமந்திரத்தில் வடிவமைத்துக் காட்டுகின்றார்.

தானான வாறெட்ட தாம்பரைக் குண்மிசை
தானான வாறுமீ ரேழுஞ் சமகலை
தானான விந்து சகமே பரமெனுந்
தானாம் பரவா தனையெனத் தக்கதே.


தக்க பராவித்தை தானிரு பானேழில்
தக்கெழு மோருத் திரஞ் சொல்லச் சொல்லவே
மிக்கிடும் எண்சத்தி வெண்ணிற முக்கண்ணி
தொக்க கதையோடு தொன்முத் திரையாளே.

-திருமந்திரம் 1150, 1151

பராசக்தியானவள் ஆறு ஆதாரங்களி லும் முறையே ஐட ராகினி, குண்டி லினி, ராகினி, லாகினி, காசினி, சாகினி ஆக வீற்றி ருக்கிறாள். இவ் விதமே யோக நிலை எட்டிலும் வாமாதி சக்திகள் வீற்றிருக்கிறார்கள். இப்படியே சக்தி மயமான ஆறு வழி களிலும் பதி னான்கு உலகங் களிலும், கலை வடிவாகச் சமைந்த விந்துவிலும், உலகத்திலும், பரத்திலும் அவள் கலந்திருப்பாள். அவளின் இந்த நிலை பரவாதனை எனக் கூறத்தக்கது.

இங்கு குறிப்பிடப்பட்டு தானான ஆறும் ஈரேழும் சமைகலை என்பதானது பராசக்தியானவள் தான் எழுந்தருளியிருக்கின்ற ஆதாரங்கள் ஆறும், பதினான்கு புவனங்களும் கலையில் சமைந்தவை. ஸ்ரீ வித்தையில் நடுவில் முக்கோணத்தைச் சுற்றியுள்ள சட்கோணமும் அதற்கு

வெளியிலுள்ள அந்தர்தசாரம் பகிர்த்தசாரம் இதையடுத்து விளங்குவதான சதுர்த்த சாரத்தைக் குறிப்பதாகும்.




இஃது கலையின் காரியமான அனுஸ்வாரம் விசர்க்கங்களாகிய ஈரொலியும் இல்லாத பதினான்கு சுவரங்களோடு விளங்கும் பதினான்கு உலகங்களுக்கும் காரணமாக இருக்கும். இப்படி எல்லாம் சக்தி மயமாக உணர்தல் பரவாசனை எனப்படும். அஃதாவது உடல் யோகம், தரிசனம் என்ற சாமான்ய நிலை நீங்க, எல்லாம் அவளே என்று வாசனை மேனிலைக்கு வாயிலாகும். ஆதலால் இஃது பரவாதனை எனப்பட்டது. அபர வாசனை என்பது புற உலகைக் குறித்து நின்றது.

இந்த பராசக்தி வடிவான ஸ்ரீ வித்தை (ஸ்ரீ சக்கரம்) இருபத்தேழு கோடுகளைக் கொண்டது. ஒன்பது முக்கோணங்கட்கும் ஒவ்வொன்றுக்கு மூன்று கோடுகளாக இருபத்தேழு கோடுகளாகிய வரையால் ஆனது. நாற்பத்து

முக்கோணமாகிய ஸ்ரீ சக்கரம்.

ஒளி வடிவான பிந்துவைச் சுற்றியுள்ள திரிகோணத்தை அடுத்து விளங்கும் வசுகோணமாகிய எட்டுக் கோணச் சக்கரத்துள் வசினி, காமேஸ்வரி முதலான வாக்கு தேவதைகள் எண்மரும் வெளிப்படுவர்.

சக்கரம் முழுமையும் வெண்ணிறமான முக்கண்களையும் அபய வரத முத்திரைகளையும் உடைய பராசக்தியின் வடிவம் தோற்றமளிக்கிறது என்று திருமூலர் ஸ்ரீ சக்கரத்தின் வடிவத்தைப் புகலுகின்றார். வடமொழியில் ஸ்ரீ சக்கரம் என்று குறிப்பிட்டதைத் தம் திருமந்திரத்தில் பராவித்தை என்று குறிப்பிட்டு விளக்கமும் அளிக்கின்றார்.



22. ஏரொளிச் சக்கரம்

ஏர் - எழுச்சி அல்லது அழகு. ஒளி - வெளிச்சம். ஏரொளிச் சக்கரம் - மேல் நோக்கிய ஒளி வடிவான சக்கரம். மூலக்கனல் எங்கும் வியாபித்து அனைத்தையும் தம்முள் அடக்கி வேறொன்றும் தோன்றாமல் தானொன்றேயாகி தோற்றமளிக்கும் அனுபவமே ஏரொளிச் சக்கரமாகும்.

மூலாதாரத்துள் முளைத்து எழுகின்ற தாமரையானது நாலிதழ் உள்ள மிக்க ஒளி வடிவினை உடையது. அது விந்து சத்தியினால் எழுகின்ற நாதத்தை உடையது. நிவிருத்தி கலை அந்தமான வன்னி மண்டலம் முழுதும் அது நிறைந்த பின்னர் நடுவே வன்னி பீசமுடையதாக விளங்கும்.

கரிய ஒளியானது அண்ட வடிவான பேருலகை மூடி, உலகங்கள் எங்கும் மண், நீர், தீ, காற்று, வான் ஆகிய ஒளிகளாக ஒக்க வளர்ந்து கிடந்து பிறகு ஒரே ஏரொளியாக நிறைந்து பர்ந்து நிற்கின்றது இந்த ஏரொளி.

சக்தியின் ஆற்றலாலேயே ஐம்பெரும் பூதங்களும் ஒளி வடிவாகத் தோன்றுகின்ற இவை அனைத்தும் ஒரே வடிவாக ஏரொளியாகக் காட்சியைத் தருகின்றது. இந்த ஏரொளிச் சக்கரத்தை இரண்டு வடிவங்களில் அமைத்து ஆறாதார ராசி சக்கரமொன்றினையும் குறிப்பிட்டு அமைக்கின்றார்.

ஏரொளிச் சக்கரத்தின் முதல் வடிவம் ஐம்பூத கமலச் சக்கரம்.

காரொளியாகிய சக்தியாலேயே பஞ்ச பூதங்களும் தோன்றின. இப் பஞ்ச பூதங்களையும் தாரகா மண்டலச் சக்கரமாக அமைத்துக் காட்டுகின்றார் திருமூலர்.

கண்டிடு சக்கரம் வீந்து வளைவதாங்
கண்டிடு நாதமுந் தன்மேல் எழுந்திடக்
கண்டிடு வன்னிக் கொழுந்தன வொத்தபின்
கண்டிடு மப்புறங் காரொளி யானதே.

காரொளி அண்டம் பொதிந்துல கெங்கும்
பாரொளி நீரொளி சாரொளி காலொளி
வானொளி ஒக்க வளர்ந்து கிடந்தபின்
நேரொளி ஒன்றாய் நிறைந்தங்கு நின்றதே.

-திருமந்திரம் 1249, 1250

இந்தத் தாரக மண்டலச் சக்கரம் விந்துவின் நாதமாகிய நேர்கோடு பொருந்த அமைவது. சக்கரங்களை நேர் கோடாக இழுக்காமல் விந்து அதாவது புள்ளிகளை வைத்து ஒரு புள்ளிக்கும் மற்றொரு புள்ளிக்கும் இடையே தண்ட வடிவான நாதத்தை யிழுத்து அமைத்தல் வேண்டும்.


சக்கரங்கள் அனைத்துமே விந்து நாத வடிவம். விளக்கொளி சிவம். அதனுள் இருக்கும் கரிய ஒளி சக்தி. இவையிரண்டும் கூடிய ஒளி சிவம். விளக்கொளியினுள் இருக்கும் புகை மண்டலம் சக்தி. இவற்றை சக்கரங்களாக அமைத்து தியானிக்கின்ற பொழுது சக்கரத்தினிடமாக தோன்றுகின்ற சோதி மண்டலம் சிவம். சோதிக்குமேல் காணப்படுகின்ற காரொளி மண்டலம் சக்தி என்று இனம் பிரித்துக் காட்டுகின்றார் திருமூலர்.

ஏரொளி சக்கரத்தின் இரண்டாம் வடிவம் தாரகைச் சக்கரம். தாரகையின் மேல் ஒரு பேரொளிப் பிழம்பாகிய சிவம் தழைத்து விளங்கியது. அதனால் நட்சத்திர மண்டலத்தில் சூரியனும் சந்திரனும் வர நட்சத்திர மண்டலமானது நட்சத்திர ஒழுங்கு போன்ற அக்கர வடிவாகக் காணப்பெறும். இதனுள் சிவயநம என்னும் திருவைந்தெழுத்தை தலை முதலாக மாறி அமைத்துத் தியானிக்கின் சிவ சூரிய தரிசனம் சித்திக்கும் என்று கூறுகின்றார்.


தாரகை யாகச் சமைந்தது சக்கரந்
தாரகை மேலோர் தழைத்தது பேரொளி
தாரகை சந்திரன் நற்பக லோன்வரத்
தாரகை தாரகை தாரகை கண்டதே.

-திருமந்திரம் 1248

ஐம்பூதக் கமலச் சக்கரம்



தாரகைச் சக்கரம்



இந்த வண்ணம் கடந்து நின்ற சிவமே காலதேவதையாய் ஆண்டு, இருது, மதி, நாள் முதலிய காலமாயிற்று.

பன்னிரண்டு இராசிகளும் மூன்று வீதிகளாம். அவை மேட வீதி, இடப வீதி, மிதுன வீதி என்பன. அவற்றுள் இடபம், சிங்கம், மிதுனம், கடகம் இணைய நான்கும் மேட வீதி, மீனம், மேடம், கன்னி, துலாமும் ஆன இடப வீதிகளாய் அமைந்தன. இந்த இராசிகள் பன்னிரண்டிலும் சூரிய கதி இயங்கும். இவை ஆறாதாரங்களில் பன்னிரண்டு இராசியும் இருபத்தேழு நட்சத்திரங்களும் நிற்கும் முறை இங்கு சுட்டப் பெறுகின்றது.

ஆறாதாரங்களிலும் ஆதாரம் ஒன்றுக்கு இரண்டு ராசியும் நாலரை நட்சத்திரமுமாக பிரித்து நிலை பெற்ற விந்து முதலாக உள்ள எழுத்தெல்லாம் நாதம் ஒலிப்பிக்க ஒலித்து நிற்கும். அந்த எழுத்துக்கள் அந்தந்த இராசியுட் பொருந்திவரின் பிறகு நட்சத்திரங்கள் நிலை பெறும்.

இராசியுட் சக்கரம் எங்கும் நிறைந்தபின்
இராசியுட் சக்கர மென்றறி விந்துவாம்
இராசியுட் சக்கர நாதமும் ஒத்தபின்
இராசியுட் சக்கரம் நின்றிடு மாறே.

-திருமந்திரம் 1246

ஆறாதாரங்களிலும் இராசிச் சக்கரம் பொருந்தத் தியானிக்க ஒளியும் ஒலியும் நிறைந்து தோன்றும். இதுவே அகமுகத் தியானத்தில் இராசிச் சக்கரம் நிலைபெறும் வழியாகும்.

ஏரொளிச் சக்கரத்தையும் அதன் மந்திரங்களையும் ஷட்கன்ம வித்தையாகிய தம்பனம், மோகனம், உச்சாடனம், வித் வேஷணம், மாரணம், வசியம் ஆகிய காமியங்களுக்குப் பயன்படுத்தின் அஃது ஏரொளி யாகாது. தீமையே பயக்கும் என்றும் எச்சரிக்கின்றார்.

மீனம் I	மேடம் II	இடபம் 1	மிதுனம் 2
க கும்பம்			3 கடகம்
உ மகரம்			4 சிம்மம்
ங தனுசு	ச விருச்சிகம்	III துலாம்	IV கன்னி

இந்தச் சக்கரத்தை உள்ளவாறு உணர்ந்து தியானிக்கும் அன்பர்களை ஞான சக்தியாகிய பராசக்தியும், கிரியா, இச்சா சக்திகளாகிய திருமகளும் மதித்துச் சேரு முன்னர் எண்ணிச் சொல்லப் பெற்ற ஷட்கன்ம வித்தைக்கும் காரணமாயின் பஞ்ச பூதங்களும் தம்முள் சினந்து ஒன்றோடொன்று மாறுபட்டு அவையாவும் ஒருங்கு கூடுதலாகிய ஏரொளியாகாமை யால் அதனால் தீமையே விளையும்.

போகம் முக்தியென்ற இரண்டு பயனும் விளைவிக்கும் இந்த ஏரொளிச் சக்கர மந்திரங்கள் தம்பன்மாகிய காரியங்களைச் செய்யுமாயினும் அவைகளுக்கு இதைப் ப்யன்படுத்தின் பஞ்ச பூதப் பிணக்கற்ற ஏரொளியாக எழுச்சி விளைக்காது என்று திருமந்திரம் மொழிகிறது.

23. வயிரவச் சக்கரம்

வயிரவர் சிவபெருமானின் கோப மூர்த்தங்களில் ஒன்று பகை முதலியன வெல்ல இவரை வணங்குவது மரபு. வயிரவர் என்ற சொல்லிற்குப் பயம் விளைவிப்பவர் என்பது பொருள்.

வளர்பிறை ஒன்று முதல் ஆறு வரை ஆறாதாரங்களிலும் காணப்படும் திதிகள்.

மேலே ஏழாம் பிறைமுதல் பொருந்தும் பிறைகளை ஒன்று விட்டு ஒன்றாக எண்ணுங்கால் ஏழை விட்டு எட்டும், ஒன்பதை விட்டுப் பத்தும், பதினொன்றை விட்டு பன்னிரண்டும் பதின்மூன்றை விட்டுப் பதினான்கும் ஆகிய நான்கும் முன்னுள்ள ஆறும் கூட்டப்பத்தாகும்.

இதுவே வயிரவச் சக்கரம் அமைக்கும் முறையாகும் என்று திருமூலர் கூறுவது சற்றுக் குழப்பமான விஷயமாகத் தென்படுகிறது.

ஆயினும் சற்றுக் கூர்ந்து நோக்கின் சில உண்மைகள் புலனாகும்.

தமிழில் பத்து என்ற எண்ணின் வடிவு ய. இஃது சூலம் போலிருக்கின்றபடியால் ஒன்றை விட்டு ஒரு கோட்டில் சூலம் கீற வேண்டும்.

தெரிந்த முதற்கோட்டோடு (முதற் திதியாகிய பிரதமை) ஆறு ரேகைகளை மறித்து எழுதி (ஆறாதாரங்களையும் கடந்து) இதற்கு மேல் ஏழு வரைகளைக் கீறி, மீண்டும் ஒன்று விட்டு ஒன்றான அறைகளில் (அஷ்டமி, தசமி, துவாதசி, சதுர்த்தசி) 'ய' வடிவம் வர அறிந்து வலப்பக்கமாக நடக்க வேண்டும்.

இங்கு பிரதமை முதலியன திதிகளை உணர்த்தாது ஒன்று முதலான எண்ணளவாக உணர்த்தின. பத்து என்ற எண்ணின்

வடிவு ய எனச் சூலம் போலித்தலின் ஒன்றை விட்டு ஒரு கோட்டில் சூலம் தீறும் முறை உணர்த்திற்று.


இப்படி கோடுகளை வரைந்து பைரவ மூல மந்திரத்தை (காயத்திரியை?)க் குருமுகமாகக் கேட்டுஇந்தச் சக்கரத்தின் முப்பத்தாறு அறைகளிலும் அமைக்க வேண்டும்.

இப் பைரவ மந்திரத்திற்கு முதல் தானமாகிய மூலாதாரத்தோடு ஆஞ்ஞையாகிற ஆறாதாரங்களையும் அறிந்து, அதற்கு மேல் அறியப்பட்ட ஏழாமிடமாகிய உச்சிக்கு மேல், இவ்வுகளை ஒழித்து நின்ற மேல் மூன்று தானங்களுள் ஒன்றை விட்டு ஒன்றில் பிராணனானது பொருந்த அறிந்து பிங்கலை வழியாக சுவாசத்தை நடத்த வேண்டும்.

இவ்வாறு வயிரவச் சக்கரத்தையும் அதன் வழிபாட்டையும் திருமந்திரம் தெரிவிக்கின்றது.

அறிந்த பிரதமையோ டாறு மறிஞ்சு
அறிந்தவச் சத்தமி மேலிவ் குற்றம்
அறிந்தவி யொன்றுவிட் டொன்பத் தாக
அறிந்து வலமது வாக நட்டே.

–திருமந்திரம் 1267



மூலாதாரம் நான்கு இதழ்கள் கொண்ட தாமரையின் வடிவத்தில் இருக்கிறது. சுவாதிட்டானம் ஆறு இதழ்களோடு கூடிய தாமரை. மணிபூரகத் தாமரையின் இதழ்கள் பத்து. அனாகதம் என்னும் அடுத்த நிலை பன்னிரண்டு இதழ்கள் கொண்ட தாமரையின் வடிவத்தில் அமைந்திருக்கிறது. விசுத்தியின் தாமரை வடிவத்திற்குப் பதினாறு இதழ்களாம். ஆறாவது ஆதாரமாகிய ஆக்ஞை இரண்டு இதழ் தாமரையாகும்.

இந்த முடிவான நிலையாகிய ஆக்ஞை என்ற மையத்தில்தான் பரம்பொருளின் திருவடியைக் காணலாம் என்று திருமூலர் கூறுகின்றார்.

மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், விசுத்தி, அனாகதம், ஆக்ஞை என்பவற்றை திதிகளாகக் குறிப்பிட்டு சக்கரத்தை திருமூலர் உணர்த்துகின்றார்.

இதனை சரநிலை உணர்த்தும் சக்கரமாகவும் ஞானிகள் கொள்வர். அதாவது வளர்பிறை பிரதமை முதல் துவிதயை, திருதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி வரையிலும், அதற்கு மேல் சப்தமி விட்டு அஷ்டமி, நவமி விட்டு தசமி, ஏகாதசி விட்டு துவாதசி, திரயோதசி விட்டு சதுர்த்தசி ஆகிய பத்து நாட்களிலும் சரமானது வலப்பக்கமாக இருக்க சுவாசம் நடைபெறவேண்டும் என்று சரநிலை உணர்த்துகிறது இச்சக்கர அமைப்பு.

இந்தச் சக்கரத்தையே யன்றி இதன் அதிதேவதை யாம் வயிரவ மூர்த்தியையும் வடிவமைத்துக் காட்டுகின்றார் திருமூலர்.

உயிர்கள் விரும்பும்படியான திருவருளைச் சுரக்கின்ற வயிரவர் திருக்கரங்களில் கபாலமும், சூலமும், தமருகமும், பாசமும், வெட்டுண்ட தலையும், வாளும் ஏந்தி விளங்கும். அந்தத் திருக்கரங்களில் அமைந்துள்ள ஆயுதங்கள் ஆறையும்

மனம் பொருந்தத் தியானிக்க அவன் திருமேனியானது செம்மை நிறமாகக் காட்சியளிக்கத் தொடங்கும்.

வயிரவர் பகைவனை அழிப்பவர். அவரைத் தியானிப்பவர் மனத்தில் சூலத்தையும் கபாலத்தையும் ஏந்தியவராக, நாம் நினைத்து நடுங்கும் பகைவர்களைப் பந்தாடுவார்.

இப்படிப்பட்ட வயிரவரைச் சாந்து, சவ்வாது, புனுகுச் சட்டம் பிழிந்த எண்ணெய் இவற்றைச் சார்த்தித் தேனை நிவேதனப் பொருளாக வைத்து ஓராயிரம் முறை உருச் செபித்துப் பூசிக்க வேண்டும். அப்பொழுது நாம் விரும்பிய வண்ணம் பகைவருக்குள் கலகம் உண்டாகும்.

நாம் விரும்பிய ஷட்கன்ம வித்தைகளையும் பெறலாம் என்று வயிரவர் பெருமையையும், வயிரவச் சக்கரத்தின் பெருமையையும் திருமூலர் குறிப்பிடுகின்றார்.

24. புவனாபதி சக்கரம்

அம்மை புவனை (புவனேஸ்வரி) பாலை, திரிபுரை எனப் பரிபாகிகளின் தகுதிக்கேற்ப நின்று அருள் வழங்குவாள். அந்த அம்மை நிலவும் சக்கரத்தை அமைப்பதால் புவனாபதி சக்கரம் என்று அழைக்கப் படுகிறது.

திருமூலர் வட்டெழுத்து வழங்கிய மிகப் பழங்காலத்தவர். அவர் காலத்து தீந்தமிழின்கண் ஐம்பத்தோர் எழுத்து வழக்கிலிருந்தன. (உயிர் 16, மெய் 35). அதனால் உயிர் 16ஐ புவனாபதி சக்கரத்தில் அமைக்கும்படிக் கூறுகிறார்.)

ஒரு தாமிரத் தகட்டில் அறுகோணம் ஒன்றைத் தயாரித்து, அவ்வாறு கோணத்தின் மையத்தில் 'சிரீம், கிரீம்' வரைந்து கொள்ள வேண்டும். பின்னர் அந்த ஆறு கோணங்களின் உச்சியிலும் 'ரீம்' என்பதனை எழுதி எல்லாக் கோணங்களையும் சூழ அழகிய வட்டம் எழுதி அதன் மேல் பதினாறு உயிர்களையும் அகரமுதலாக எழுத வேண்டும்.


தாமரை இதழ்களின் நடுவிலுள்ள வெளியில் 'ஹ' என்னும் எழுத்தையும் 'உ' என்னும் எழுத்தையும் சேர்த்து எழுதி நெருங்கி இருக்கின்ற இதழ்களின் மேல் 'கிரோம், சிரோம்' என்பவற்றை எழுதி அதன் இடப்பக்கத்தில் 'கிரோங்கு' என்று வரைதல் வேண்டும்.

இந்தச் சக்கரத்தின் வலப்பக்கத்தில் மாலை போன்று பீஜ எழுத்துக்களான குரோங், சிரோங் என்பதை வரைந்து சக்கரத்தைச் சூழ்ந்து ரீம் என்ற ரீங்காரத்தை வரைதல் வேண்டும். இதுவே புவனாபதி சக்கரம்.

ஏதும் பலமாக மிந்திரா சன்னடி
ஓதிக் குருவின் உபதேசம் உட்கொண்டு
நீதங்கும் அங்க நியாசந் தனைப்பண்ணிச்
சாதங் கெடச்செம்பிற் சட்கோணந் தானிடே

சட் கோணந் தன்னில் சிரீம்ஹிரீம் தானிட்டு
வட் கோண மாறின் தலையில்ரீங் க்ரமிட்டு
எகன்கோண முஞ்சூழ எழில்வட்டம் இட்டுப்பின்
மிக்கீரெட் டக்கர மம்முதன் மேலிடே.

இட்ட இதழ்கள் இடையந் தரத்திலே
அட்டஹவ் விட்டதின் மேலே உவ்விட்டுக்
கிட்ட இதழ்களின் மேலே கிரோம் சிரோம்
இட்டுவா மத்தாங் கிரோங்கென்று மேவிடே.



மேவிய சக்கர மீது வலத்திலே
கோவை யடைவே குரோங்சிரோங் கென்றிட்டுத்
தாவில்ரீங் காரத்தாற் சக்கரஞ் சூழ்ந்து
பூவைப் புவனா பதியைப்பின் பூசியே

-திருமந்திரம் 1286 -1289

யந்திரங்களுள் சிறந்ததான இந்த புவனாபதி யந்திரத்தை முறைப்படி வழிபடல் வேண்டும். மேலாடையின்றித் தோத்தரித்து, நூல் விதிப்படியே பூசித்து, பாலன்னத்தை மந்திரத்தோடு செபித்து, நிவேதித்து, நான்கு திசைகளிலும் **'நாரதாயா சுவாகா'** என்று நிவேதித்து நைவேத்ய சேடத்தை உண்ணல் வேண்டும்.

இந்த வகை நியமத்தோடு வழிபடுவோரின் மனத்துள் சிவந்த மேனியளாய், செம்பட்டுடை உடுத்தி, கையில் அங்குசம், பாசம் ஆகிய படைகளையும் அபய வரதத்தையும் தாங்கி, திருமேனியில் அணிகலன்களையும் இத்தினாபரணங் களையும் தாங்கி, தூய கிரீடத்தோடு வடிவு கொண்டு அன்னை புவனாபதித் தோன்றுவாள். இந்தப் பராசக்தியே இறைவனுக்கு அங்கமாவாள். அவளே அட்டமா சித்திகளும் அட்டாங்க யோத்துறு பயனையும் விளங்குபவள். அவளது திருமேனி பராவித்தையாம். அஃது முக்தியையும் சித்தியையும் தருவதாகும். ஆகவே அவளை மிக்க அன்போடு வழிபடுதல் வேண்டும்.

இப்படி வழிபடுதல் பொருட்டு நெஞ்சத் தாமரையினின்றும் வெளிப்படுத்தி அழைத்து சக்கரத்துள் இழைத்த புவனாபதி அம்மனை மீண்டும் நெஞ்சத் தாமரையுள் நுழைத்தலாகிய உத்வாகனம் செய்து அன்புடன் நினைத்து நெஞ்சத்தே இழைத்தலாகிய பதிவித்தலை (இயந்திரத்துள் அடைத்தல்) இயந்திரராசனாகிய புவனாபதி சக்கரத்தை நீ ஓம்பி வைத்து வழிபட்டு வருவாயாக. அச்சக்கரம் நீ கருதிய அனைத்தும் கைகூடச் செய்யும் என்று புவனாபதி சக்கரத்தின் பெருமையைத் திருமூலர் விவரிக்கின்றார்.

25. நவாக்கரி சக்கரம்

நவாக்கரி என்றால் புதுமையான அக்கரி புதிதான வியக்கத்தக்க ஏகாட்சரி சக்கரம்.

சிவ: சி சிவனுக்குரிய எழுத்து. வ சக்திக்குரியது. அந்த அம்மைக்குரியது நவாக்கரிச் சக்கரம். வ என்ற ஓரெழுத்து ஸௌம், ஔம், ஹௌம், ஆம், க்ரீம், க்ளௌம், ஐம், ரீம், ஸ்ரீம் என்று ஒன்பது எழுத்துக் கொண்ட தேவி மந்திரமாக அமையும் (சௌ, ஔ, ஹௌ, கிரீம், கௌ, ஐ, இரீம், சிரீம், கிலீம்).

இந்த ஒன்பது எழுத்துக்களும் மாறி, மாறி எண்பத்தொரு வகையாய் விரிவடையும். இந்த நவாக்கரி எழுத்து முதற்கண் கிலீம் என்பதாகத் துவங்கி முடிவில் சௌ என்று முடிவுறும்.

இந்த நவாக்கரி சக்கரத்தை வெள்ளி, பொன், செம்புத் தகடுகளில் பொதித்து மனத்திலும் தியானிக்க வேண்டும்.

இதனை தன் செவிக்கும் பிறர் செவிக்கும் கேட்கா வண்ணம் ஓத நவாக்கரி சக்தி நன்மைகளை அருளுவாள். ஞானம், கல்வி முதலிய நலமெல்லாம் கிடைக்கும். வன்மை மிக்க பிரார்த்த சஞ்சித ஆகாமிய வினைகள் யாவும் அவரை விட்டு நீங்கும்.

இப் பிறவியில் அறியாமையால் ஈட்டப்படும் தலையான தீவினைகளை நீக்கி நல் வரங்கள் கிடைக்கும். யோகத்தின் முடிவில் பெறப்படும் ஒளிக்காட்சியும் ஏற்படும்.

பொன், வெள்ளி, மாணிக்கம் முதலிய கற்கள் எல்லாம் தாமே வந்து சேரும். பராசக்தியின் அருளும் ஞானமும் வரும். தேவர்கள் வாழ்வு சித்திக்கும். திருமூலர் இந்த நவாக்கரி சக்கரத்தை அமுதேஸ்வரி சக்கரம் என்றும் குறிப்பிடுகின்றார்.

தானே எழுந்தஅச் சக்கரஞ் சொல்லிடின்
மானே மதிவரை பத்திட்டு வைத்தபின்
தேனே யிரேகை திகைப்பற ஒன்பதில்
தானே கலந்த வரையெண்பத் தொன்றுமே.

ஒன்றிய சக்கரம் ஓதிடும் வேளையில்
வென்றிகொள் மேனி மதிவட்டம் பொன்மையாங்
கன்றிய ரேகை கலந்திடுஞ் செம்மையில்
என்றிய லம்மை எழுத்தவை பச்சையே

-திருமந்திரம் 1339, 1340

க்லீம்	ஸௌம்	ஔம்	ஹ்ராம்	ஹ்ரீம்	கௌம்	வௌம்	ரீம்	ஸ்ரீம்
ஸௌம்	ஔம்	ஹ்ராம்	ஹ்ரீம்	கௌம்	வௌம்	ரீம்	ஸ்ரீம்	க்லீம்
ஔம்	ஹ்ராம்	ஹ்ரீம்	கௌம்	வௌம்	ரீம்	ஸ்ரீம்	க்லீம்	கௌம்
ஹ்ராம்	ஹ்ரீம்	கௌம்	வௌம்	ரீம்	ஸ்ரீம்	க்லீம்	கௌம்	ஔம்
ஹ்ரீம்	கௌம்	வௌம்	ரீம்	ஸ்ரீம்	க்லீம்	கௌம்	ஔம்	ஹ்ராம்
கௌம்	வௌம்	ரீம்	ஸ்ரீம்	க்லீம்	கௌம்	ஔம்	ஹ்ராம்	ஹ்ரீம்
வௌம்	ரீம்	ஸ்ரீம்	க்லீம்	கௌம்	ஔம்	ஹ்ராம்	ஹ்ரீம்	கௌம்
ரீம்	ஸ்ரீம்	க்லீம்	கௌம்	ஔம்	ஹ்ராம்	ஹ்ரீம்	கௌம்	வௌம்
ஸ்ரீம்	க்லீம்	கௌம்	ஔம்	ஹ்ராம்	ஹ்ரீம்	கௌம்	வௌம்	ரீம்

இந்தச் சக்கரத்தை குறுக்கும் நெடுக்குமாக பத்துக் கோடுகளாக அமைத்தால் குறுக்காக ஒன்பது அறைகளும் நெடுக்காக ஒன்பது அறைகளுமாக மொத்தம் எண்பத்தொரு அறைகள் அமையும். இந்த எண்பத்தொன்றிலும் எண்பத்தொரு அட்சரங்களாய் விரிவடைந்த சக்தி பீஜாட்சர மந்திரங்களை அமைக்க வேண்டும். இந்த மந்திரச் சக்கரத்தைச் சூழ ஓங்காரத்தை நாதமாக அமைக்கப்படல் வேண்டும்.

சக்கரத்தைச் சுற்றியுள்ள மதி வட்டத்தைப் பொன்னிறமாகவும், ரேகைகளைச் செந்நிறமாகவும் அட்சரங்களைப் பச்சை நிறமாகவும் அமைத்தல் வேண்டும்.

இந்த நவாக்கரிச் சக்கரத்தைச் சூழ் இரு கரங்களிலும் வில்லும் அம்பும் கொண்டு சக்கரத்து எதிரில் யோகினி சக்திகள் அறுபத்து நால்வரும் இருப்பர். இந்த பரிவாரத்து நடுவில் பராசக்தியாகிய தேவி பொன்னாபரங்கள், காதணி, கிரீடம், ஆடை, பருத்த முத்து, நெருப்பொத்த மேனி இவற்றுடனாய், அங்கே காட்சியளிப்பாள். இந்த ஸ்ரீம் பீஜ வடிவாகிய அம்மையைத் தியானிக்கில் ஓராண்டில் ஆசையடங்கி மனமானது ஒடுங்கிச் சிவ சூரியன் திருவடியை அடைதலாகிய சிவப்பேறு சித்திக்கும்.

இந்த சக்தி பூசனையால் ஆணவம் அகலும், பராகாயத்தில் பராசக்தியைத் தரிசிக்கலாம் என்று நவாக்கரிச் சக்கரத்தைப் பெருமைப்படுத்தும் திருமூலர் இதனையே இன்னும் சற்று விளக்கமாக 1393 திருமந்திரத்தில் கூறுகின்றார்.

அறுபத்து நான்கு கிரணங்கள் ஆன்மாவுடன் கலந்துள்ளது. அவ்வறுபத்து நான்கு ஒளியாகிய கிரணங்களிலும் உள்ளொளியாய் சிவம் விளங்கும். அந்தச் சிவமானது நவாக்கரி சக்கரமாகிய அறுபத்து நாலறைகளிலும்

இருக்கும். சுழி வடிவாய பிரணவமும், கோடாகிய நாதமும் அவ்வாறு பத்து நான்கு கிரணங்களிலும் விளங்கும் என்று திருமூலர் நவாக்கரி சக்கரத்துக்கு விளக்கமளிக்கின்றார்.

ஆனை மயக்கும் அறுபத்து நாற்றறி
ஆனை யிருக்கும் அறுபத்து நாலொளி
ஆனை யிருக்கும் அறுபத்து நாலறை
ஆனையுங் கோடும் அறுபத்து நாலிலே.

-திருமந்திரம் 1393

26. அஷ்ட கன்ம சக்கரங்கள்

அஷ்ட கன்மம் என்பது சித்தர்கள் பிறர் நலம் கருதிச் செய்யும் எட்டு வகையான அற்புதச் செயல்களைக் குறிக்கும்.

1. வசியம்	2. மோகனம்	3. தம்பனம்
4. உச்சாடனம்	5. ஆகர்ஷணம்	6. வித்துவேஷணம்
7. பேதனம்	8. மாரணம்.	

ஆகிய இந்த எட்டுச் செயல்களும் அஷ்டகன்மம் என்று சொல்லப்படும். இந்த எட்டையும் அஷ்டமா சித்துக்களாகவும் சித்தர்கள் சிறப்பிப்பார்கள்.

இந்த அஷ்ட கன்ம வகைகளுள் வசியம், மோகனம், தம்பனம், உச்சாடனம், ஆகர்ஷனம், மாரணம் எனும் ஆறினை மட்டும் திருமந்திரம் மூவாயிரத்தில்விளக்கிச் சொல்லி அதற்கான சக்கர வகைகளையும் குறிப்பிடு கின்றார்.

1. வசியம்:

பனையோலை யொன்றில் 'சிவாயநம' எனும் ஐந்தெழுத்தை மகார முதலாக வடிவமைத்து (வயநமசி)

வரைந்து, அதன் மேல் அரிதாரமாகிய* மருந்து பூசி அதன் மேல் அகார உகாரங்களை எழுதி வில்வ மரப் பலகையின் மேலும் வயநமசி வரைந்து அதன்மேல் பனையோலைச் சக்கரத்தினையும் வைத்து, வசியமென்னும் கவர்ச்சி அமைத்தற் பொருட்டு அம் மந்திரத்தினை எண்பதினாயிரம் தடவை திருவுரு ஏற்றுதல் (ஜெபம் செய்தல்) வேண்டும்.



இதனால் கொடிய பகைவர்களும் நம் எண்ணத்துக்கு ஏற்ப பழகுபவர்களாக மாற்றம் பெறுவர்.

ஏய்ந்த வரிதார மேட்டின்மே லேபூசி
ஏய்ந்த வகாரம் உகாரம் எழுத்திட்டு
வாய்ந்ததோர் வில்வம் பலகை வசியத்துக்
கேய்ந்தவைத் தெண்பதி னாயிரம் வேண்டிலே.

-திருமந்திரம் 977

2. மோகனம்:

மோகனம் என்பது ஒருவரைக் கவர்ச்சி செய்தல் அடிமைப்படுத்துதல், மோகப்படுத்துதல் என்று பொருள்படும்

'நசிவயம' என்ற மாரண பஞ்சாக்கரத்தை கொன்றை மரப்பலகையில் தெற்கு முகமாக செதுக்கி அமைத்து மீதமுள்ள இருபதறைகளில் மகர முதலாக மாறி மாறி வரைந்து

*அரிதாரம் என்பது ஒருவகை மெழுகுப் பொருள். அஃது கட்டியரிதாரம், காட்டரிதாரம், கனத்தீ அரிதாரம், தகட்டரிதாரம், தாளகம், பொன்னிதாரம், மடலரிதாரம், வைப்பரிதாரம் என எட்டு வகைப்படும்.

மறைப்பில்லாத ஐங்காயத்தைப்* பூசி, அடுப்பில் தலைகீழாகப் புதைத்தால் மோகன சக்தி உண்டாகும் என்கிறார் திருமூலர்.

வடக்கு

மேற்கு | கிழக்கு

சி	வ	ய	ம	ந
வ	ய	ம	ந	சி
ய	ம	ந	சி	வ
ம	ந	சி	வ	ய
ந	சி	வ	ய	ம

தெற்கு

கரண விரளிப் பலகை யமன்றிசை
மரணமிட் டெட்டின் மகார வெழுத்திட்டு
வரணமி லைங்காயம் பூசி யடுப்பிடை
முரணிற் புதைத்திட மோன மாகுமே.

-திருமந்திரம் 974

3. தம்பனம்:

தம்பனம் என்பது ஒருவரைத் தம்பிக்கச் செய்தல்; அதாவது செயலற்று விடச் செய்தல் (புணர்ச்சியின் போது விந்துவை வெளிப்படுத்தாமல் கட்டுப்படுத்துதலையும் தம்பனம் என்று சித்தர்கள் கூறுவர்).

* ஐங்காயம் - சுக்கு, மிளகு, கடுகு, உள்ளி, வெள்ளுள்ளி என்பன. இதில் வெள்ளுள்ளியை நீக்கி பெருங்காயம் என்பதனைக் கூட்டி ஐங்காயம் என்று எண்ணுவாரும் உளர்.

நிலைபெற்ற அரசம் பலகையின் மேல் நேராகப் பொருந்த மகார முதலாக (மசிவயந) என்னும் தம்பன மந்திரத்தை மாறியமைத்து அதே முறையில் பனை ஓலையிலும் அம்மந்திரத்தை வரைந்து தேன் மெழுகைப் பூசி அதனைச் சிறிது வெப்பமுறக் காட்டி அப்பலகையின்மேல் வைத்து, அம் மந்திரத் திருவுருவினுக்குப் பூவும் புனலும், புகையும், ஒளியும், பாவும் பிறவும் கொண்டு வழிபாடு செய்தல் வேண்டும். அப்படி செய்யின் எதிரியைச் செயற்படாதவாறு கட்டுப்படுத்தும் தம்பனமாகிய சாதகம் சித்திக்கும் என திருமூலர் கூறுகின்றார்.

ம	சி	வ	ய	ந
ந	ம	சி	வ	ய
ய	ந	ம	சி	வ
வ	ய	ந	ம	சி
சி	வ	ய	ந	ம

நின்ற அரசம் பலகைமேல் நேராக
ஒன்றிட மவ்விட்டு ஓலையிற் சாதகந்
துன்று மெழுகையுள் பூசிச் சுடரிடைத்
தன்ற வெதுப்பிடத் தம்பனங் காணுமே.

-திருமந்திரம் 393

4. உச்சாடனம்:


உச்சாடனம் என்பது இருப்பிடத்தை விட்டு விரட்டும் தொழில்.

வடமேற்குப் புலமாகிய வாயு மூலையில் அரி அரர் மகனாகிய ஐயனார் கோவிலில் புரசம் பலகையில் (பூவரசு?) வெப்பமுள்ள கரிய தகட்டில் நஞ்சு பூசி விந்துவாகிய வட்டம் வரைந்து அதன்மேல் ஓங்காரம் அமைத்துப் பூசித்தால் உச்சாடனம் ஆகிய ஏவுதல் என்பர். இதனைச் சக்கரத்தின் வடமேற்கு மூலையில் விந்துவாகிய மகாரத்தை விலக்கி ஓ என்பதை மட்டும் உச்சாடன மந்திரமாக அமைப்பதும் உண்டு.

ஆங்கு வடமேற்கில் ஐயனார் கோட்டத்திற்
பாங்கு படவே பலாசப் பலகையிற்
காங்கரு மேட்டிற் கடுப்பூசி விந்துவிட்டு
ஓங்காரம் வைத்திடும் உச்சா டனத்துக்கே.

-திருமந்திரம் 975





5. ஆகர்ஷ்ணம்:

ஆணைக்குக் கீழ்ப்படியும் செயல் ஆகர்ஷணம் எனப்படுகிறது.

ஒரு வியாழக்கிழமையில் ஓலையொன்றில் யகார

முதலாக பஞ்சாட்சரத்தை மாறி எழுதி (யநமசிவ) அவ்வோலையின் மேல் வெள்ளிப் பற்பத்தைப் பூசி அதனை வெண்நாவல் பலகையின் மேல் வைத்து மேற்குத் திசை நோக்கி அமர்ந்து, எண்ணாயிரம் எண் உருவேற்றுதல் வேண்டும். இதுவே ஆகர்ஷ்ணம் யந்திரம் அமைக்கும் விதி என்று திருமந்திரம் செப்புகிறது.

எண்ணாக் கருடனை ஏட்டின் யகாரமிட்
டெண்ணாப் பொன்னொளி எழுவெள்ளி பூசிடா
வெண்ணாவற் பலகையி லிட்டுமேற் கேநோக்கி
எண்ணா வெழுத்தோடெண் ணாயிரம் வேண்டிலே.

-திருமந்திரம் 978

ய	ந	ம	சி	வ
வ	சி	ய	ந	ம
சி	வ	ய	ந	ம
ம	சி	வ	ய	ந
ந	ம	சி	வ	ய

6. மாரணம்:

மாரணம் என்பது மந்திரத்தால் ஒருவரை மரணப்படுத்தலாகும்.

நண்பகற் பொழுதில் (உச்சி வெய்யிலில்)

ஒளியுடைத்தாகிய வன்னி மூலையென்று சொல்லப் பெறும் தென்கிழக்கு மூலையில் பச்சையான பனை ஓலையில் சுக்கு, கடுகு, மிளகு, உள்ளி, வெள்ளுள்ளி என்னும் ஐந்தினையும் அரைத்துப் பூசி சுடுகாட்டிலே முக்கோணச் சக்கரம் இட்டு அதன்மேல் ஓலையை வைத்திட வேண்டும் என்று மாரணத்திற்கு விளக்கம் தருகின்றார் திருமூலர். இந்த முக்கோணச் சக்கரத்தை முச்சந்தி என்று பொருள் கொள்வாரும் உளர்.

உச்சியம் போதில் ஒளிவன்னி மூலையிற்
பச்சோலை யிற்பஞ்ச காயத்தைப் பாரித்து
முச்சது ரத்தின் முதுகாட்டில் வைத்திடு
வைச்சபின் மேலோர் மாரணம் வேண்டிலே.

-திருமந்திரம் 976

இப்படி அஷ்ட கன்ம வகைகளுள் ஆறினை மட்டும் '**சிவயநம**' பஞ்சாட்சர அட்சரங்களைச் சக்கரத்தினுள் அமைத்து விளக்கிய திருமூலர் தம்முடைய மற்றொரு நூலான திருமந்திர மாலையுள் அஷ்ட கன்ம வகையான எட்டு செயல்களையும் விள்க்கமுறக் கூறி அதனை துருவ இயந்திரங்களாக எண் இலக்கமிட்டு அமைக்கின்றார்.

அஷ்ட கன்ம சக்கரங்கள் வேறுவகை

பஞ்சாட்சர (நமசிவய) எழுத்துக்களுடன் கூடிய அஷ்ட கன்ம சக்கரங்களைத் திருமந்திரத்துள்[1] மேம்போக்காகச் சொன்ன திருமூலர் தமது திருமந்திர மாலையுள் [2] எண், எழுத்துச் சக்கரங்களாக விளக்கமுற எடுத்துரைக்கின்றார்.

மூலன் உரைசெய்த மூவாயிரந் தமிழ்
மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரைசெய்த முப்பது உபதேசம்
மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றாமே *(3046)*

எண், எழுத்துக்களுடன் கூடிய அஷ்டகன்மம் ஒவ்வொன்றிற்கும் பதினாறு அறைகளுடன் கூடிய சக்கரங்களை வரைந்து அதில் பஞ்சாட்சர எழுத்துக்களுக்குப் பதிலாக ப, க, வ, த என்ற எழுத்து வர்க்கங்களுடன் ஒன்று முதல் பதினாறு வரையிலான எண்களைச் சேர்த்து யந்திரத்தை வடிவமைக்கின்றார்.

இந்த பதினாறு அறைகளில் ஒன்று முதல் எட்டு வரை உள்ள அறைகள் ஒவ்வொன்றும் துருவ அறைகள் எனப்படும்.

மீதியுள்ள ஒன்பது முதல் பதினாறு அறைகள் அத்துருவம் எனப்படும்.

துருவ அறைகள் ஒன்றை விட்டு ஒன்றாக அமையும். ஒன்று துருவ அறையானால் மற்றொன்று துருவமல்லாத (அத்துருவ) அறையாக அமைக்கப்படும். பின் இவை இரண்டும் சேர்ந்த நிலையில்முழுச் சக்கரம் (துருவாத் துருவம்) அமைக்கப்படுகிறது.

என்ற திருமந்திரச் செய்யுளால் திருமூலர் 3000, 300, 30 என்ற மூன்று நூல்களைச் செய்தார் எனவும், அவை எண்ணிக்கையில் மூன்றாயினும் பொருளால் ஒன்று என்றும் அறியப்படும். திருமூலர் இயற்றிய மூவாயிரம் பாடல் தொகுதி திருமந்திரம் என்ற பெயராலும், முன்னூறு பாடல்களைக் கொண்ட தொகுதி திருமந்திர மாலை என்ற பெயராலும் முப்பது பாடல்களைக் கொண்ட தொகுதி பெரிய ஞானக்கோவையுள் திருமூலநாயனார் ஞானம் என்ற பெயராலும் வழங்கப்பட்டு வருகின்றன.

இதில் பொருளால் ஒன்று என்று பொதுப்படக் கூறினும் திருமந்திரம் முன்னூறு என்ற இந்நூல் தந்திரக்கலை, மந்திரக்கலை, உபதேசக்கலை என்ற முக்கூறு பாட்டில் தந்திரக்கலைப் பகுதியைச் சார்ந்தது. தெய்வ வழிபாட்டிற்குரிய எண்வகைக் கன்மங்களையும் நான்கு நெறிகளுள் சரியை, கிரியை என்ற இரண்டினையும் கூறுவது தந்திரக்கலை. இக்கலை மந்திரம், இயந்திரம், தந்திரம் என மூன்று பாகுபாடுகளைப் பெறும். அஷ்டகன்மங்களுக்கான சிறப்பு நூலாக இந்த திருமந்திர மாலையை (திருமந்திரம் 300)க் கொள்ளலாம்.

இதில் துருவம் என்பது இறைவன் வடிவென்றும், அத்துருவம் இறைவி வடிவென்றும், துருவாத் துருவம் என்பது இறைவனும் இறைவியும் இணைந்த நிலை யென்றும் கட்சபுட தந்திரத்தில் இவ்வமைப்பிற்கு விளக்கம் கூறப்படுகிறது.

துருவம் என்பது அசைவற்ற நிலை அஃதாவது சிவம் நிலைபெற்ற எழுத்து நிலை. அத்துருவம் என்பது அசையும் சக்தி நிலை. எண்கள் நிலை அசைவற்ற சிவ நிலையில் அசைக்கும் ஆற்றலான சக்தி இணையும்போது அங்கு புதியதொரு செயல் நிகழ்த்தப்பெறும்.

ஆதலால் அந்த இரண்டு நிலை கொண்ட சக்கரத்தில் எண்வகை வினைகளும் நிகழக்கூடும் என்று சித்தர்கள் கூறுகின்றனர். சௌந்தரிய்லகரியில் ஆதி சங்கரரும் இதையே கூறுகின்றார். 1

இந்தத் துருவ அறைகளில் எழுத்துக்கள் அசைவற்ற நிலையில் இருந்து எண்கள் அசைவுற்ற நிலையில் செயல் படுவதால் எண்களின் ஆதிக்கமே இச் சக்கரங்களின் வகைகளை நிர்ணயிக்கின்றது. எண்வகை ஏவல்களையும் இந்த எண்களின் நடன அசைவே நிர்ணயிக்கின்றது.

இந்த எண் அசைவுகளை வாய்பாடுகளாக திருமூலர் கூறுகின்றார். இஃது துருவ நட்சத்திரம் என்று வழங்கப்படும் எண்ணூலில் வழங்கப்படும் ஒருவகைக் கணக்கு வாய்ப்பாடு. இதனைத் துருவ வாக்கியம் என்றும் குறிப்பர்.

துருவ நட்சத்திரமானது, எப்பொழுதும் வானவெளியில் ஏனையவற்றைப் போலத் தோன்றாமலும், மறையாமலும் தான் நின்ற இடத்திலேயே நிற்கும். இஃது அசையாமல் என்றும் வடக்கிலேயே நிற்றலினால் பிற திசைகளைத் தெரிந்து கொள்வதற்கும் இந் நட்சத்திரம் சாதனமாகும். இங்கு சொல்லப்படும் துருவ வாய்ப்பாடுகளும் அவ்வாறிருத்தலின்

1. சிவமெனும் பொருளும் ஆதி சத்தியும் சேரின் எத்தொழிலும் செய்ய வல்லதாம். -சௌந்தர்யலகரி

இப்பெயர் பெற்றது. இஃது ஒப்பின் ஆகிய பெயர். எழுத்து வர்க்கமானது ஓரிடத்திலேயே நிலை கொண்டிருக்க எழுத்து வர்க்கமானது மாறி மாறி அமைவதால் புதிய வடிவ முற்று மாறு பட்ட செயல்களை நிகழ்த்த ஏதுவாகின்றது.

இறைவன் இந்த இயந்திரத்திற் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களில் நிலை பெற்றிருக்க இறைவி அதில் எண்களையும் பீசங்களையும் அங்கமாகத் தாங்கி இவ்வியந்திரங்களில் இணைகின்றாள். இந்நிலையை விளக்கிச் சொல்லும் துருவ வாய்ப்பாடுகளின் சூத்திரமாவது.

ஆடி நிழலின் அறியத் தோன்றி
நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்க
சில்வகை எழுத்திற் செறித்தினிது யாத்துத்
திட்பம் நுட்பஞ் செறிந்தன வாயிருத்தலின்

அவை சூத்திரம் எனப்படும்.

இந்த வாய்ப்பாட்டின்படியே எண்களையும் எழுத்துக்களையும் மாற்றி அமைத்து எண்வகை வினைகளையும் இயக்கம் செய்தனர் சித்தர்கள்.

துருவ வாக்கியம்

ப	க	வ	த
பா	கா	வா	தா
பி	கி	வி	தி
பீ	கீ	வீ	தீ

இலக்கத் துருவ நட்சத்திரம்

எண்வகைக் கன்மங்கள்	துருவ வாய்ப்பாடு (இலக்கம் 1 முதல் 8 வரை)	அத்துருவ வாய்ப்பாடு (இலக்கம் 9 முதல் 16 வரை)
வசியம்	வபா-கிதீ-திகீ ப வா-	பிவீ-தகா கதா - விபீ
மோகனம்	பீவி - தாக காத - வீபி	வாப - கீதி தீகி - பாவ
தம்பனம்	தகா - பிவீ விபீ-கதா	கிதீ- வபா பவா-திகீ
உச்சாடனம்	கீதி - வாப பாவ - தீகி	தாக - பீவி வீபி - காத
ஆகர்ஷணம்	கதா - வி பீ பிவீ-தகா	திகீ- பவா வபா - கிதீ
வித்வேஷணம்	தீகி - பாவ வாப-கீதி	காத - வீபி பீவி-தாக
பேதனம்	பவா-திகீ கிதீ-வபா	விபீ-கதா தகா-பிவி
மாரணம்	வீபி-காத தாக-பீவி	பாவ-தீகி கீதி-வாப

இயக்கத் துருவ நட்சத்திரம்

அஷ்ட கன்ம சக்கரம்	துருவ சக்கரம்	அத்துருவ சக்கரம்
வசியம்	ப வ-பா வா கி தி-கீ தீ	க த-கா தா பி வி-பீ வி
மோகனம்	க த-கா தா பி வி - பீ வீ	ப வ - பா வா கி தி - கீ தி
தம்பனம்	க த - கா தா பி வி - பீ வீ	ப வ - பா வா கி தி - கீ தி
உச்சாடனம்	ப வ - பா வா கி தி - கீ தி	க த - கா தா பி வி - பீ வீ
ஆகர்ஷணம்	க த - கா தா பி வி - பீ வீ	ப வ - பா வா கி தி - கீ தீ
வித்வேஷணம்	ப வ - பா வா கி தி - கீ தீ	க த - கா தா பி வி - பீ வீ
பேதனம்	ப வ - பா வா கி தி - கீ தீ	க த - கா தா பி வி - பீ வீ
மாரணம்	க த - கா தா பி வி - பீ வீ	ப வ - பா வா கி தி - கீ தீ

புவனாபதி சக்கரம்

எண் வினை ஏவல்களுக்கும் தனித்தனியே சக்கரங்கள் வடிவமைக்கப்பட்டாலும் இவைகள் அனைத்தும் நிறைந்த அரிய தலைமைச் சக்கரம் ஒன்றை திருமூலர் அறிமுகப்படுத்துகின்றார்.

உலக உருவாய் விளங்கும் இந்த தலைமைச் சக்கரத்தை புவனாபதி சக்கரம் எனப் பெயரிட்டு இதனை வடிவமைத்துத் தந்தவர் சிவபெருமான் என்றும், இறைவிக்கு இறைவனால் உணர்த்தப் பெற்ற இச் சக்கரத்தைத் தாம் இவ் உலகத்தோர்க்கு உணர்த்துவதாகவும் கூறியுள்ளார்.

முந்நூற்று இருபது வகைகளாக விரிந்து செயலாற்றும் இந்த எண் வினை ஏவல் சக்கரங்களுக்கு மூலச்சக்கரம் இதுவே என தந்திரக்கலைச் சக்கரத் தோற்றுவாய் கூறும் திருமூலர்

மாதின் பெயரால் வழங்குமிச் சக்கரம்
சோதி யெழுத்துமெண் சொல்லிற்கன் மாதிகள்
ஓதும் உலகத்தில் ஒவ்வொன்று சாதிக்கும்
மாது புவனை மனதில்வைத் தார்க்கே

என்று புவனாபதி சக்கரத்தின் பெருமையைக் கூறுகின்றார்.

புவனாபதியை இச்சக்கரத்தில் போற்றி வழிபடுவாருக்கு அதன்கண் உள்ள எண்ணும் எழுத்தும் அவ்வவற்றிற்கேற்ற எண்வகை வினைகளையும் முடிக்கும் என இங்கு சிறப்பிக்கப்படுகின்றது.

புவனாபதி எண்வினை ஏவல் மூலச் சக்கரம்:

எண் வினை ஏவல்களுக்கும் மூலமாயுள்ள இந்த புவனாபதிச் சக்கரத்தைப் பொன், செம்பு முதலிய

உலோகங்களால் அமைந்த தகட்டிலும் உரிய பிறவற்றிலும் சம சதுரமாக அமையும் வண்ணம் குறுக்கும் மறுக்குமாக ஐந்து, ஐந்து கோடுகளை வரைதல் வேண்டும். அஃதாவது நான்கு நான்கு அறைகளையுடைய கோடுகளை இட வேண்டும்.

அப்படி வரைவதனால் கிடைக்கும் மொத்த அறைகள் பதினாறு. இதில் எட்டறைகள் துருவம். எட்டறைகள் அத்துருவம் ஆகும்.

இலக்கம் அடைக்கும் முறை:

எண் வகை ஏவல் வினைகளுக்கும் சொல்லப்பட்டுள்ள வாய்ப்பாடுகளின்படியே துருவ அறை எட்டிலும் 1 முதல் 8 வரையுள்ள எண்களை முறையே அடைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் வேண்டும் வினைகளுக்குரிய இலக்கத்தைச் செம்பாதியாக்கி அதனில் ஒன்றை நீக்கி, ஒவ்வொன்று குறைத்து அத்துருவ அறைகள் எட்டிலும் முறையே அடைத்துக் கொள்ள வேண்டும்.

எழுத்து அடைக்கும் முறை:

இந்தப் புவனாபதி சக்கரத்தின் துருவ அறைகள் எட்டிலும் அடைக்க வேண்டிய குற்றெழுத்துக்கள் எட்டாகும்.

ஒன்று இலக்கமிட்ட அறையில்	அ
இரண்டு இலக்கமிட்ட அறையில்	இ
மூன்று இலக்கமிட்ட அறையில்	உ
நான்கு இலக்கமிட்ட அறையில்	ரு
ஐந்து இலக்கமிட்ட அறையில்	லு
ஆறு இலக்கமிட்ட அறையில்	எ
ஏழு இலக்கமிட்ட அறையில்	ஒ
எட்டு இலக்கமிட்ட அறையில்	ஐ

"அம் முதலாகிய எட்டிடை உற்றிட்டு" - திருமந்திரம் 996

இதே சக்கரத்தில் அத்துருவ அறைகள் எட்டிலும் அடைக்கப்பட வேண்டிய நெட்டெழுத்துக்கள் எட்டாகும். அவை

ஒன்பது என இலக்கமிட்ட அறையில்	ஆ
பத்து என இலக்கமிட்ட அறையில்	ஈ
பதினொன்று என இலக்கமிட்ட அறையில்	ஊ
பன்னிரண்டு என இலக்கமிட்ட அறையில்	ரூ
பதிமூன்று என இலக்கமிட்ட அறையில்	லூ
பதினான்கு என இலக்கமிட்ட அறையில்	ஏ
பதினைந்து என இலக்கமிட்ட அறையில்	ஓ
பதினாறு என இலக்கமிட்ட அறையில்	ஔ

திருமூலர் காலத்தில் இருந்த உயிர் எழுத்துக்கள் 16. இவைகளில் 8 குறில் 8 நெடில். இவ்வெழுத்துக்களை கலைகள் பதினாறு என்ற சொற்றொடரால் குறிப்பிடும் திருமூலர் துருவ அறைகளில் குறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களை கவ்வினம் குறில் என்றும் அத்துருவ அறைகளில் குறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களை சவ்வினம் நெடில் என்றும் வகைப்படுத்துகின்றார்.

இவ் உயிர்க் கலைகளேயன்றி ஙகரம், ஞகரம், ணகரம் ஆகிய சுன்னெழுத்துக்கள் (0) நீங்கலாக மெய்யெழுத்துக்கள் 35ம் இச் சக்கரத்துள் இட வேண்டும். இப்படி அமைக்குங்கால் 48 எழுத்துக்களும் அறை ஒன்றுக்கு 3 எழுத்துக்களாக 16 அறைகளிலும் விரவி நிற்கும். இஃது 51 அக்கரங்களை (அட்சரங்களை) அமைக்கும்முறையாகும்.

எழுத்துக்கள் பற்றிய விவரங்கள் பின்னர் சக்கர தேவியின் வடிவமைப்பில் உரைக்கப்படும்.

வித்தாஞ் செகமய மாக வரைகீறி
வைத்தார் கலைகள் பதினாறும் நாட்டியப்பின்
-திருமந்திரம் 991

பீசம் அமைக்கும் முறை:

இந்தப் புவனாபதி சக்கரத்தில் உள்ள அறைகளில் பதிக்கப்பட்ட இலக்கங்களை ரீங்காரத்தால் வளைத்துக் கட்டி, இவ்வறைகளில் நிற்கும் எல்லா எழுத்துக்களுக்கும் பக்கத்தில் புள்ளி வட்டம் இடுதல் வேண்டும்.

பதினாறு பதங்கள் உள்ள இவ்வியந்திரத்தின் நடுவே யுள்ள நான்கு அறைகளின் இடையே அறுகோணம் ஒன்று வரைதல் வேண்டும். அவற்றின் நடுவில் கிலீம் என்னும் பீசம் இட்டு அப்பீசத்தை ரீங்காரத்தாற் கூட்டி வளைத்து அறுகோணங்களைச் சூழ கிலீம் பீசம் இட வேண்டும்.

துருவ அறைகள் எட்டிலும் அர (ஹர) அம்சம் (ஹம்ஸம்) என்னும் மந்திரங்களையும் அத்துருவ அறைகள் எட்டிலும் அரி (ஹரி) சோகம் (ஸோஹம்) என்னும் மந்திரங்களையும் முறையே வரைதல் வேண்டும்.

துருவ அறைகள் எட்டிலும் சங்க நிதி, பதும நிதி[1] பீசங்களாகிய சம், பம் என்பவனவற்றையும் அத்துவ அறைகள் எட்டிலும் பாச அங்குச பீசங்களாகிய ஆம், க்ரோம் என்பன்வற்றையும் வரைதல் வேண்டும். நடு வீடு நான்கும் தேவியின் இருக்கையாகும். இங்கு கல்பபை, சுவத்திகம் ஆகியவற்றின் வடிவையும் வரைதல் வேண்டும்.

---

1. சிவாலயங்களில் அமைக்கப் பெற்றிருக்கும் வாயிற் காவலர்களைச் சங்கநிதி, பதுமநிதி என்று கூறுவர். இதனை விளக்கச் சில சிவதலங்களில் அவ்விருவர் உருவங்களையும் சூழ சங்கம், பதுமம் (தாமரை) என்பனவற்றின் உருவங்களையும் முறையே அமைக்கப் பெற்றிருத்தலைக் காணலாம்.

சங்க நிதி - கோடி கோடி பொன்

பதும நிதி - கோடி கோடி கோடி கோடி கோடி பொன் சங்கும் தாமரையும் கையில் ஏந்தியமையால் இப்பெயர் பெற்றனர் போலும்.

சங்கநிதியின் பீசம்	-	சம்
பத்மநிதியின் பீசம்	-	பம்
பாசத்தின் பீசம்	-	ஆம்
அங்குச பீசம்	-	க்ரோம்

இவற்றுள் பாச பீசம் சிரோம் என்பதும் ஒன்று.

மேலே சொல்லியவாறு பதினாறு அறைகளிலும் 51 எழுத்தும் பீசங்களும் அடைத்த பின்பு துருவ அறைகளில் தும்புறு பீசத்தையும் (தும்) அத்துருவ அறைகளில் சிந்தாமணி பீசத்தையும் (க்ஷ - 6 0) வரைதல் வேண்டும்.

பின்னர் அத்துருவ அறைகளின் வலப்புறத்தில் அர என்பதையும் (ஹர) இடப்புறத்தில் அரி (ஹரி) என்பதையும் இட வேண்டும். துருவ அறைகளை ரீங்காரத்தாலும் அத்துருவ அறைகளை ஸ்ரீங்காரத்தாலும் வளைத்துக் கட்டுதல் வேண்டும்.

இவ்விதம் வரைந்த பின்னர் இரேகை தலைதோறும் சூலக்குறியினை இட்டு, இரு சூலங்களுக்கிடையே சக்தி பீசமிட்டு ஹ்ரீங்காரம் (ரீங்காரம்) இவற்றை பிரணவமாகிய ஓங்காரத்தால் அந்த பீசத்தைக் கட்ட வேண்டும்.

சூலங்களின் நடுவேயுள்ள வெளியிடங்களில் 16 உயிரெழுத்துக்களையும் அவற்றைச் சூழ வேண்டிய கன்மத்தின் பெயரையும் வரம்பின் மேலே சூழ சிரீம், ஹிரீம், சிரீம் என்னும் திருமகள் பீசத்தை இருபுறமும் வரைதல் வேண்டும்.

இவைகளேயன்றி இம் மூலச்சக்கரத்துள் எண்டிசைப் பாலர் எனப்படும், இந்திரன் முதலாய கடவுள் எண்மரும், கன்னி பிராமி முதலிய சக்திகள் எண்மரும், ஐராவதம் முதலிய யானைகள் எட்டும், மா நாகங்கள் எட்டும், அஷ்ட யோனிகளும் ஞாயிறு முதலிய கோள்கள் ஒன்பதும் கிழக்கு

முதலிய திசைகளும் கிழமைகளும் அமைக்கப்படுதல் வேண்டும்.[1]

இறைவியின் திருவுருவாயுள்ள இந்த சக்கரத்தைச் சூழ ஹி ரீங்காரத்தால் வளைத்துக் கட்டி வலம், இடம் ஆகிய இரு பக்கங்களிலும் சூரிய, சந்திரர்களின் பீசங்களை இடுதல் வேண்டும்.

வலப்பக்கத்தில் சூரியரின் பீஜமான -ம் என்பதனையும் இடப் பகுதியில் சந்திரனின் பீஜமான டம் (0ம்) என்பதனையும் இட்டு இந்த அமைப்பை ஓங்காரத்தால் வளைத்துக் கட்ட வேண்டும்.

சப்த மாதர்:

இந்த அமைப்பின் மேலே பெரிய வட்டம் ஒன்று வரைந்து ஓங்காரத்திற்கும் வட்டத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் (பிராமி) அபிராமி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, நாராயணி, வராகி, சாமுண்டி, கௌரி, இலக்குமி ஆகிய அஷ்ட மாதர்களும் இவ்வியந்திரத்துள் பீஜ வடிவங்களாக அமைக்கப்படுதல் வேண்டும். இவைகளின் பீஜங்கள்:

பிராமி	-	ஆம்	கௌமாரி	-	ஊம்
மகேசுவரி	-	ஈம்	வைணவி	-	ரூம்
வராகி	-	லூம்	இந்திராணி	-	ஐம்
சாமுண்டி	-	ஔம்	திருமகள்	-	இ

இவர்களில் திருமகள் தவிர ஏனைய எழுவரும் சப்தமாதர் என வழங்கப் பெறுவர்.

எண் திசைப்பாலர்:

சிறப்புப் பொருந்திய இச் சக்கரத்துள் கிழக்கு முதலாய எண் திசைகளிலும் இந்திரன் முதலாகிய எண்வகைக் கடவுளரும் முறையே பீஜ வடிவில் நிறுத்தல் வேண்டும்.

---

1. இவற்றின் வடிவங்களை சக்கரத்துள் பொறிப்பதை விட இவற்றிற்கான பீஜங்களை சக்கரமதில் அமைப்பர்.

எண்திசைப் பாலரின் பீசங்கள்:

கிழக்கில் இந்திரன்	-	லம்
மேற்கில் வருணன்	-	வம்
வடக்கில் குபேரன்	-	ஹம் (ஸம்)
தெற்கில் யமன்	-	ஹம்
நிருதி	-	ஷம்
வாயு	-	யம்
ஈசானியம்	-	சம்
அக்கினி	-	ரம்

இத்துடன் கணேசன் முதலிய நால்வரையும் இச் சக்கரத்துள் குடியமர்த்த வேண்டும். இவர்களின் பீஜங்களாவன:

கணேசன்	-	கம்
கந்தன்	-	ஸௌம்
வயிரவர்	-	க்ஷம்
துர்க்கை	-	தும்

எண்டிசை யானை:

இச் சக்கரத்தின் எட்டுத் திசைகளிலும் எட்டு யானைகளைக் காவல் நிறுத்த வேண்டும்.

ஐராவதம்	-	ஐம்
புண்டரீகம்	-	பும்
வாமனம்	-	வம்
குமுதம்	-	கும்
அஞ்சனம்	-	ஹம்
புட்பதந்தம்	-	ப்ரும்
சார்வபௌமன்	-	ஸ்ரம்
சுப்ரதீபம்	-	ஸம்

எண்டிசை யோனி:

இந்த யோனிகளை எண்திசைகளிலும் அமைத்தல் வேண்டும்.

கொடி (மின்னல்)	-	அம்
புகை	-	கம்
சிங்கம்	-	சம்
நாய்	-	மம்
எருது	-	தம்
கழுதை	-	வம்
யானை	-	யம்
காகம்	-	ஷம்

எண்டிசை நாகங்கள்:

இதனை அஷ்டமா நாகம் என்று திருமந்திரம் குறிக்கும். புவனாபதி சக்கரத்துள் காவலர்களாக இதனை அமைத்துக் காட்டுகின்றார்.

அனந்தன்	-	ஹம்
வாசுகி	-	காம் (வாம்)
தக்கன்	-	தம் (வும்)
கார்கோடன்	-	காம்
மாபத்மன்	-	மம்
பத்மன்	-	(பம்)
சங்கபாலன்	-	சம்
குளிகன்	-	கும்

ஒன்பான் கோள்:

நவக்கோள்களும் இச் சக்கரத்தில் அமைக்கப்பட வேண்டும் எனத் திருமந்திரமாலை கூறுகின்றது.

ஞாயிறு	-	க்ரீம்	திங்கள்	-	ரீம்
செவ்வாய்	-	ஹ்ரீம்	புதன்	-	சிரீம்
வியாழன்	-	ஔம்	வெள்ளி	-	கிலீம்
சனி	-	ஐம்	ராகு	-	ஹ ரௌம்
கேது	-	சௌம்			

இராசிகள் பன்னிரண்டு:

புவனாபதி சக்கரத்துள் அமைக்கப்பட வேண்டிய இராசி நிலைகளின் பீஜங்கள் பன்னிரண்டு ஆகும். அவை:

மேடம்	-	கிலீம்	-	கிழக்குத் திசை
எருது	-	ஆம்	-	தென் கிழக்குத் திசை
மிதுனம்	-	ஸம்	-	தெற்கு
கடகம்	-	ஸ்ரும்	-	தென் மேற்கு
சிங்கம்	-	க்ஷேம்	-	தென் மேற்கு
கன்னி	-	ஹ்ரீம்	-	தென் மேற்கு
துலாம்	-	கம்	-	வடக்கு
தேள்	-	ஷம்	-	கிழக்கு
வில்	-	ரம்	-	வடமேற்கு
மகரம்	-	த்ரூம்	-	மேற்கு
குடம்	-	க்ரம்	-	மேற்கு
மீனம்	-	ம்ரம்	-	தெற்கு

நட்சத்திரங்கள் இருபத்தேழு:

இச் சக்கரத்தினுள் அமைக்கப்பட வேண்டிய நட்சத்திர பீஜங்கள் இருபத்தேழு. இவையே இச்சக்கரத்திற்குச் சக்தி அளிக்க வல்ல உயிர்நிலையாகும்.

அசுவினி	-	அம்	உத்திரம்	-	உம்
பரணி	-	பம்	அஸ்த்தம்	-	ஹம்
கார்த்திகை	-	கம்	சித்திரை	-	சிம்
ரோகிணி	-	ரோம்	சுவாதி	-	ஸ் வாம்
மிருகசீருடம்	-	ம்ரும்	விசாகம்	-	விம்
திருவாதிரை	-	ஆம்	அனுஷம்	-	அம்
புனர்பூசம்	-	பும்	கேட்டை	-	ஜேம்
பூசம்	-	பூம்	மூலம்	-	மும்
ஆயில்யம்	-	ஆம்	பூராடம்	-	பூம்
மகம்	-	மம்	உத்திரட்டாதி	-	உம்
பூரம்	-	பூம்	ரேவதி	-	ரேம்

உமை முதலான எண்மரின் பீஜங்கள்:

இச்சக்கரத்துள் அமையவேண்டிய எண்மரின் பீசங்கள் வருமாறு:

உமை	-	ஹ்ரீம்	கேத்திரன்	-	க்ஷம்
திரு	-	ஸ்ரீம்	நான்முகன்	-	ப்ரம்
வாணி	-	ஐம்	கருடன்	-	க்ஷிப
பூமி	-	லம்	ஞானகுரு	-	சூம்

பஞ்சபட்சிகள்:

இந்த இயந்திரத்தின் ஐந்து இடங்களில் பஞ்ச பட்சிகளின் பீஜங்களை அமைக்கப்பட வேண்டும். அஃது அவ்வக்காலங்களின் வெற்றி தோல்விகளைச் சமன் செய்து வழிபடுவோருக்கு படுபட்சி காலம் சரியில்லாதபொழுதும் வெற்றிப் பறவையின் கால நிலையை ஏற்று வெற்றி வாய்ப்பை அளிக்க வல்லது.

வல்லூறு - அ - கிழக்குத் திசையில் அமைக்க வேண்டும்

ஆந்தை - இ - தெற்குத் திசையில் அமைக்க வேண்டும்

காகம் - உ - மேற்குத் திசையில் அமைக்க வேண்டும்

கோழி - எ - வடக்குத் திசையில் அமைக்க வேண்டும்

மயில் - ஒ - சக்கரத்தின் மத்தியப் பகுதியில் அமைக்க வேண்டும்.

51 அட்சரத் திருவுரு:

இந்தப் புவனாபதி சக்கரத்தில் அகரம் முதல் க்ஷகர மீராகவுள்ள 51 எழுத்துக்களையும் திருவுருவாகக் கொண்டு இறைவனும் இறைவியும் காட்சியளிப்பர். அந்தத் தரிசனத்தைக் காண்பார்க்கு கன்ம சித்தி முதலாய எல்லாச் சித்திகளும் விளையும்.

---

51 எழுத்துக்களையும் திருவுருவாகக் கொண்டுள்ள நிலையில் இறைவனுக்கு வர்ணாத்துவா மூர்த்தி என்று பெயர். இவ்வாறு 51 அட்சரங்களையும் அவயமாகப் பதித்தலை வர்ணநியாசம் - மாதிருகா நியாசம் என்பர். (அம்மையப்பராகக் காட்சிதரும் கோலம்.)

உயிர் எழுத்து 16 வடிவம்:

1.	அ	- திருமுடி	9.	லு	- வலக்கன்னம்
2.	ஆ	- நெற்றி	10.	லூ	- இடக்கன்னம்
3.	இ	- வலக்கண்	11.	ஏ	- மேலுதடு
4.	ஈ	- இடக்கண்	12.	ஐ	- கீழுதடு
5.	உ	- வலக்காது	13.	ஓ	- மேல் வாய்ப்பல்
6.	ஊ	- இடக்காது	14.	ஔ	- கீழ் வாய்ப்பல்
7.	ரு	- வல மூக்கு	15.	அம்	- தாடை
8.	ரூ	- இட மூக்கு	16.	அ:	- உச்சந்தலை

இப்படி அகரம் முதல் அ: ஈறாகவுள்ள 16 உயிர்களுகம் கழுத்தின் மேலேயுள்ள உறுப்புக்களாகக் கருதப்படும்.

மெய்யெழுத்துக்கள் 35:

க	வர்க்கம்	5	உம்	வலக்கை
ச	வர்க்கம்	5	உம்	இடக்கை
ட	வர்க்கம்	5	உம்	வலத்திருவடி
த	வர்க்கம்	5	உம்	இடத்திருவடி
21.	பகரம்		-	வலவிலா
22.	பகரம் உ0		-	இடவிலா
23.	பகரம்		-	குலை
24.			-	கீழ்வயிறு
25.	ம		-	உந்தி
26.	ய		-	குறி
27.	ர		-	வித்து
28.	ல		-	மூலாதாரம்
29.	வ		-	குதம்
30.	ச		-	வல முலை
31.	சகாரம் ஷ		-	இட முலை
32.	சகாரம் ஸ		-	மார்பு
33.	அகாரம் ஹ		-	தொண்டைக்குழி

34. ளகாரம் - நெற்றி
35. கவ்வென்றது க்ஷ காரம் - உச்சி

இப்படி இறைவன் மற்றும் இறைவி வடிவை புவனாபதிச் சக்கரத்தில் அமைய வேண்டிய வழியை திருமூலர் கூறியுள்ளார்.

இவ்வாறு எண்வினை ஏவல் மூலச் சக்கரத்தை விளக்கமாகக் கூறிய திருமூலர் பின்னர் அவைகள் ஒவ்வொன்றின் வகைகளையும் விரித்துக் கூறி அவைகளுக்கான இலக்க வேறுபாடுகளையும் தனித்தனியே வடிவமைத்துக் காட்டுகின்றார்.

பொதுவியலில் நன்நான்கு இலக்க அறைகளை அறிமுகப்படுத்திய திருமூலர் எண்வினை ஏவல் இலக்கவியலில் ஒவ்வொரு கன்மங்களுக்கும் மூன்று மூன்று இலக்கங்களைச் சொல்லியிருக்கிறார். பிற சுவடிகளில் இந்த அமைப்பு மூவகை இலக்கங்களுடன் முடிவில் அவற்றின் மொத்தக் கூட்டுத்தொகை இலக்கங்களும் காணப்படுகின்றன. இன்னும் சில சுவடிகளில் இம்மூவகை இலக்கமுமின்றி அவற்றின் கூட்டுத் தொகையுள்ள மொத்த இலக்கம் மட்டுமே காணப்படுகின்றது.

மந்திர உருவாயுள்ள இம் மூவகை இலக்கங்களுள் விருப்பத்தின்படி எதையேனும் மேற்கொள்ளலாமென்று தெரிகிறது. இந்த இலக்கங்களுக்கும் அவற்றின் வினையேவல்களுக்கும் அமைந்துள்ள இயைபும், அவற்றால் குறிக்கப்படும் பொருளும் பிறவும் புலனாகாமல் பயனுறு வித்தலில் மட்டும் பொய்க்காமல் இருத்தலினாலே, வாய்மொழியாயுள்ள இவைகள் தமிழ் முறை வழக்குப்படி நிறைமொழி மாந்தர் ஆணையிற் சிறந்த மறைமொழியாயுள்ள மந்திரமாயின என்பது புலனாகிறது.

இந்தச் சக்கர எண்களும் இவ்வாறே மேல் வரும் எண்களும் அவற்றுடன் இயைந்து அறைகளில் நிற்கும்

எழுத்துக்களும் அம்மையப்பரான சிவ சத்தியரின் மந்திரத் திருமேனியாகும். இறைவனுக்குரிய தடத்தலக்கணம் எனப்படும் பொதுவியல்பில் அவனுக்குரியனவாகக் கூறப்படும் வடிவங்கள் மூன்றாகும். அவை தூல வடிவம், சூக்கும வடிவம், அதி சூக்கும வடிவம் என்பனவாகும். அவற்றுள் சக்கரத்துள் எண்ணும் எழுத்துமாய் நின்று அருள்புரியும் நிலை சூக்கும வடிவமாகும்.

எண்ணும் எழுத்தும் இனஞ்செயல் அவ்வழிப்
பண்ணுந் திறனும் படைத்த பரமனைக்
..

-திருமந்திரம் 2996

எண் வினையேவல்களுக்கும் மொத்தத் தொகை 320:

எண்	வினை	வகை	ஷிரி.
1.	வசியம்	6	6
2.	மோகனம்	5	5
3.	தம்பனம்	7	47
4.	உச்சாடணம்	8	73
5.	ஆகர்ஷணம்	7	31
6.	வித்வேஷணம்	3	21
7.	பேடினம்	7	126
8.	மாரணம்	2	14
8.		45	323

முற்றி நிற்கும் தலைமை எண்ணாம் சிறப்புப் பற்றி முந்நூற்றிருபதாய்ச் சார்ந்ததே.

எண்வினை ஏவல்களுக்குமான இறைவியின் திருவடிவம்:

1. வசியம் - செந்நிறம்
2. மோகனம் - பொன்னிறம்
3. தம்பனம் - பச்சை

4. உச்சாடணம்	-	சித்திர வண்ணம் (பஞ்சவர்ணம்)
5. ஆகர்ஷணம்	-	நீலம்
6. வித்வேஷணம்	-	பவள நிறம்
7. பேதனம்	-	பளிங்கு நிறம்
8. மாரணம்	-	கறுப்பு நிறம்

இந்த இறைவியின் வடிவம் இளஞாயிறு போலுஞ் செம்மேனியையும், ஞாயிறு தீ திங்களாகிய மூன்று கண்களையும், இளம்பிறை பொருந்திய செஞ்சடைக் கற்றையையும், அங்குசம் பாசம் ஆகிய படைக்கலன் களும் அபயம் வரதம் ஆகிய முத்திரைகளையும் உடையவராயும், பாங்கி மாரெண்மரும் புடைசூழ்ந்து பணிபுரிந்து நிற்கத் தாமரையாசனத்தில் வீற்றிருப்ப வராயும் காணப்படும் என்று திருமூலர் வடிவமைக்கிறார்.

இவர் வடிவமைக்கும் தியான வடிவத்தில் முக்கண், செஞ்சடை, மதியம் முதலிய அங்கங்கள் இறைவனுக்கும் அங்குச பாசங்கள் இறைவிக்கும் உரிய சிறப்படையாளங் களாகும். எனவே அம்மையப்பராய் உள்ள தொன்மைக் கோலமே சக்கரத் தியானத்திற் சுட்டப்படும் புவனாபதியாரின் திருவடிவமாகும்.

எண்வினை ஏவல்களுக்குமான திருச்சக்கரம்:

பதினாறு அறைகளுடன் பொருந்திய இந்தப் புவனாபதி சக்கரமானது எண்வினை ஏவல்களுக்கும் பொதுவானது. செந்தாமரைப் பூவைப் போன்றது. அதன் நடுவே உள்ள அறுகோண அமைப்பானது அத்தாமரையின் அகவிதழ்களாம். அதன் நடுவேயுள்ள பொன்மயமான பொகுட்டனது புவனாபதியின் இருக்கை ஆகும். இந்தத் தாமரை மலரின் புறவிதழ்கள் எட்டிலும் புவனாபதியின் தோழியர் எண்மரும் சூழ்ந்து நின்று ஏவல் கேட்டுப் பணி புரிந்திருப்பர்.

இந்தச் சத்தியர் எண்மரும் குப்த யோகினியர் என்று அழைக்கப் பெறுவர். நாற்பத்து முக்கோண இயந்திரமாகிய ஸ்ரீ சக்கரத்தில் உள்ள ஆவரணங்கள் 9 இதில் 3 ஆம் ஆவரணம் ஸர்வ ஸம் க்ஷோபணச் சக்கரம் எனப்படும். அஃது எட்டிதழ் கமல வடிவாயுள்ளது. அந்தத் தாமரை இதழ்கள் எட்டிலும் அஷ்ட சக்திகளான இப்பாங்கியர் எண்மரும் உள்ளனர்.[1]

அனங்ககுசுமை முதலான சத்தியர் எண்மரும் முறையே வட்டில் முதலான எண்வகை மங்கலப் பொருள்களையும் [2] ஏந்திய இரு கைகளையுடைய வராய்ப், புவனாபதியைப் புடை சூழ்ந்து, அவர் ஆணையை எதிர் நோக்கிய வண்ணம் நிற்பர்.

1.	அனங்க குசுமாதேவி	வட்டில்	படிக்கம்
2.	அனங்க மேகலாதேவி	ஆலவட்டம்	விசிறி
3.	அனங்க மதனாதேவி	தாம்பூலம்	வெற்றிலைக் காளஞ்சி
4.	அனங்கமதனாதுராதேவி	சத்திரம்	வெண்கொற்றக் குடை
5.	அனங்கரேகாதேவி	சாமரம் (வெண்சாமரம்)	கவரி
6.	அனங்க வேகிநீ தேவி	கிளி	(பஞ்சவர்ணக்கிளி)
7.	அனங்காங்குசா தேவி	பூமாலை	
8.	அனங்க மாலிநீ தேவி	புடவை	

இந்தப் புவனாபதி சக்கரத்தை உலகின் உருவமாக தியானிக்குமாறு திருமூலர் சொல்கிறார்.

பொதுவியல்பில் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதங்களிலும் அவற்றானியன்ற புவனங்களிலும்

1. அனங்ககுசுமை 2. அனங்க மேகலை 3. அனங்க மதனை 4. அனங்க மதனாதுரை 5. அனங்க ரேகை 6. அனங்க வேகினி 7. அனங்காங்குசை 8. அனங்க மாலினி என்பவை அந்த அஷ்ட சக்திகளின் (பாங்கியர் எண்மரின்) பெயர்களாம்.

விரவியிருக்கும் இறைவிக்கு, இந்த இயந்திரமும் அம்முறைமையில் திருமேனியாகும்.

16 அறைகளைக் கொண்ட புவனாபதி சக்கரமாகிய ஆழிக்கு ஞாயிறும், திங்களும் உருளைகள் ஆகும். மறைகள் நாலும் குதிரைகள் ஆகும். இயங்கும் வலவன் நான்முகக் கடவுளாவான். இந்த இயந்திரத்தை ஒரு தேராகவும் வடிவமைத்துக் காட்டுகிறார்.

பெருங்கடவுளர் மூவராலும் உணர்தற்கரிய சிவசக்தி சொரூபமாயும், வீடு பேற்றுக்கும் சாதனமாயும் உள்ள இந்தச் சக்கரமானது எல்லாப் புவனங்களிலும் இயங்கி எல்லாக் காமியப் பயன்களையும் அளிக்கவல்லது.

எண்வகைக் குணங்களும், எண் வகை வினை களும், ஐம்பூதங்களும், ஐம்பெருந் தொழில்களும், பத்து வாயுக்களும், ஆறு ஆதாரங்களும் ஆகிய யாவும் இறைவியின் திருவுருவமே.

இறைவியின் சொரூபமாகச் சொல்லப்பட்ட இந்தச் சக்கரத்தை, அறிவன் செவியறிவுறுத்தி அருளிய மந்திரம், தந்திரம், பாவனை முதலியவற்றை நன்கு தெளிந்த பின்னர், பட்டும் ஓலையும், செம்பும் பொன்னும் ஆகியவற்றில் எண்ணிய கன்மத்தைக் காண வேண்டி வரைதல் வேண்டும்.

இதனை எண்வினையேவல்கட்குரிய தியானத் திருமேனிகளின் நிறங்களுக்கு ஒத்துள்ளனவாகிய மலர், மாலை, கந்தம் முதலியவற்றாலும், தூப தீபங்களினாலும் 16 வகைப்பட்ட உபசாரங்களிலும் புவனையைப் போற்றிப் பூசித்து வழிபடல் வேண்டும்.

அஷ்ட கன்மப் பிரயோகங்களுக்கு உரிய இயந்திரங்களை விதிப்படி வழிபாடாற்றி முற்றிய பின்னர், அந்த இயந்திரங்களைக் கன்னிப் பெண்களால் நூற்கப்பட்ட நூல் இழைகளினாலே அவ்வவக் கன்மங்களுக்குச் சொல்லப்படும் அளவின் படிக்குச் சுற்றிக் கட்டுதல் வேண்டும்.

வசியத்துக்கும், ஆகர்ஷணத்துக்குமான நூலிழை இரண்டு.

மோகனத்துக்கும், வித்வேஷணத்துக்குமான நூலிழை மூன்று.

தம்பணத்துக்கும், உச்சாடனத்துக்குமான நூலிழை நான்கு.

பேதனத்துக்கான இழை ஐந்து.

மாரணத்துக்கான நூலிழை ஆறு ஆகும். ✱

இந்த அறைகளின்படியே இழை நூல்களின் இரண்டு தலைப்புகளும் சமமாகப் பொருந்தக் கொண்டு சுற்றிக் கட்டி ஓமமும்[1], தர்ப்பணமும்[2] செய்ய வேண்டும்.

இந்த இயந்திரத்தின் சிறப்பை திருமூலர்

கொள்ளுவார் கொள்ளுங் குருவின் அருளாலே
உள்ளுவார் உள்ளும் உடனின்ற சக்தியைத்
தெள்ளுவார் வாலை புவனை திரிபுரை
கள்ளுவார் பூங்கோதை தாரணி பேரே.

கூறுகின்றார்.

சக்தி பேதம் எண்ணிறந்தன, யாவும் சக்தியின் சொரூபமே. அளவிறந்த சக்தி பேதங்களுள் குண ரூபத்தால் சிறப்பாயுள்ள சக்திகள் 3. அவை வாலை, புவனை, திரிபுரை என்பன. இந்த மூன்று சக்திகட்கும் மூன்று சக்கரங்கள் உண்டு.

✱ திருமந்திரம் 300 - நூற்பா 361 & 362.

1. ஓமம் செந்தீ வழிபாடு

தர்ப்பணம் - தண்ணீரை மந்திரம் ஓதி இறைத்துச் செய்யும் வழிபாடு

மந்திரம் - உரையையும்; தந்திரம் - உடம்பையும் சிறப்பாகக் கொண்டு செய்யப்படும் வழிபாடுகளாகும்.

பொன் முதலாயுள்ள ஐவகை உலோகங்களில் சிற்ப சாத்திர யந்திர விதான அளவின்படி சக்கரம் அமைத்து, இஷ்டமான சக்தியை அவ்வியந்திரத்தில் தாபித்து, கல்ப முறைப்படி பூசிப்பின் சித்தி, புத்தி, முத்தி ஆகிய எல்லாப் பேறுகளும் உண்டாகும் என்பது வாம மதத்தின் சித்தாந்தம்.

1. வசிய வினைச் சக்கரம்:

பஞ்சாட்சர மந்திரத்தால் திருமந்திரம் 3000த்தில் ஒரு வசிய சக்கரத்தை அமைத்த திருமூலர் திருமந்திரம் 300 இல் அதனையே இலக்க வேறுபாடுகளுடன் ஆறாக வகைப்படுத்தியுள்ளார். அவை 1. உலக வசியம் 2. அரச வசியம், 3. மாதர் வசியம், 4. மைந்தர் வசியம், 5. பகைவர் வசியம், 6. விலங்கு வசியம் என்பனவாகும்.

இதற்கான புவனாபதி சக்கரத்தைப் பொன், செம்பு, வெள்ளி, செம்பட்டு ஆகிய இந்த நான்கு வகைகளில் யாதேனும் ஒன்றில் வரைந்து

ஓம் சிரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம்
கணபதேயே வர வரத சர்வ லோக ஜநம்
மே வசம் ஆநாய சுவாகா

எனும் கணபதியின் மூல மந்திரத்தைச் சொல்ல வேண்டும்.

உலகம், பகைவன், விலங்கு ஆகியவற்றின் வசிப்பு வினை ஏவல்களுக்குப் பிரணவமாகிய ஓங்காரமும்; அரசர் வசியத்துக்கு 51 எழுத்துக்களுள் 14 ஆம் உயிராகிய ஔகாரமும்; மாதர், மைந்தர் வசியங்களுக்குக் கலை மகளின் பீசமாகிய ஐங்காரமும் வித்தெழுத்துக்களாகும் என்பது பெறப்படும். இவற்றை அவ்வவக் கருமங்களுக்கு ஏற்றவாறு மூல மந்திரத்தின் முன்னர்ச் சேர்த்து [2] செபம், ஓமம், தர்ப்பணம் முதலியவற்றைச் செய்தல் வேண்டும், இயந்திரத்திலும் வரைதல் வேண்டும்.

1. கணசே மூல மந்திரசதீ - ஸஹஸ்ரராமங்கள்

வசிய கன்மங்கள் ஒவ்வொன்றுக்கும் பிராணப் பிரதிட்டை மந்திர உரு 1000 மும், ஓமம் 1000மும் தனித்தனியே செய்தல் வேண்டும். இதற்குரிய இறைவியின் தியான நிறம் செம்மை. இடம் கிழக்குத் திசை. இதில் பிராண பிரதிட்டை மந்திரம் என்பது சீவந்நியாச மந்திரம் என்றும் கூறப்படும் ஓமம் என்பது சிவாக்கினியில் இறைவியைப் பூசித்து நெய் முதலிய ஆவிகளை அளித்து வழிபடுதல் [3].

இப்படி வழிபடுங்கால் புவனாபதி அன்னை யானவள் மனத்தினுள் காட்சியளிப்பாள். செம்பட்டாடை உடுத்தி செம்மை நிறத்தினளாய் மேலேயுள்ள திருக்கைகள் இரண்டில் வலப்பால் கரும்பு வில்லும் பொருந்தியிருக்க, கீழேயுள்ள இரு திருக்கரங்களிலும் முறையே அபயமும், வரதமும் ஆகிய முத்திரைகளை உடையனவாக இருக்கும்.

வசிய கன்மத்திற்குரிய கிரியைகளை காலையில் கதிரவன் உதித்த பின்னர் முதல் யாமத்தில் (அதிகாலை யில்) வியாழ ஓரையில் தொடக்கி முடித்தல் வேண்டும்.

---

2. மந்திரங்களைச் செபிக்குங்கால் ராச வசியத்துக்கு - உம். உலக வசியத்துக்கு - ஓம். புருஷ வசியத்துக்கு - ஸ்ரீம் மாதர், விலங்கு வசியங்களுக்கு - ஹ்ரீம். பகைவர் வசியத்துக்கு - ஓம் ஹ்ரீம் என்பனவற்றைச் சேர்த்துச் செபிக்க வேண்டும்.

-சுவடி 15,

3. திருமந்திரம் மூவாயிரம் 11 ஆம்திகாரம் அக்கினி காரியம் 214-223.

1. வசியம்

வசிய கன்ம சக்கரத்திற்குரிய இலக்க துருவத்தின் இயந்திரம்

துருவ சக்கரம்

ப. க. வ. த.

ப 7		வ 1	
பா 2		வா 8	
	கி 3		தி 5
	கீ 6		தீ 4


அத்துருவ சக்கரம்

	க 12		த 14
	கா 13		தா 11
பி 16		வி 10	
பீ 9		வீ 15	

துருவாத்துருவ சக்கரம்

ப 7	க 12	வ 1	த 14
பா 2	கா 13	வா 8	தா 11
பி 16	கி 3	வி 10	தி 5
பீ 9	கீ 6	வீ 15	தீ 4

வசியம்



பொது வடிவம்

அ. உலக வசியச் சக்கரம்:

உலக வசியத்திற்கு புவனாபதி சக்கரத்தில்பின்வரும் இலக்கங்களை அமைத்தல்வேண்டும்.

105 - 64 - 16

சில சுவடிகளில் இவ்விலக்கங்கள் வேறுபட்டும் காணப்படுகின்றன.

105 -	64 -	16	=	185o
105 -	64 -	14	=	183o
63o	90o	94o		183o
183	ஓ0o	185o		200o

ஆ. அரசர் வசியச் சக்கரம்:

அரசர் வசியத்திற்கு புவனாபதி சக்கரத்தில் இட வேண்டிய இலக்கங்களாவன

105 - 64 - 16

இது சில சுவடிகளில் பின்வருமாறு மாறுபட்டும் காணப்படுகின்றது.

105 -	64 -	20	=	189o
105 -	64 -	24	=	193o
169 -	20	=	189o	20o
93o	96	120o		189o

இ. மாதர் வசியச் சக்கரம்:

மாதர் வசியச் சக்கரத்திற்கான புவனாபதிச் சக்கர இலக்கங்கள் 87 - 70 - 56.

இவற்றினும் மாறுபட்ட சக்கர இலக்கங்கள்

87 - 70 - 56 = 213o

87 - 75 - 6°

44° 105° 175° 213 - ஹ்ரீம்

ஸ்ரீ வசியமாம் - லட்சுமி வசியமாம் 116

திரி புருஷ வசியம் - 158

ஈ. மைந்தன் வசியச் சக்கரம்:

மைந்தர் (ஆடவர்) வசியச் சக்கரத்திற்கான சக்கர இலக்கங்கள்

84 - 16 - 101

ஆகும். இவற்றில் மாறுபட்ட அமைப்பாவது

84 - 16 - 101 = 201°

84 - 14 - 101 = 199°

100° 101° 117° 130° 199° 201°

உ. பகைவர் வசியச் சக்கரம்:

பகைவரை வசியப்படுத்தும் புவனாபதி சக்கரத்தில் அமையவேண்டியஇலக்கங்கள்

105 - 42 - 88

இவற்றின் இலக்க வேறுபாடுகளாவது

105 - 42 88 = 235°

48 - 88 105°

64° 75° 116°

205° 235 ஒ0°

ஊ. விலங்கு வசியச் சக்கரம்

விலங்கு வசியச் சக்கர திற்கான இலக்கங்கள்

55 - 80 - 66.

இவை சில சுவடிகளில் வேறுபாடுகளுடன் காணப்படுகின்றது.

55 - 80 - 60 = 201₀ 55 - 86 - 16₀

100 ஹ்ரீம்

160₀ 20 - 209₀

இவைகளேயன்றி வேறு சில இலக்க இயந்திரங்களும் இவ்வசிய சக்கர பாகுபாட்டினுள் காணக் கிடக்கின்றன

64₀ 35₀

சகல வசியம்

70₀ 80₀

முக வசியம்

91

மாதர் மோகன வசியம்

24 - 35 - 48₀ 50₀ 91₀

யானை வசியம்

75₀ 140 - க்லீம் புவனேசுவர்யை நம: 11

2. மோகன கன்மச் சக்கரங்கள்

தனக்கு வேண்டாதவரை சுழுத்தியவத்தை போல் மெய்மறந்து கிடக்கச் செய்தலும், விஷம் தலைக்கேறி மயக்கம் அடிக்கடி வர செத்தாரைப் போலிருக்கச் செய்தலும், தன்மேல் எல்லோரும் மோகமாக இருக்கச் செய்தலும் மோகனம் ஆகும்.

மோகன கன்மச் சக்கரத்திற்குரிய இலக்கத் துருவத்தின் இயந்திரம்

துருவ சக்கரம்

ப. க. வ. த.

	க 4		த 6
	கா 5		தா 3
பி 8		வி 2	
பீ 1		வீ 7	

அத்துருவ சக்கரம்

ப. க. வ. த.

ப 15		வ 9	
பா 10		வா 16	
	கி 11		தி 13
	கீ 14		தீ 12

துருவா துருவ சக்கரம்

ப 15	க 4	வ 9	த 6
பா 10	கா 5	வா 16	தா 3
பி 8	கி 11	வி 2	தி 13
பீ 1	கீ 14	வீ 7	தீ 12

அத்துருவ சக்கரம்

ப	க ச	வ	த சு
	ரு		ங
அ		உ	
க		எ	

 பொது வடிவம்

மோகன வினை யேவலை தென்மேற்கு மூலையில் அமர்ந்து இரண்டாம் சாமத்தில் சனி ஓரையில் தொடங்கி பிராணப் பிரதிட்டை முதலியவற்றைச் செய்து வழிபாடியற்றி மகாகாளியை அதி தெய்வமாகக் கொண்ட மந்திர உருவினை[1] நூறாயிரம் (இலட்சம்) தடவை செபிக்க இச் சக்கரத்துள் அன்னை புவனாபதியானவள் பொன்னிறத் திருமேனியராகக் காட்சி தருவார். இப்படித் தியானிக்கப்பட்ட மோகன வினைச் சக்கரத்தை ஐயனார் கோட்டத்தின் முன்னர் நிற்கும் யானையினது வலக்காலின் கீழே புதைக்க வேண்டும். இல்லாவிட்டால் தலையில் சூடியும் கொள்ளலாம்.

இந்த மோகனக் கன்மச் சக்கரமானது எண் வடிவில் அமைக்கப்படும் போது ஐந்து பிரிவுகளாக வகைப் படுத்தப் படுகின்றது.

அ. உலக மோகனம் ஆ. மாதர் மோகனம்
இ. மைந்தர் மோகனம் ஈ. பகைவர் மோகனம்
உ. விலங்கு மோகனம் என்பவைகளாகும்.

அ. உலக மோகனச் சக்கரம்:

உலக மோகனக் கன்மத்திற்கு உரிய சக்கரத்தில் பின்வரும் இலக்கங்களை இட வேண்டுமென திருமந்திரம் 300 தெரிவிக்கின்றது.

88 - 70 - 101

மோகனம் ஐந்துக்கும் மந்திரம்
ஓம் க்லீம் சரமுரமும் (ட்ச்மிரியூம்) ஆங்ஆங்
ஹ்ரீம் ஆங் தோங் அங்வரா செவும் கெலவும்
வங் எங் சுவாகா!
ஓ நமோகாநீ நீலகாளீ வச்சிரகாளீ
நிருவாண காளீ மோகே மோகே கேது சாமோ
கன்றுந்தியகம்
ஐந்தினில் வேண்டும் சிற்றில் பத்தியாங் கருமத்தில் பகர் தம்பனமே
-திருமந்திரம்-300 செய்யுள் 79

இது பிற தந்திரக் கலை நூல்களில்

88 70 - 101 = 259

128o 259o மோகனம்: 30

ஆகக் காணப்படுகிறது.

ஆ. மாதர் மோகன கன்மச் சக்கரம்:

மாதர் மோகனச் சக்கரத்தில் இடப்பட வேண்டிய இலக்கங்களாவது

25 - 58 - 106

இஃது மாதர் மோகனம் - ஸ்ரீ மோகனம் ஸ்த்ரீ மோகனம் என்றும் சில சுவடிகளில் வழங்கப்படுகிறது. மதன மோகனம் என்றும் ஒரு சுவடியில் காணப்படுகிறது.

25	-	58	-	106	=	189
25	-	58	-	101	=	184
25	-	58	-	101 o		
24	-	35	-	48o		
58	-	106	-	125o		
91o		107o		180o	189o	

இ. மைந்தர் மோகனச் சக்கரம்:

மைந்தர் மோகனச் சக்கரத்தில் இடப்பட வேண்டிய எண்களாகப் பின்வருவனவற்றைத் திருமூலர் கூறுகின்றார்.

107 - 90 - 26

இஃது பிறச் சுவடிகளில் ஆடவர் மோகனம், புருஷ மோகனம், நர மோகனம் என்ற தலைப்பில் வெவ்வேறு இலக்க வேறுபாடுகளைக் காட்டுகின்றது.

107 - 90 - 26 - 223
107 - 46 - 26 = 179

ஈ. பகைவர் மோகன கன்மச் சக்கரம்:

பகைவர் மோகனச் சக்கரத்துள் பின்வரும் இலக்கங்கள் வரைந்து உயிரூட்ட வேண்டுமென்று தெரிவிக்கப்படுகின்றது.

32 - 23 - 58

இஃது பிற சுவடிகளில் பின்வரும் இலக்க வேறுபாடுகளுடன் காணப்படுகின்றது.

32 - 23 - 56 - 113
32o - 58 - 90o 55o 100o
103o 104o 113o 203o 215o

உ. விலங்கு மோகனக் கன்மச் சக்கரம்:

விலங்கு மோகனச் சக்கர இலக்கங்களாகப் பின்வரும் இலக்கங்கள் கூறப்படுகின்றன.

24 - 35 - 48o

இஃது பிற சுவடிகளில் பாட பேதங்களாகவும் காணப்படுகின்றது.

24 - 35 - 48 = 107o
24 - 30 - 48 - 102o
25 - 58 - 106
52o 104o 107o 110o

இவைகளேயன்றி இம்மோகனச் சக்கர வகைகளுள் மதனமோகனம் என்ற ஒன்றும் 25 - 58 - 106. 205. இலக்கங்களுடன் காணப்படுகின்றது.

3. தம்பனக் கன்மச் சக்கரங்கள்:

தம்பன கன்மம் என்பது கட்டுவினை, அஃதாவது தடை வினை. இவைகளின் வகை மொத்தம் ஏழு. இவைகளின் விரிவு நாற்பத்தேழு ஆகும்.

1.	நிலத் தம்பனம்	4
2.	நீர்த்தம்பனம்	8
3.	தீத்தம்பனம்	3
4.	சுக்கிலத்தம்பனம்	5
5.	படைக்கலத்தம்பனம்	5
6.	பகைத் தம்பனம்	11
7.	விலங்குத் தம்பனம்	11
		47 *

இவைகளை அக்கினித் தம்பனம் 2. சலத் தம்பனம் 3. இந்திரயத் தம்பனம் 4. பிஷ்கஸ்தம்பனம் 5. சிங்குவைத் தம்பனம் 7. கதிஸ்தம்பனம் 7. ரூபஸ்தம்பனம் 8. வாயுத்தம்பனம் 9. பூமித்தம்பனம் 10. ஆகாசத் தம்பனம் 11. ஞாயிறு தம்பனம் 12. திங்கள் தம்பனம் என்ற பாட பேதங்களாகவும் கூறப்படுகின்றன.

இத் தம்பன கன்மத்தின் பொது மந்திரம்

ஓம் நமோ காளீ நீல காளீ வஜ்ரகாளீ
நிர்வாணீ ஸர்வேந்த்ரீ யானீ ஸர்வாணீ
ஹ்ரீம் க்லீம் ஸ்ரீஸெள
ஸர்வஸ் தம்பிந்யை நம: ஓம் ||

இதனை இயந்திரத்தில் உள்ள 16 அறைகளின் புறத்தில் வரைந்து அவ்வக் கன்மங்களுக்குரிய சிறப்பு மந்திரத்தை 16 அறைகளின் அகத்தே வரைதல் வேண்டும். பின்னர் அமர்ந்து சனி வாரத்தில்சனி ஓரையில் மூன்றாம் சாமத்தில் மேற்குத் திசையில் அமர்ந்து அன்னை புவனாபதியை தியானிக்க இறைவியானவள் பச்சை நிறம் பொருந்தியவராயும், நான்கு திருக்கரங்களை உடையவராயும், அவற்றில் சங்கு, சக்கரம், அபயம், வரதம் ஆகியவற்றைக் கொண்டு விளங்குபவராயும் விளங்கித் தோன்றுவாள்.

* -தத்துவ நிசாநுபோக சாரம்ஆ
42 ஆம் அதம்தியாயம் கவுளயமெனலி மதம்

3. தம்பனம்

தம்பன கன்ம சக்கரத்திற்குரிய இலக்க துருவத்தின் இயந்திரம்

துருவ சக்கரம்

ப.	க.	வ.	த.
	க 7		த 1
	கா 2		தா 8
பி 3		வி 5	
பீ 6		வீ 4	

அத்துருவ சக்கரம்

ப.	க.	வ.	த
ப 12		வ 14	
பா 13		வா 11	
	கி 16		தி 10
	கீ 9		தீ 15

துருவாத்துருவ சக்கரம்

ப 12	க 7	வ 14	த 1
பா 13	கா 2	வா 11	தா 8
பி 3	கி 16	வி 5	தி 10
பீ 6	கீ 9	வீ 4	தீ 15

3. தம்பனம்

ப	க எ	வ	த க
	உ	அ	
ந		ரு	
சு		ச	

பொது வடிவம்

இந்தத் தம்பன கன்மத்தில் இறைவியை நினைத்துச் செய்யத் தக்கதாயுள்ள மந்திர வுருவின் தொகை இலட்சம் ஆகும். தர்ப்பனம், ஓமம் ஆகியவற்றின் தொகை தனித்தனியே பதினாயிரம் ஆகும். பிராணப் பிரதிட்டை யினையும் தந்திர முறைப்படி செய்தல் வேண்டும்.

1. நிலத்தம்பனம்:

இதன் வகை 4. அவை: 1. மரத் தம்புனம் 2. செக்குத் தம்பனம் 3. கரும்பாலை தம்பனம் 4 தன தானியத்தம்பனம் ஆகியவைகளாகும்.

அ. மரத்தம்பனம் சக்கரம்: மரமானது காய்க்காமல் செய்வதற்காகச் செய்யப்படும் சக்கரம்.

100 - 70 - 59

ஆ. செக்குத் தம்பனம் சக்கரம்: செக்கில் எண்ணெய் வராமல் இருக்கச் செய்யப்படும் சக்கரம்.

96 - 47 - 52

இ. கரும்பாலைத் தம்பனச் சக்கரம்: கரும்பாலையில் கரும்புச்சாறு வராமல் இருக்கச் செய்யப்படும் சக்கரம்

18 - 105 - 96

ஈ. தன தானியத் தம்பனச் சக்கரம்: தன தானியம் பெருக்காமல் பயிர் விளையாமல் இருக்கச் செய்யப்படும் சக்கரம்.

96 - 19 - 18

இவற்றுக்கான எண்ணும் எழுத்தும் வரையப்பட்டு, முறைப்படி வழிபாடு ஆற்றி முடிக்கப்பட்ட இந்த நிலத்தம்பன கன்ம பிரயோகச் சக்கரத்தை வேண்டிப் போற்றி அவ்வவற்றுக்கு அவ்வவற்றின் அடியில் அகழ்ந்து புதைத்து வைக்க வேண்டும்.

2. நீர்த் தம்பனம்:

நீர்த் தம்பனத்தின் சிறப்பு வகை 8 ஆகும். அவை அ.

உப்புப் படாமை ஆ. முத்து படாமை இ. வலையில் மீன்படாமை ஈ. ஆறு கரை புரளாமை உ. மழை பெய்யாமை ஊ. இடிக்கட்டு எ. மரக்கலம் போகாமை ஏ. ஆறு குளங்களில் நீர் நிற்க ஆகியவைகளாகும்.

அ. களத்தில் உப்பு விளையாமைக்குரிய சக்கர இலக்கம் 106 - 35 - 38.

ஆ. கடலில் முத்துப் படாமைக்குரிய சக்கர இலக்கம் 8க1 - 108 - 104.

இ. வலையில் மீன் படாமைக்குரிய சக்கர இலக்கம் 96 - 38 - 29.

ஈ. ஆறு கரை புளாமைக்குரிய சக்கர இலக்கம் 54 - 105 - 80.

உ. மழை பெய்யாமல் - வான் பொய்க்கச் செய்யும் சக்கர இலக்கம் 92 - 55 - 12.

ஊ. இடி விழாமைக்குரிய சக்கர இலக்கம் 80. 50. 106.

எ. மரக்கலம் ஓடாமல் செய்வதற்கான சக்கரத்தின் இலக்கம் 85 - 44 - 16.

ஏ. ஆறு, குளங்களில் நீர் நிற்கச் செய்வதற்கான சக்கர இலக்கம் 106. 75. 80

இந்த எண் இலக்கங்களையும் 16 சக்கர அறைகளில் மாறி மாறி அமைத்து பின் அந்த 16 அறைகளிலும் அவற்றிற்கான சிறப்பு மந்திரங்களை அமைத்து முறைப்படி பூசனை செய்து உரிய இடங்களில் புதைத்து வைக்க அன்னையின் அருளால் அனைத்துக் காரியங்களும் எண்ணிய வண்ணமே நிறைவேறும்.

3. சுக்கிலத் தம்பனம்

இதன்வகை 1. சுக்கிலத் தம்பனம், 2. சர்ப்பத் தம்பனம், 3. குழவி மரிக்காமை, 4. மாதர் தெருளாமை 5. சொங்கை அரும்பாமை என ஐந்து ஆகும்.

1. சுக்கிலத் தம்பலச் சக்கர இலக்கமாவது 56 - 60 - 93.

2. கர்ப்பம் தரிக்க செய்ப்படும் சக்கர இலக்கமாவது 27 - 32 - 40.

3. குழவி மரிக்காமை (பிறந்த பிள்ளை இறவாமை) சக்கர இலக்கமாவது 90 - 80 - 17. (பிள்ளை பெறுபவளின் பாவத்தைப் போக்கும் சக்கரம்.)

4. மாதர் தெருளாமைக்குரிய சக்கர இலக்கமாவது 40 - 42 - 17.

5. சொங்கை அரும்பாமைக்குரிய சக்கர இலக்கம் 60 - 70 - 87.

இந்தச் சுக்கிலத் தம்பன சக்கரத்தின் பிரயோக வகை 5க்கும் உரிய சிறப்பு மந்திரம்:

ஓம் ஸ்ரீம் க்லீம் க்ரம் வம் க்கம் அம்
க்ஷம் சிவாய ஹ்ரீம் இம் ணம் ணம் மம்
ஸ்தம்பய ஸ்வாஹா!!

இதனை இயந்திரத்தில் உள்ள 16 அறைகளிலும் அவ்வச் சிறப்பு எண்களுடன் கலந்து அடைத்து முறைப்படியான பூசைகள் செய்து அந்த வினைகளுக் குரிய இடங்களில் வைத்தல் வேண்டும்.

சுக்கிலம், பிள்ளை பிறந்து மறித்தல், சர்ப்பம் ஆகிய இந்த மூன்று தம்பன கன்மப் பிரயோகங்களிலும் இந்தச் சக்கரத்தை முடியில் அணிய வேண்டும்.

நகில் எழாமை, மாதர் தெருளாமை ஆகிய தம்பனப் பிரயோகங்களில் முறைப்படி பூசை பலி முதலியன செய்து முடிந்த பின்பு அந்தச் சக்கரத்துக்கு ஐங்காயம்[1] பூசி ஐயன் கோட்டத்துள் நிற்கும் யானையின் இடக்காலின் கீழே அந்த யந்திரத்தைப் புதைத்திடல் வேண்டும்.

இறைவன் கருணையால் எண்ணிய கன்மங்கள் யாவும் ஈடேறும்.

4. தீத்தம்பனம்

இந்தத் தீத்தம்பனத்திற்குரிய பிரிவுகள் மூன்று. அவை: 1. மழு வேந்தல் 2. இரும்பு வேகாமை 3. மனை வேகாமை ஆகியவை.

8 ꞉ = 16 அறை கொண்ட சக்கரத்தில்

ஓம் ஐம் க்லீம் க்ஷம் க்ஷம் க்ஷம் பகவதே
ஸ்ரீம் ட்ச் மிரியூம் வம் க்ஷம் ரம் ட்டம்
ட்டம் ஸ்தம்பய ஸ்தம்பய ஸ்வாஹா ||

எனும் சிறப்பு மந்திரத்தை அமைத்து அந்த அந்த சிறப்பு இலக்கங்களை சக்கர அறைகளுள் மாறுபட அமைத்து முறைப்படி பூசிக்க வேண்டும். பின்னர் மழுவேந்தல் வினைக்கு கையிலும், இரும்பு வேகாமைக்குக் கொல்லர் உலைக் களத்திலும் மனை வேகாமைக்கு வீட்டிலும் இயந்திரத்தை ஏற்றபடி வைக்க வேண்டும்.

இறைவியின் திருவருளால் எண்ணியது எண்ணியாங்கு சிறப்புடன் நிகழும்.

---

1. ஐங்காயம்: 1. வெண் சிறு கடுகு 2. உள்ளி (வெள்ளைப் பூண்டு - வெங்காயம்) 3. திப்பிலி (அரிசித் திப்பிலி - கண்டந் திப்பிலி) 4. மிளகு (வால் மிளகு - வெள்ளை மிளகு - கறி மிளகு) 5. காயம் முதலியன.

1. மழு வேந்தல் (பழுக்கக் காய்ச்சி இரும்பு தாங்குதல்) சக்கர இலக்கம் 90 - 18 - 31.

2. இரும்பு வேகாமை சக்கர இலக்கம் 36 - 48 - 45

3. மனை வேகாமை (வீடு எரியாது) க்குரிய சக்கர இலக்கம் 30 - 101 - 96

4. படைக்கலத் தம்பனம்

8 X 8 = 16 அறைகள் கொண்ட சக்கரத்தில்

ஐம் க்லீம் ஸர்வேந்த்ரியாணீ ரமி ரமி
ஹ்ரீம் ஹ்ரீம் யம் யம் ட்சிம் பம் ட்டம்
ரம் ஸ்தம்பய ஸ்தம்பய ஸ்வர்ஹா!

என்ற சிறப்பு மந்திரத்தை அமைத்து, அந்தந்த பிரிவுகளுக்கான சிறப்பு இலக்கங்களையும் மாறி மாறி அமைத்து பூசித்து படை வெட்டுப் படாமைக்குத் தலையிலும், அம்பு தைக்காமைக்கும் குத்து உறையாமைக்கும் கையிலும், கிடாய் வெட்டுப் படாமைக்கு அதன் பிடரியிலும், மரம் வெட்டுப் படாமைக்கு அதனடியிலும் சக்கரத்தைப் பதிக்க வேண்டும்.

இந்தத் தம்பனம் 1. வெட்டறாமை 2. குத்து உறையாமை 3. அம்பு தைக்காமை 4. மரம் வெட்டறாமை 5. கிடாய் வெட்டறாமை என ஐந்து வகையாகப் பிரிக்கப்படுகின்றது.

1. வெட்டறாமை:

ஆயுதம் வெட்டறாமல் இருக்க அமைக்கப்படும் சக்கர இலக்கம் 66 - 33 - 24.

2. குத்து உறையாமை:

உடம்பிற் குத்து உறையாமைக்குரிய சக்கர இலக்கம் 32 - 30 - 14.

3. அம்பு தைக்காமை:

உடம்பில் அம்பு தையாகூல் அமட்; பட்டாலும் தைக்காதிருக்க காப்பு சக்கர இலக்கம் 60 - 20 - 51

4. மரம் வெட்டுப்படாமை;

மரம் வெட்டினாலும் அறாதிருக்க அமைக்கப்படும் சக்கர இலக்கம். 76 - 20 - 26.

5. கிடாய் வெட்டுப் படாமை:

ஆட்டுக் கிடாய் வெட்டுப்படாமலிருக்க சக்கர இலக்கம் 57 - 42 - 70.

5. சத்துருத் தம்பன கன்மம்

பகைவன் தம்பனக் கன்மம் இஃது 11 வகையாகப் பகுக்கப்படுகிறது. அவை: 1. பகை நாவடக்கம் 2. சினமாற்றம் 3. கால் முடக்கம் 4. படைக்கலம் படாமை 5. கையெழுத இயலாமை 6. மிடற்றுத் தம்பனம் 7. கூத்துத் தம்பனம் 8. சரக்கு விலையாகாமை 9. தச்சுத் தொழிற்றம்பலம் 10. தண்ணுமை முழக்க மாட்டாமை 11. குயவன் மட்கலம் வனைய மாட்டாமை ஆகியவை களாகும்.

8 x 8 = 16 அறைகள் கொண்ட சக்கரத்துள்

ஓம் ஐம் க்லீம் ஸௌம் சர்வேந்த்ரீ-யாணீ
அம் க்ஷம் ஹ்ரீம் ளம் ஹ்ரீம் ட்ச்மீரம்
ஆம் க்ரோம் ஷ்ரீம் ஸ்தம்பய ஸ்வாஹா!!

என்ற சிறப்பு மந்திரத்தைப் பதித்து 11 வகையான கன்ம இலக்க எண்களைப் பதித்து இயந்திரத்தை அமைத்தல் வேண்டும். பின்னர் இதன் முறைப்படி பூசனையாற்றி முடித்த பின்னர் வாக்குத்தம்பனம், குரோதத் தம்பனம் ஆகிய சக்கரங்களை முடியிலும், கால், கை, படைக்கலம் ஆகிய கட்டு வினை

ஏவல்களில் ஐயன் கோயில்களில் நிற்கும் கரி பரி ஆகியவற்றுள் ஒன்றன் இடக் காலிலும்

குயவர் கலம் வனையாமை, தச்சர் பணி செய்யாமை ஆகிய கட்டுவினை ஏவல்களில் இயந்திரத்தை அவ்வத் தொழிற்சாலைகளிலும், சரக்கு விலை போகாமைக்குக் கடையிலும் வைத்தல் வேண்டும்.

இசை பாடுதல், தண்ணுமை கொட்டுதல், கூத்தாடுதல் ஆகியவற்றின் தம்பனப் பிரயோகங்களில் இயந்திரத்தைக் கையில் திண்மையாகப் பற்றியிருக்க வேண்டும் என்று திருமூலர் மந்திர விளக்கம் உரைக்கின்றார்.

1. பகை நாவடக்கம்:

பகை நாவடக்கம் (நாக்குப் பேச முடியாமல் ஸ்தம்பிக்கச் செய்தல்) செய்ய அமைக்கப்படும் சக்கரத்தின் இலக்கம் 50 - 58 - 57.

2. சினம் அடங்க:

பகைவன் சினம் அடங்குவதற்கு உள்ள சக்கரத்தின் இலக்கம் 102 - 17 - 32.

3. கால் நடை முடங்க:

பகைவரின் கால் நடவாமல் மடங்க (முடங்க) சக்கரத்தின் இலக்கம் 60 - 24 - 55.

4. பகைவர் படைக்கலம் படாமை:

பகைவரின் படைக்கலங்கள் உடலில் ஊடுருவாமல் காக்க சக்கர இலக்கம் 30 - 47 - 62.

5. எழுதாமல் கை மடங்குதல்:

பகைவரின் கை எழுத முடியாமல் முடங்கிப் போக 36 - 47 - 70 ஆகிய இலக்கங்கள் சக்கரத்தில் அமைக்கப்பட வேண்டும்.

6. பாடல் தம்பனம்:

பாட்டுப் பாடாமல், பாட முடியாமல் பாட்டு ஸ்தம்பிக்க மிடறு போகாது இருக்க சக்கரம் 70 - 35 - 32.

7. ஆடல் தம்பனம்:

கூத்தாடும் அரங்கில் கூத்தாட முடியாமல் முடங்க சக்கர இலக்கம் 75 - 80 - 24.

8. சரக்கு விற்காமை:

பகைவரின் சரக்கு விலை போகாமல் தடுப்பதற்கான சக்கர இலக்கம் 58 - 71 - 36.

9. தச்சர் படை பண்ணார்:

பகைவரின் தச்சர் தம் பட்டறையில் வேலை செய்ய முடியாமல் ஸ்தம்பிக்கச் செய்ய சக்கர இலக்கம் 17 - 26 - 106.

10. தண்ணுமை கொட்டல்:

கூத்து விகற்பங்களுக்கு அமைந்த வாச்சியக் கூறுகள் நிறைந்த வாத்தியங்களை இயக்க முடியாமல் மடக்கி விட. அதற்கான சக்கர இலக்கம் 106 - 34 - 17.

11. மட்கலம் வனைய இயலாமை:

பிரசித்தமான குயவர்கள் பானை வனைக்காமல் செய்ய, அவனது சக்கரம் ஆடாது இருக்க, அவனது சூளையில் பானை வேகாது இருக்க பின்வரும் இலக்கங்களைச் சக்கரத்துள் அடைத்தல் வேண்டும். 75 - 86 - 64.

6. விலங்குத் தம்பன வகை

8 x 8 = 64 அறைகள் கொண்ட சக்கரத்துள்

ஓம் ஹ்ரீம் க்லீம் ஔம் டச் மரயூரம்
அம் க்ஷம் க்லீம் யம் உம் தளதள
கோணே கோணே ஐம் ஸ்வாஹா!!

எனும் சிறப்பு மந்திரத்தை அமைத்து இதன் வகை இலக்க மந்திரங்களையும் அமைத்து முறைப்படி வழிபாடு செய்து முடித்த பின்னர் அந்தச் சக்கரத்தை புலி, பன்றி, யானை, கிடாய், பாம்பு முதலியவற்றின் தம்பன பிரயோகங்களில் ஏற்ற பெற்றியாக முடியில் தரிக்க வேண்டும்.

நரித் தம்பனம், எலித் தம்பனம் ஆகியவற்றின் இயந்திரத்தைக் கொல்லையிலும், வயல்களிலும் உள்ள நான்கு மூலைகளிலும் அவற்றின் நடுவிலும் புதைத்து வைக்க வேண்டும். நாய், ஏறு, பசு, இவற்றிற்குரிய தம்பன இயந்திரத்தின் வைப்பிடம் தெளிவாகத் தெரியவில்லை.

விலங்குத் தம்பனத்தில் முதலில் இடம் பெறுவது புலி வாய்க்கட்டு.

1. புலி வாய்க் கட்டு:

புலி வாயைக் கட்டுவதற்கான தம்பன இலக்க இயந்திரம் 20 - 87 - 22.

2. கரித் தம்பனம் (யானைக் கட்டு):

நம்மை நோக்கி வந்து ஏறும் மாலை போலும் யானையைத் தோற்பிப்பதற்கு வரையப்படும் சக்கரத்துள் அமைக்கப்படும் எண்களாவது 9[illegible] 80.106.

கரடி வெம்புலி வாயையும் கட்டலாம் - தாயுமான சுவாமிகள்

3. எலி வாய்த் தம்பனம் (எலி வாய்க்கட்டு):

எலி எதிர்வராது ஓட, எலி தானியங்களைத் தின்று வீணாக்காமல் இருக்க அமைக்கப்படும் எந்திர இலக்கங்கள் 20 - 90 - 35.

4. கிடாய்த் தம்பனம்:

பின்னே கால் வாங்கிப் போய் முன்னே எதிர்த்து ஓடி வந்து தாக்கும் ஆட்டுக் கிடாயை கட்டுப் படுத்தும் சக்கரத்தின் இலக்கம் 35 - 62 - 38.

5. பாம்புத் தம்பனம்:

தொடர்ந்து ஓடி வரும் பாம்பு தொடராமல் பட மெடுத்து ஆடாமல் கடிக்காமல் இருப்பதற்கான சக்கர இலக்கங்கள் 49 - 50 - 24.

6. நரி வாய்க் கட்டு:

நரி வாய்க் கட்டும் சக்கர இலக்கமாவது 55 - 22 - 88.

7. நாய் வாய்க்கட்டு:

நாய் வாய் வராமல், கடிக்காமல் இருப்பதற்கான சக்கரத்தின் இலக்கம் 15 - 20 - 24.

8. பரி ஓடாமை:

குதிரையானது நடக்காமல், ஓடாமல் இருப்பதற்கான சக்கர இலக்கம் 17 - 40 - 68.

9. எருது மேல் விழாமை:

காளையானது பொலிப்புடன் எதிர்த்துச் சென்று தாக்குதல் செய்யாதிருக்க அல்லது எருது பசு மேல் பாயாதிருக்க சக்கர இலக்கம் 70 - 101 - 40.

10. பசு மேல் விழாமை:

எருதுவும் பசுவும் கூடாதிருக்க சக்கர இலக்கம் 70 - 101 - 40.

11. பன்றி வாய்க்கட்டு:

பன்றி வராமல் வாய்க்கட்ட சக்கரத்தில் பின் வரும் இலக்கங்களை இடுதல் வேண்டும். 44 - 80 - 17.

4. உச்சாடன கன்மச் சக்கரங்கள்

உச்சாடனம் ஆவது: பூர்வசுகாசிகை முதலான மிருத்துக்களையும், மனைவி, மக்கள், சுற்றம், நட்பு முதலாயினாரையும், தண்டு விட்ட அரசர் முதலாயினாரையும் விட்டு வேறுபட்டு ஓடிப் போகச் செய்தல்.

உச்சாடன கன்மத்தின் பொது மந்திரமான

ஓம் ஹ்ரீம் ஶ்ரீம் க்லீம் ஶ்ரீம் கோணே தளதள
ரிபுஜித் சளசள ஹரிஹரி ஹரஹர பிரிபிரி சாடு சாடு
க்ரீடக் கிரீட ச்ரௌம் க்லீம் க்லௌம்
ஐம் க்லீம் பக்வதே பூம்நா ஸர்வே ந்த்ரியாணி
ரம்ரம் பரபர பறந்து போக கடுககடுக சுவேகா II

என்பதனை பதினாறு அறையுள்ள சக்கரத்தின் புறத்தே வரைந்து அகத்தே பொது இலக்க முறையினை வரைந்து திங்கள் ஓரையில் 4 ம் யாமத்தின் முடிவில் வாயுத் திக்கின் கண்ணே அமர்ந்து (வடமேற்கு மூலை) பிராணப் பிரதிஷ்டை மந்திர உரு 1000 மும் மூல மந்திர செப உரு 100,000 மும், ஓம் ஆகுதி 100மும் தர்ப்பணம் 10,000 மும் ஆகிய இந்தத் தொகையின் அளவினவாகச் செய்து முடித்தல் வேண்டும்.

அப்பொழுது அங்கே சித்திர வண்ணம் பொருந்திய தேவி காட்சியளிப்பாள்.

3. உச்சானம்

உச்சாடன கன்ம சக்கரத்திற்குரிய இலக்க துருவத்தின் இயந்திரம்

துருவ சக்கரம்

ப 4		வ 6	
பா 5		வா 3	
	கி 8		தி 2
	கீ 1		தீ 7


அத்துருவ சக்கரம்

	க 15		த 9
	கா 10		தா 16
பி 11		வி 13	
பீ 14		வீ 12	

துருவாத் துருவ சக்கரம்

ப 4	க 15	வ 6	த 9
பா 5	கா 10	வா 3	தா 16
பி 11	கி 8	வி 13	தி 2
பீ 14	கீ 1	வீ 12	தீ 7

4. உச்சாடனம்



இந்த உச்சாடன கன்மத்தின் வகை 8. விரி 73 ஆகும்.

	வகை	விரி
அ.	தெய்வ உச்சாடனம்	6
ஆ.	அரசர் உச்சாடனம்	5
இ.	உலக உச்சாடனம்	6
ஈ.	வியாதி உச்சாடனம்	30
உ.	மாந்தர் உச்சாடனம்	2
ஊ.	பகைவர் உச்சாடனம்	10
எ.	நீர் உச்சாடனம்	5
ஏ.	விருக உச்சாடனம்	9
		73 *

அ. தெய்வ உச்சாடனம்:

இஃது ஆறு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை:
1. ஐயன் போக 2. பிடாரி போக 3. பிரம கண்டன் போக 4. முயலகன் போக 5. குமர கண்டன் போக 6. பிசாசு குறள் பேய்களின் போக்குவினை ஆகியவைகளாகும்.

1. ஐயன் போக:

ஐயன் என்பது குட்டிச் சாத்தான். இஃது குறளித் தேவதை எனப்படும் ஒரு வகைப் பேய். இதனை ஓட்டுவதற்கான சக்கர இலக்கமானது 51 - 16 - 50.

2. பிடாரி போக:

பிடாரி என்பது காளியைக் குறிக்கும். ஊரின் புறத்தே இப்பிடாரியின் கோட்டம் அமைந்திருக்கும். அது பற்றி எல்லைப் பிடாரியம்மன், எல்லையம்மன் எனவும்

---

* திருமந்திரம் 300 செய். 133-181

வழங்கப்படும். சப்த மாதாக்களில் ஏழாவது இளையாள் எனச் சிலப்பதிகாரம் இவளைச் சுட்டும். இந்தக் கிராம தேவதை வருத்தம் செய்யும் போது அதனை விரட்டும் சக்கரமாவது 60 - 57 - 70 ஆக அமைத்து பயன்படுத்தப்பட வேண்டும்.

3. பிரம கண்டன் போக:

அகாலத்தில் மரணமடைந்த பிராமணனின் ஆவியான இந்த பிரமகண்டப் பேய் வடிவத் தொந்தரவு போக பின்வரும் இலக்கமிட்ட உச்சாடன கன்ம சக்கரத்தைப் பயன்படுத்த வேண்டும். 78 - 87 - 106.

4. முலயகன் போக:

முயலகன் என்பது ஒருவித வலிப்பு நோய். இஃது தீர 20 - 49 - 88 எண்கள் இடப்பட்ட சக்கரத்தைப் பயன்படுத்த வேண்டும்.

5. குமர கண்டன்:

இஃது ஒரு வலிப்பு நோய். இந்நோய் நீங்க 72 - 90 - 95 என அமைந்துள்ள சக்கர வடிவத்தை உபயோகிக்க வேண்டும்.

6. பிசாசு குறள் பேய்களின் போக்குவினை:

பரு உடம்பிற்கு விதிக்கப்பட்டுள்ள ஆயுளின் எல்லை இயல்பாக முடிவதற்குள்ளாக அகால மரணம் அடைந்து, காற்றுருவாயிருந்து தூயவர் அனைவரையும், மன வலிமை இல்லாதவரையும் சமயம் பார்த்துப் பற்றி வருத்தும் பிசாசு, குறளிப் பிசாசுகளை விரட்டுவதற்கு 60 - 107 - 52 இலக்கமிட்ட தெய்வ உச்சாடன கன்ம இயந்திரத்தைப் பயன்படுத்த வேண்டும்.

இதுகாறும் கூறப்பட்ட தெய்வ உச்சாடன வகை ஆறுக்கும் உரிய சிறப்பு மந்திரமாவது:

ஓம் ஸௌம் ட்ச் ம்ரியூம் க்லீம் யட்ச
யட்ச ராட்சஸ் ராட்சஸ் ஸ:க்லீம்
ட்டம் ட்டம் ஓம் ஐம் ட்டம் ட்டம்
ஸ்வாகா ||

இதனை 16 அறைச் சக்கரத்தின் புறத்தே வரைந்து முறைப்படி வழிபாடாற்றி முற்றிய பின்னர் முடியில் தரித்தல் வேண்டும்.

இப்படிச் செய்தால் அப்பொழுதே அவை அஞ்சி நடுங்கி ஓடி விடும்.

ஆ. அரச உச்சாடனத்தின் வகை 5:-

இஃது அரசன் போக, அரசன் பதி போக, அரசன் செல்வம் போக, அரசன் சேனை போக, தேர், பரி, கரி, கருவி ஆகியவை போக தடுக்கும் இயந்திர வகை உணர்த்துவது.

இதற்கான சிறப்பு மந்திரம்;

ஓம் அம் ஆம் ளம் ஹ்ரீம் க்ஷம் க்ஷம் க்லீம்
ஸ்ரீம் ச்ரௌம் ரம் க்கழ் ப்லூம் த்ரூம் த்ரூம்
டச்ம்ரியூம் ஸௌம் ஸ்வாகா ||

இதனை இயந்திரத்தில் பொதுப்பட வரைந்து 16 அறை சக்கரத்தை நடுவில் வரைந்து அதில் அந்த அந்த வினைக்குரிய சிறப்பு இலக்கங்களை வரைதல் வேண்டும்.

அரசன் போக	55 - 16 - 92
அரசன் பதி போக	36 - 37 - 92
அரசன் செல்வம் போக	100 - 95 - 60
அரசன் சேனை போக	106 - 95 - 60

அரசன் தேர், பரி, கரி, கருவி ஆகியவை போக 102 - 93 - 60

இ. உலக உச்சாடனம்:

போக்குவரவு, கிலேசம், மோகம், அச்சம், பெருவினை, விலங்குத்தளை ஆகிய அறுவகையான உலக உச்சாடனங்களுக்குரிய சிறப்பு மந்திரம்.

ஓம் அம் ஆம் ளம் ஹ்ரீம் க்ஷம் க்ஷம்
க்லீம் ஸ்ரீம் ச்ரௌம் ரம் க்கம் ப்லூம்
த்ரூம் த்ரூம் ட்ச் மிரியூம் ஸௌம் சுவாகா॥

இதனை இயந்திரத்தில் உள்ள பதினாறு அறைகளிலும் அடைத்து பூஜித்துப் பின்னர் முடியில் அணிய இவ்வுச்சாடன கன்மம் சித்திக்கும்.

1. வழிநடை போக 85 - 58 - 36
2. இடர் போக 57 - 48 - 66
3. மோகம் போக 32 - 61 - 76
4. பயம் போக 90 - 105 - 40
5. பெருவினை போக 15 - 70 - 60
6. விலங்குதளை போக 90 - 105 - 82

ஈ. வியாதி உச்சாடனம்:

இதன் வகை 30ஆகக் கூறப்படும்.[1]

இதன் சிறப்பு மந்திரமாவது:

ஓம் கம் கம் கணபதே ஹம் ஸம் சிவாய
ட்ச்மிரியூம் ஹ்ரீம் க்லீம் க்லௌம்
ஐம் ட்டம் ட்டம் ட்டம் சுவாகா॥

இங்கு கூறப்படும் 30 வகையினவாகிய வியாதிகளின் போக்கு வினையேவலில் உரிய மந்திரத்தை இயந்திரத்தில் விதிப்படி பூசனையாற்றி முற்றிய பின் அவ்வியந்திரத்தை முடியில் அணிய வியாதிகள் அனைத்தும் தீரும் எனத் திருமூலர் கூறுகின்றார்.[2]

1. திருமந்திர மாலை செய்யுள் 146 - 160
2. திருமந்திரம் 300 செய். 162

1.	சூலை நோய் போக	32 - 61 - 54
2.	பித்தம் பைத்தியம் போக	24 - 77 - 68
3.	வைசூரி போக	36 - 75 - 52
4.	உளைப்பு போக	51 - 56 - 36
5.	கழலை போக	48 - 90 - 32
6.	விப்புருதி தீர	67 - 56 - 40
7.	வாத நோய் தீர	56 - 108 - 97
8.	குரல் வளை நோய் தீர	95 - 38 - 86
9.	குன்ம ரோகம் போக	57 - 42 - 78
10.	பித்தரோகம் போக	58 - 108 - 90
11.	தொடர் பித்தரோகம் போக	93 - 56 - 102
12.	பித்த பாண்டு ரோகம் போக	71 - 106 - 24
13.	உக்கிர பித்தம் போக	96 - 25 - 56
14.	ஈளை போக	90 - 97 - 102
15.	கய நோய் போக	35 - 42 - 32
16.	கருமேகம் போக	96 - 86 - 105
17.	கல்லெரிப்பு தீர	101 - 36 - 38
18.	உடம்பெரிப்பு தீர	121 - 100 - 48
19.	வெப்பு நோய் தீர	104 - 86 - 17
20.	நான்மாறல் சுரந்திரு	75 - 84 - 106
21.	குலைப்பு போக	17 - 70 - 86
22.	செவி நோய் போக	47 - 30 - 16
23.	முலைக்குத்துப் போக	16 - 102 - 18
24.	தொழுநோய் போக	70 - 36 - 83
25.	கண்ணோய் போக	70 - 90 - 49
26.	பல்லரணை பற்குத்துப் போக	105 - 82 - 18
27.	கருங்குட்டம் செங்குட்டம் போக	102 - 99 (?)
28.	வசூரி குருமுச்சில் (கொப்பளம்) போக	27 - 80 - 32
29.	ஒற்றைத் தலைவலி போக	40 - 37 - 32
30.	வயிற்று நோய் போக	58 - 50 - 45

உ. மாந்தர் உச்சாடனம்

இஃது மாதர் உச்சாடனம், மைந்தர் உச்சாடனம் என இருவகைப்படும்.[1]

இதற்கான சிறப்பு மந்திரம்:

ஓம் க்லீம் ஸௌம் ஹ்ரீம் ஐம் நமோ
தேவி சண்டி த்ரிலோக மோகி நீ
விரி விரிட்டம் ட்டம் சுவாகா ॥

இந்த மந்திரத்தை 16 அறைச் சக்கரத்தில் முறைப்படி வரைந்து இயந்திர வட்டத்திற் பெற்றோர் பெயரையும் வரைந்து விதிப்படி வழிபாடாற்றிப் போற்றிப் பூசனை முற்றிய பின்பு மனையிற் புதைக்கப்பட வேண்டும்.

1. மாதர் உச்சாடன சக்கரத்திற்குரிய இலக்க அறைகள் 90 - 107 - 80.

இஃது சில இலக்க வேறுபாடுகளுடனும் சுவடிகளில் காணக் கிடக்கின்றது.

90 - 107 - 80 - 277
90 - 50 - 45 - 185
92 - 107 - 80 - 279
37. 90. 108. 139. 185. 216. 277
279. 339. 900.

2. மைந்தர் உச்சாடனச் சக்கரத்திற்குரிய இலக்க அறைகள் 58 - 90 - 25.

இதற்கான இலக்க வேறுபாடுகள்

58 - 90 - 25 - 173
90 - 52 - 58 - 200

---

1 திருமந்திரம் 300 - செய். 162

90 - 25 - 85 = 200.

92 - 25 - 85 = 202

90 - 107. 13. 161. 173. 200. 202.

ஊ. பகைவர் உச்சாடனம்:

சத்துரு போதல், பகைவர் நாடு பறி போதல், பகைவர் சேனை ஓடுதல், பகைவர் தனதானியம் போதல், பகைவர் செல்வம் போதல், பகைவர் இருந்த மண் போதல், பகைவன் கையாயுதம் போதல், பகைவர் மனை வெண்கலம் ஏகுதல், பகைவர் அணிகலன் போதல், பகைவர் சுகம் போதல் எனும் பத்து வகையதான இந்தப் பகைவர் உச்சாடனத்தின் சிறப்பு மந்திரமாவது:

ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் சண்டமாயே கம் காம்
சூம் ஹ்ராம் ட்ச் மிரியும் ஆம் க்ரோம்
கலீம் ஸ்ஹ்ஸ்ரம் ஜ்வாலி நீ சத்ருச்
சாடநே ஸ்வாஹா II

இந்த மந்திரத்தை இயந்திரத்தில் உள்ள 16 அறைகளிலும் பொருந்த வரைந்து முறைப்படி வழிபாடாற்றி பின்பு அதனை ஐயன் கோட்டம் - அதனைச் சூழ்ந்த வீதி - சந்தி - மாற்றார் மனை ஆகியவற்றுள் யாதேனும் ஓரிடத்தில் அயலார் அறியா வண்ணம் புதைக்க வேண்டும்.

1.	சத்துரு போக	18 - 56 - 47
2.	பகைவர் நாடு பறி போக	17 - 60 - 36
3.	பகைவர் சேனை ஓட	85 - 106 - 60
4.	தனதானியம் போக	42 - 102 - 52
5.	செல்வம் போக	81 - 30 - 50
6.	இருந்த மனை போக	21 - 104 - 50
7.	கையாயுதம் போக	85 - 32 - 56
8.	மனை வெண்கலம் போக	98 - 97 - 36

9. அணிகலன் போக 106 - 65 - 46
10. சுகம் போக 88 - 47 - 36

எ. நீர் உச்சாடனம்:

நீர் முன்னேறிப் போக, ஆற்றங்கரை போக, கடலில் முத்துப் போக, கடலில் மரக்கலம் ஓட, ஆறு நீர் போக என நீர் உச்சாடனம் ஐந்து வகையாகச் சுட்டப் பெறுகின்றது.[1]

ஓம் ஐம் க்லீம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரௌம்
ஸ்ரீம் ஹ்ரீம் ஈச்வரீ ஸஹஸ்ரம்
ஜ்வாலி ரு முக்த்வா ஸர்வேந்த் திரியாணி
ட்டம் ஸ்வாஹா ஓம் ||

என்பது இதற்கான சிறப்பு மந்திரம். இதனை முறைப்படி இயந்திரத்தில் வரைந்து வழிபாடாற்றி முற்றிய பின்பு ஐங்காயம் பூசி ஆற்றங்கரையிலும் ஏரிக் கரையிலும் படகிலும் நாவாயிலும் வைத்து விட வேண்டும் என்று இதற்கான கன்ம விதி திருமந்திரத்துள் கூறப்படுகிறது.

1. ஆற்று நீர் முன்னேறிப் போக 106 - 58 - 35
2. ஆறு கரை போக 66 - 25 - 50
3. கடலில் முத்து விளைவில்லாமல் போக 50 - 67 - 80-
4. கடலில் மரக்கலம் ஓடும் 105 - 108 - 196
   (கடலில் ஓடும் வலிய மரக்கலமும் உடைந்து போகும்)
5. ஆற்றில் நீர் வற்றிப் போக 96 - 77 - 18

ஏ. விருக உச்சாடனம்:

புலி போக, பன்றி போக, யானை விரைந்து ஓட, குதிரை விரைந்து ஓட, நாவாய் (ப்பூச்சி) போக, தாட் புழு போக, எலி, பாம்பு போக, விஷம் போக ஆகிய ஒன்பது கன்ம வினைகட்குமான சிறப்பு மந்திரம்.

---

1. திருமந்திரம் 300 செய். 174

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஐம் க்லீம் ஐம் ஸ்வாஹா
ஸ்ரீம் ஹ்ரீம் உமாபதே ஐம் க்லீம்
ஸர் வேந்தங் யாண்டு தும் தூம் ஹம்ஸம் சுவாகா ||

16 அறைச் சக்கரத்தில் முறைப்படி எண்ணையும் எழுத்தையும் வரைந்து விதிப்படி வழிபாடாற்றி பின் அந்த எந்திரத்தை எலி, பன்றிகளின் போக்கு வினைகட்கு அவற்றிற்குரிய சொல்லை கழனிகளின் நான்கு மூலைகளிலும் புதைக்க அவை போகும்.

புலிக்கு அரையில், நாவாய்க்குக் கழனி நடுவிலும் நான்கு திசைகளிலும், ஏழு திக்கிலும் முதல் மடையிலும் தாட்புழுவுக்கு, யானை, குதிரை விஷங்கட்குத் தலையில் தரிக்க வேண்டும். பாம்புக்குக் கழுத்தில் வைக்கவும்.

விலங்கின் போக்கு வினை ஏவலின் வகை 9. 1

1.	புலி போக	85 - 70 - 80
2.	பன்றி போக	109 - 68 - 80
3.	யானை விரைந்து ஓட	104 - 47 - 26
4.	குதிரை விரைந்து ஓட	15 - 56 - 60
5.	நாவாய்ப்பூச்சி போக	17 - 24 - 28
6.	தாட்புழு போக	60 - 17 - 50
7.	எலி போக	53 - 60 - 80
8.	பாம்பு போக	52 - 67 - 50
9.	விஷம் போக	101 - 50 - 58

5. ஆகர்ஷண கன்ம சக்கரங்கள்:

இஃது அழைப்பு வினையேவல் என்றும் சொல்லப் படும். இதற்கான பொது மந்திரம்

ஓம் ஐம் க்லீம் ஸௌ கம் கம் கம் கணபதே
வரவரத சர்வ லோக நாத ஸர்வஸ்த்ரீ
புருஷ வசங்காராய ஸர்வம் சீக்ரம் அம்அம்

---

1. திருமந்திரம் 300 செய். 170

ஆம் க்ரோம் ஹ்ரீம் சும்ஸம்
வசமா நய ஆகர்ஷய ஆகர்ஷய வ்ர்வர
ட்டம் ட்டம் ப்லூம் வௌவுடு.

இஃது இயந்திரத்தில் உள்ள புறவட்டத்தில் அமைக்கப்பட வேண்டும். பின்னர் அந்தத் தகட்டை ஐங்காயம் பூசி சிறு தேனீயின் மெழுகாற் பொதித்து விளக்கில் வெதுப்பி வெள்ளிக்கிழமை இரவு முதல் யாமத்தின் கடை சுக்கிர ஓரையில் ஐயன் கோவிலில் சென்று பூப்பலியும் அவிப்பலியுமாகிய பூசனையைப் புரிந்து ஐயன் கோயிலின் முன்னர் நிற்கும் கரி பரிகளினுடைய வலக்காலின் கீழே வைத்தல் வேண்டும். அப்போது மனத்துள் புவனாபதியின் திருவுருவம் மனத்துள் தோற்றமளிக்கும்.

அம்மையானவள் நீல மேனியராயும் கரும்பு வில் ஐம்மலர்க்கணை ஏந்திய திருக்கைகளை உடையவளாயும் பதுமாசனத்தில் அமர்ந்த நிலையில் வீற்றிருந்து வேண்டிய வரத்தை தந்தருள்வாள்.[1]

இந்த அழைப்பு வினையேவலின் வகை ஏழு இவற்றின் தொகை 31 என திருமூலர் குறிப்பிடுகின்றார்.[2]

1. அரசர் அழைப்பு வினையேவலின் தொகை 5
2. உலக அழைப்பு வினையேவலின் தொகை 8
3. மாதர் அழைப்பு வினையேவலின் தொகை 1
4. மைந்தர் அழைப்புயேவலின் தொகை 1
5. விலங்கின் அழைப்பு வினையேவலின் தொகை 9
6. பகைவரின் அழைப்பு வினையேவலின் தொகை 5
7. நீரின் அழைப்பு வினையேவலின் தொகை 2

மொத்தத் தொகை 31

---

1. திருமந்திரம் 300 பாடல் 217
2. திருமந்திரம் 300 பாடல் 215

5. ஆகர்ஷணம்

ஆகர்ஷன கன்ம சக்கரத்திற்குரிய இலக்க துருவத்தின் இயந்திரம்

துருவ சக்கரம்

ப.	க.	வ.	த.
	க 1		த 7
	கா 8		தா 2
பி 5		வி 3	
பீ 4		வீ 6	

அத்துருவ சக்கரம்

ப.	க.	வ.	த.
ப 14		வ 12	
பா 11		வா 13	
	கி 10		தி 16
	கீ 15		தீ 9

துருவாத்துருவ சக்கரம்

ப 14	க 1	வ 12	த 7
பா 11	கா 8	வா 13	தா 2
பி 5	கி 10	வி 3	தி 16
பீ 4	கீ 15	வீ 6	தீ 9

ஆகர்ஷணம்

ப	க க	வ	த எ
அ		உ	
ரு		ஙு	
ச		சு	

பொது வடிவம்

1. அரசர் அழைப்பு வினையேவல்:

இஃது 1. அரசர், 2. கரி, பரி, தேர்கள் வர 3. படை, 4. தனம், 5. படைக்கல் அழைப்பு வினையேவல் என ஐந்து வகையாகப் பகுக்கப்படும்.

1. அரசன் வர 18 - 57 - 108
2. அரசரின் யானை குதிரை தேர்கள் வர 40 - 90 - 105
3. படை கூட 105 - 60 - 18
4. தண்ணீர் வர 80 - 56 - 91
5. படைக்கலங்கள் கூட 18 - 47 - 96

இவ்வைந்து வினையேவல்களுக்குமான சிறப்பு மந்திரம்:

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம் ஜ்வல ஜ்வல ஜ்வல ஸ்வாஹா.
ஜ்வால்ய ஜ்வால்ய ஜ்வால்ய ஸ்வாஹா
வரவர ஹம்ஸஸ் ஸோ ஹம்ஸ:
ராஜா கர்புணம் குருஸ்வாஹா ||

இம் மந்திரத்தை இயந்திரத்தில் முறைப்படி வரைந்து தென் திசை முகமாய் ஆசனத்திலிருந்து விதிப்படி வழிபாடாற்றித் தியானித்திருக்க இந்த அழைப்பு வினையேவல் சித்திக்கும்.

2 உலக அழைப்பு வினையேவல்:

இஃது அகன்றார் வர, நினைத்தவை வர சுகம் வர, உண்டி வர, தானியம் வர, வைப்பு நிதி வர, கிலேசம் வர, புடைசர என எண்வகைப் பிரிவுகளை உடையது. இதன் சிறப்பு மந்திரம்

ட்டம் ட்டம் ட்டம் ஓம் ரும் சிரீம்
லூம் ஹ்ரீம் க்லௌம் ஸ்ரீம் ஹ்ரீம்
ஈம் ஐம் க்லீம் ஸௌ: ஸௌ:
க்லீம் ஐம் ஹ்ரீம் வரவர ஐம்
ட்டம் ட்டம் ட்டம் ட்டம் ஸ்வாஹா||

இதனை இயந்திரத்தில் உள்ள 16 அறைகளிலும்

முறைப்படி வரைந்து விதிப்படி போற்றி வழிபட உலக அழைப்புக் கன்மம் சித்திக்கும்.

அகன்றார் வர	77 - 58 - 300
நினைத்தவை வர	55 - 70 - 86
சுகம் வர	47 - 92 - 20
அன்னம் வர	16 - 26 - 55
தானியம் வர	57 - 42 - 18
வைப்பு நிதி வர	35 - 70 - 90
கிலேசம் வர	63 - 14 - 17
படை வர	50 - 40 - 61

3. மாதர் அழைப்பு வினையேவல்:

ஓம் நமோ பகவதே க்ரோம் ஓம் சிரீம்
ஹ்ரீம் க்லீம் ஸர்வ இந்த்ரியாணீ
த்ரை லோக்ய மோகி நி ஹ்ரீம்
க்லீம் ஸ்வாஹா ||

இந்தச் சிறப்பு மந்திரத்தை 16 அறைகளிலும் முறைப்படி வரைந்தும் வருகையை விழைந்த மாதரின் பெயரையும், அவளுடைய நற்றாயின் பெயரையும் இயந்திரத்தின் புற வட்டத்தில் எழுதியும் அவள் தன் வடிவினைப் பின்புறத்தே பொறித்தும், ஐங்காரத்தைப் பூசியும், சிறு தேன் மெழுகில் பொதித்து பின்பு அதனை விளக்கில் வாட்டவும். அப்போது விழையப்பட்ட மாதர் புவனாபதியாரின் ஆகையால் புளியமிலாரால் ஒறுக்கப்பட்டு, பற்றி இழுத்துக் கொண்டு வருமாறு போலத் தியானித்திருக்க வேண்டும்.

இவ்வியந்திரத்திற்குரிய இலக்க முறைமை வருமாறு 16 - 58 - 300.

4. ஆடவர் அழைப்பு வினையேவல்:

ஓம் ஸ்ரீம் ஹ்ராம் ஹ்ராம் ஹ்ரூம்
ஹ்ரைம் ஹ்ரெளம் ஈம்

க்யல பேத்கிலஜே ஹ்உம் ஹ்ரீம்
ஐம் ஹ்ரீம் வரவரதும் ஸ்வாஹா

இந்த சிறப்பு மந்திரத்தைச் சக்கரத்திலடைத்து புறவட்டத்தில் அவன் பெயரைப் பொறித்து, சிறு தேன் மெழுகிட்டு, ஐங்காயம் பூசி விளக்கிற் காய்ச்சி பின் அதன் மேல் அவன் தந்தை பெயரை வட்டத்தில் வரைந்து தியானிக்க வேண்டும்.

இதில் இட வேண்டிய இலக்க முறைமை 80-88-51.

மாதர் அழைப்புக்கும் மைந்தர் அழைப்புக்கும் சொல்லப்பட வேண்டிய மந்திரங்கள் வெவ்வேறேயாகும். ஆயின் தியானம் மட்டும் ஒன்றே.

5. விலங்கின் அழைப்பு வினையேவல்:

விலங்கு அழைப்பு வினையேவல் ஒன்பது வகைப்படும். அவை யானை, புலி, பரி, பன்றி, பாம்பு, எலி, பசு, எருமை, மரை, கலை, கரடி என்பனவற்றின் அழைப்பு வினைகள் என்பனவாகும்.

ஓம் நமோ பசுவதே ஸர்வ இந்த்திரியாணி
ஐம் க்லீம் வரவர வரத வேஸ்தலம்
ஈம ரம்ரும் சிரீம் ஸ்வாஹா II

என்ற சிறப்பு மந்திரத்தை இயந்திரத்தில் உள்ள பதினாறு அறைகளிலும் வரைந்து விதிப்படி பூசிக்கின் இந்த விலங்கின் அழைப்பு வினையேவல் சித்திக்கும்.

யானை	105 - 60 - 80
புலி	80 - 51 - 68
பரி	60 - 70 - 49
பன்றி	60 - 55 - 80
பாம்பு	50 - 25 - 16
எலி	20 - 25 - 90

பசு	40 - 28 - 25
எருமை	40 - 87 - 50
மரை-கலை-கரடி	80 - 17 - 56

6. பகைவர் அழைப்பு வினையேவல்:

இந்த வினையேவலைப் பற்றி மந்திரம் தெளிவாக இல்லாததால் இதன் வகை மட்டுமே இங்கு கூறப்படுகிறது. இஃது பகைவர், பகைவரின் தன தானியம், சேனை, படைக்கலம் என அழைப்ப வினை ஐந்து பிரிவுகளாகக் கூறப்பட்டுள்ளது. மந்திர அறை பதினாறுக்கான சிறப்பு மந்திரம் கூறப்படவில்லை. இலக்க மந்திரம் மட்டுமே இங்கு கூறப் பட்டுள்ளன.[1]

1. பகைவர் வர (பகைவரின் ஆயுதம் வர) 51-36-44

2. பகைவரின் தன தானியம் வர (பகைவரின் தனதானியம் வரும்) 104 - 57 - 28.

3. பகைவரின் படைகள் வர (பகைவர்க்குப் பயம் வரும்) 13 - 42 - 38.

4. பகைவர் சனம் வர 57 - 80 - 48.

5. பகைவர் படைக்கலம் வர 36 - 32 - 17.

ஆயுதம் வர (சத்துருவின் ஆயுதங்கள் வரும்)

7. நீரின் அழைப்பு வினையேவல்:
(சல ஆகர்ஷண வினை)

ஓம் ஹ்ரீம் ரம் ஹ்.ரீம் ஜலா கிருஷ்டிம்
குருகுரு மம் யுலம் வேஸ்தலம் ஸ்தலம்
வரம் வரத வரவர ஐம் க்லீம் ட்டம்
ட்டம் ஸ்வாஹா!!

திருமந்திரம் 300 - 209

என்ற நீரின் அழைப்பு வினைக்கான சிறப்பு மந்திரத்தை 16 அறைகளிலும் முறைப்படி வரைந்து வழிபாடாற்றி பின்பு அதனை ஐயன்கோயில் முன்னர் நிற்கும் யானையினது வலக்காலின் கீழே (காலின் அடியில்) கட்டுதல் வேண்டும்.

இஃது அகாலத்திலும் மேகம் வர மழை பெய்யும். சித்திரை வைகாசியிலும் மழைபொழிவு செய்யும் சக்கரம் ஒன்றும் நீரற்ற கிணற்றில் நிரை ஊறி வரும் சக்கரம் ஒன்றுமாக இரண்டு சக்கர வகை இங்கு கூறப்படுகிறது.

மழை வர மந்திரச் சக்கரம்	56-95-51
கிணற்றில் நீர் ஊறி வர	36 - 51 - 48
மழையும் கிணற்றில் நீரும் வர	51-47-0=98
மேகாகர்ஷணம்	51-56-95 = 202

6. வித்வேஷண கன்மப் பிரயோகம்:

இதனை பகைப்பு வினையேவல் என்றும் கூறுவர்.

இஃது உலக ஏடணை, விருக ஏடணை, படைக்கல ஏடணை என மூன்று வகைப்படும். இதில் உலக ஏடணை 6 தொகைகளையும் படைக்கல ஏடணை 2 தொகையினையும் உடையது. ஆக வித்வேஷண கன்மப் பிரயோகத்தின் வகை 3ம் தொகை 21ம் ஆகும்.

ஓம் ஐயும் ஸௌவும் காளீக்ஷாம்
காளி வீரகாளீ நிர்வாணீ ஹ்ரீம்
கவிழு(ந்து) விழுகை சுவாகா ॥

இஃது ஏடணை மூன்றுக்கும் உரிய சிறப்பு மந்திரமாகும். இதனை இலக்கங்களை எழுதுகிற கிரமமாயெழுத வேண்டும் எழுதியது போக எஞ்சியதை சூலாக்காரங்களில் எழுத வேண்டும். இந்த இயந்திரத்திற்கு ஐங்காயம் பூசி ஐங்கடு முக்கடு அல்லது எண்கடு ஆயினும் பூசி உசிதமான இடத்தில் வைக்கவும்.

செவ்வாய் ஓரையில் செவ்வாய்க் கிழமை இரண்டாம் ஜாமத்தில் இறைவியின் திருவுருவத்தை மனத்துள் தியானிக்க புவன தேவி செம்மை நிறத்தினவளாகத் தோன்றுவாள். அவளருளால் நினைப்பனவெல்லாம் நிறைவேறும்.

வித்வேடண கன்மத்தின் வகை மூன்று. அவை 1. உலக வித்வேடணம் 2. விருகவர்த வேடணம் 3. படைக்கல வித்வேடணம் என்பவை.

இதில் 1. உலக வித்வேடணம் 13 வகையாய் விரிந்து நிற்கின்றது.

1.	வாது வெற்றி	17 - 66 - 46
2.	சொல் வெற்றி	13 - 70 - 48
3.	வழக்கு வெற்றி	17 - 48 - 44
4.	படை வெற்றி	105 - 84 - 62
5.	போர் வெற்றி	62 - 57 - 68
6.	சொல் (பேச்சுத்தமிழ்) வெற்றி	72-95-40
7.	எழுத்து (ஓவிய வெற்றி	26 - 106 - 77
8.	இசைத்தமிழ் வெற்றி	74 - 202 - 107
9.	நாட்கத் தமிழ் வெற்றி	48 - 70 - 37
10.	மாதர் வெற்றி	80 - 14 - 19
11.	மைந்தர் வெற்றி	49 - 46 - 92
12.	சிறை வெற்றி	12-45-66
13.	ஊழ் வெற்றி	36-21-90

இந்த உலக வித்தேடண்க் கன்மப் பிரயோகம் 13க்குமான சிறப்பு மந்திரம்.

ஓம் ஹ்ரீம் ச்ரௌம் ஸீம் (ஏம்)
ஹ்ரீம் க்லீம் லம்லம் வரவர ஸ்ரீம் ஜயம்
அம் க்கம் லோக வித்வேஷணம்
குரு குரு ஸ்வாகா ॥

6. வித்வேஷணம்

வித்வேஷன கன்ம சக்கரத்திற்குரிய இலக்க துருவத்தின் இயந்திரம்

துருவ சக்கரம்

ப. க. வ. தா.

ப 6		வ 4	
பா 3		வா 5	
	கி 2		தி 8
	கீ 7		தீ 1

அத்துருவ சக்கரம்


ப. க. வ. த.

	க 9		த 15
	கா 16		தா 10
பி 13		வி 11	
பீ 12		வீ 14	

துருவாத்துருவ சக்கரம்

ப 6	க 9	வ 4	த 15
பா 3	கா 16	வா 5	தா 10
பி 13	கி 2	வி 11	தி 8
பீ 12	கீ 7	வீ 14	தீ 1

வித்துவேஷணம்



பொது வடிவம்

இம் மந்திரத்தைச் சக்கரத்தின் அத்துருவ அறைகளில் அப்பிரதக்ஷனம் கிரமமாக எழுத வேண்டும். பின் எண் இலக்கங்களை உரிய முறையில் அமைத்து உரிய பூசனைகள் செய்து அயலார் அறியாதபடி மறைவாக அணிதலும் புதைத்தலும் வேண்டும்.

இதில் விதியை விலக்குதல், சிறை வெல்லுதல் ஆகியவற்றில் இச்சக்கரத்தை முடியில் அணிய வேண்டும். மற்றவற்றின் ஏவலில் நாற்சந்தியில் புதைக்க வேண்டும்.

இரண்டாவது வகை வித்வேடணம் 6 பகுதியாய் விரிந்து நிற்கின்றது.

இதற்கான சிறப்பு மந்திரம்

ஓம் நமோ பகவதே சர்வேந்திரியாணீ
ஐம் க்ரீம் ஹ்ரீம் ஸௌம் க்லெளம்
ஜௌம் கீழே கவிழ்ந்து விழுக விழுக
ஸ்வாஹா ஓம் ||

இந்த மந்திரத்தை 16 அறைச் சக்கரத்தில் முறைப்படி எழுதி, மந்திரம் ஓதி, ஐங்காயமும் பூசிப் போர்க்களத்திற் புதைத்திட வேண்டும். மேலும் எதிர்விலங்குகள் நிலைகெட்டழியும்படிக்கு அவற்றின் எதிரே இவ் வியந்திரத்தைப் பிடித்து நிற்றலும் செய்ய வேண்டும்.

1.	கடாபுலியை வெல்லல்	60 - 25 - 64
2.	தகர் வெற்றி	50 - 55 - 40
3.	சேவல் வெற்றி	30 - 25 - 50
4.	வேழ வெற்றி	50 - 40 - 47
5.	குதிரை வெற்றி	60 - 25 - 50
6.	கிடாய் பன்றியை வெல்ல	50 - 17 - 62

1. திருமந்திரம் 300 பாடல் 223

மூன்றாவதான படைக்கல ஏடணை வகை இரண்டு அவை:

தண்டு, வில், சக்கரம் முறிய	50 - 35 - 70
வாள், ஈட்டி, பத்திரம் முறிய	67 - 60 - 48

இதற்குரிய சிறப்பு மந்திரம்

ஓம் ஐம் க்லௌம் க்ஷாம் காளி
நீல காளி வஜ்ரகாளி நிர்வாணீ
ஹ்ரீம் க்லீம் ஹ்ம் ட்கீம்
கீழே கவிழ்ந்து விழுக விழுக ஸ்வாஹா ||

இம் மந்திரம் வரையப்பட்ட இயந்திரத்தை விதிப்படி வழிபாடாற்றி முற்றிய பின் புறத்தற்குப் புலனாகும் படியாக முடியிலேனும், கையிலேனும் தரிக்கின் விரைவாகத் தனக்கு வெற்றியுண்டாகும். அத்துடன் பகைவர் படைக்கலன்களும் விரைந்து முறிந்து கெடும்.

7. பேதன கன்மம்:

அஷ்ட கன்மங்களில் ஏழாவது கன்மம் பேதனமாகும்.

ஓம் விருவிரு க்லௌம் கம் கணபதி
விருவிரு ஸர்வலோக நர்த ஸர்வஸ்த்ரீ
புருஷ உத்தராய ஹ்ரீம் ஐம்க்லீம்
ஸௌம் நம: ஓம் ||

இஃது பேதன கன்மத்தின் பொது மந்திரமாகும். இச் சக்கரத்திற்குரிய அதி தெய்வம் கணபதி. இம்மந்திரத்தை இயந்திரத்தின் புறவட்டத்தில் வரைந்து இம் மந்திரத்தை உச்சரித்து தந்திரக் கலையின் முறைமையால் வழிபாடாற்றி முற்றிய பின்பு அயலார் அறியாதபடி எடுத்துக் கொண்டு போய் ஐயன் கோட்டத்தில் வைத்து இருவகைப் பலியுமிட்டு குறித்த கருமத்தைக் கருதி ஐயனே எனது உள்ளக் கவலை தீர்த்து அருள்புரிக என்று விண்ணப்பித்து வேண்டிக் கொள்ள

வேண்டும். குறிப்பாக புதனோரையில் இரவு மூன்றாம் ஓரையில் வேண்டிக் கொள்ள வேண்டும். அப்பொழுது வெண்மை நிறம் பொருந்தியவராக புவனாபதி திருவுருவம் தோன்றும். இறைவியைத் தியானிக்க வேண்டுவன வெல்லாம் கிடைக்கும்.

பின் இந்த இயந்திரத்தை நற்கருமங்களுக்கு முடியிலும் வீட்டிலும் தீய கருமங்கட்கு ஐயன் கோட்டத்திலும் வைத்திட வேண்டும்.

இந்தப் பேதன கன்மம் தொகையாக 7ம் வகையாக 126 ம் கொண்டது.

7. பேதனம்

பேதனன கன்ம சக்கரத்திற்குரிய இலக்க துருவத்தின் இயந்திரம்

துருவ சக்கரம்

ப.	க.	வ.	த.
ப 1		வ 7	
பா 8		வா 2	
	கி 5		தி 3
	கீ 4		தீ 6


அத்துருவ சக்கரம்

ப.	க.	வ.	த.
	க 14		த 12
	கா 11		தா 13
பி 10		வி 16	
பீ 15		வீ 9	

துருவாத்துருவ சக்கரம்

ப 1	க 14	வ 7	த 12
பா 8	கா 11	வா 2	தா 13
பி 10	கி 5	வி 16	தி 3
பீ 15	கீ 4	வீ 9	தீ 6

பேதனம்



பொது வடிவம்

1.	நில பேதனம்	14
2.	நீர்ப் பேதனம்	12
3.	உலக பேதனம்	58
4.	மாதர் பேதனம்	18
5.	மைந்தர் பேதனம்	8
6.	விருக பேதனம்	8
7.	பகைவர் பேதனம்	8
		126

இவ்வாறாக பேதன வினையேவலின் வகை 7 உம் விரி 126 உம் திருமூலரால் உணர்த்தப் பெறுகின்றது.[1]

1. நில பேதன கன்மம்:

நில பேதனத்திற்குரிய சிறப்பு மந்திரம்

ஓம் ஐம் பகவதே அம் க்ஷும் பகவ தீட்சும்
லூம் தூம் ச்ரம் ஹ்ரீம் க்லீம் ஹ்ரீம்
ஸர்வேந்தரியானீ ஓம் ஸ்வாஹா ||

16 அறை சக்கரத்தில் புற வட்டத்தில் இம் மந்திரத்தை வரைந்து சனிக்கிழமை மூன்றாம் ஜாமத்தில் பூசை செய்து நன்மைக்கு வீட்டு இறப்புத் தலையிலும், தீமைக்கு ஐயனார் கோயில் பலிபீடத்தின் மேற்கிலும் வைத்து விட இந்நில பேதன கன்மப் பிரயோகம் சித்திக்கும்.

இம்மந்திரம் சிவமந்திரம் ஸ்தல பேதனத்தில் ஆற்றல் மிக்கது. இதை இஷ்டமுள்ள இடத்தில் எந்திரத்தில் எழுதி விடலாம். இன்ன இடத்தில்தான் எழுத வேண்டும் என்ற நியதி கிடையாது.

இவ்வியந்திரத்தில் அடைக்கப்படும் இலக்கங்கள் வருமாறு:

1. திருமந்திரம் 300 - பாடல் 317

1. பயிர் தழைத்து வளர 8-24-95
2. நெல் விளைய 20 - 24-19
3. தானம் பொலிய 18-80-67
4. தானியம் மெத்த ஆக 24-80-83
5. பட்டமரம் காய்க்க 9-18-26
6. கூடு கொட்டாரம் பெருக 25-80-90
7. செக்கெண்ணெய் அதிகமுண்டாக 107-40-56
8. ஆலையிற் சாறுண்டாக 106-101-88
9. பயிர் அழிய 26-80-40
10. தனதானியங் குன்ற 40-55-30

(களஞ்சியத்திற் கட்டி வைப்பவனும் கூலத் தொகுதி விரைவிற் கெடும்)

11. கூடும் கொட்டாரமுங் குன்ற 80-55-48
12. ஆலையிற் சாறு குறைய 48-107-16
13. செக்கெண்ணெய் குறைய 70-106-105
14. மரம் காய் உதிர 40-31-54

(காய்க்கிற மரம் காய்க்காது)

2. நீர்ப்பேதன கன்மம்:

நீர்ப்பேதன வினையேவலின் சிறப்பு மந்திரமாவது:

ஓம் கம் கணகண அம்க்ஷம் சிவாய
வம் சம் ஆம் ஹ்ரீம் ஶ்ரீம் ட்ச்ம்யூம்
லம் ஐம் க்லீம் ஸ்வாஹா ॥

இம் மந்திரத்தின் அதி தெய்வம் கணபதி. இதனை 16 அறை சக்கரத்தில் விதிப்படி அமைத்து, வழிபாடாற்றி முடித்து பின் இவ்வியந்திரத்தினை கிணறு, ஆறு முதலான நீர் நிலைகளின் பேதனத்தில் அவ்வவற்றின் நீரினுள்ளும், மீன் உப்பு முத்துக்களின் பேதனத்தில் அவ்வவற்றின் நீர்த்துறைகளிலும் மரக்கல பேதனத்துக்கு அதன் மரத்தின் கண்ணும் வைக்க வேண்டும்.

இலக்க வர்க்கத்தில் துருவ அத்துருவ துருவாதுருவ இலக்கங்களாவன:

1. ஆற்றில் நீர் உண்டாக 101 - 80 - 32 (கடுங்கோடையிலும் ஆற்றில் நீர் உண்டாம்)
2. கிணற்றில் நீர் உண்டாக 100 - 97 - 104 (கிணற்றில் பொறிகள் மூலம் எவ்வளவு இறைப்பினும் நீர் குன்றாது)
3. உப்பு விளைய 102-105-38
4. முத்து உண்டாக 28-97-46
5. மீனுண்டாக 48-27-86
6. மரக்கலத்தை வெட்டினும் அஃது உடையாதிருக்க 55-70-50
7. மரக்கலம் உடைய 35-36-42
8. மடுவில் மீன் இல்லையாக 87-70-86
9. ஆறு நீர் வற்ற 66 - 70 - 75
10. கிணறு நீர் வற்ற 15-20-30
11. உப்பு மறைய 95-80-24
12. முத்துக்குறைய 80-60-25

இதில் முதல் ஆறில் உடன்பாடாகக் கூறிய திருமூலர் பின்வரும் ஆறில் அவைகளின் எதிர்மறை இலக்கத்தினையும் கூறிச் செல்கின்றார்.

3. உலக பேதன கன்மம்:

இஃது 58 வகையாகச் சுட்டப் பெறுகின்றது.

ஓம் ஐம் (ஓம்) சிலீம் பம் சும் ஹ்உம்
பட் ச்ரௌம் க்ரோம் ட்ச் மிரியூம்
அம் க்ஷம் ஹ்ரீம் நமோ நாராயணாய்
சிவாய நம:॥

என்ற சிறப்பு மந்திரத்தை 16 அறை இயந்திரத்தில் பதித்து உலக பேதன கன்மப் பிரயோகத்தின் மந்திர செபம், யந்திர பூசை, தந்திரக் கிரியை, தியானம் முதலியவற்றை மேற்குத் திசையில்

செய்து இந்த யந்திரத்தை நன்மைக்கு முடியிலும், வீட்டிலும் தீமைக்கு ஐயன் முடியிலும், வீட்டிலும், தீமைக்கு ஐயன் கோட்டத்திலும் வைக்க வேண்டும்.

1. சபையில் வார்த்தை வெல்ல 107-108-106
2. பெரும் பட்டம் உண்டாக 106-23-36
3. நற்குணம் உண்டாக 70-49-90
4. மைந்தரும் மாதருங்கூட 18-20-19 (புருஷரும் ஸ்திரியும் உருவு உண்டாக ஸ்திரிகட்குப் புருஷன் நல்ல குணமுள்ள வனாவான். மங்கையர்க்கு மைந்தன் நல்லவனாவான்).
5. முன்னுறவு உண்டாக 70 - 55 -96 (பிற தேயத்திருப்பினும் நண்பர் உறவு நிலைக்கும்)
6. சிறப்பு உண்டாக 75-86-68
7. சுகம் உண்டாக 78-82-49
8. செட்டு உண்டாக 40-100-25 (வியாபாரத்தில் அதிக லாபம் உண்டாதல்)
9. தலைமயிர் உண்டாக 11-78-0
10. முன்பு கெட்டது கூட 96-57-102 (இழந்த பொருள் கிடைக்க)
11. தாரம் உண்டாக 80-30-106 (மனைவி கிடைக்க, இரண்டு பெண்டாட்டி உண்டாக)
12. மதிவித்துவானாக 75-86-48
13. நாட்டுக்கு நலமுண்டாக 48-26-107
14. மனையுண்டாக 42-80-43
15. பெண் வாழ 65-56-80 (வாழாத பெண்களும் வாழ்வாள்)
16. ஞானமுண்டாக 48-105-56
17. கவிதையுண்டாக 70-17-36
18. தனமுண்டாக 150-77-44
19. லச்சையுண்டாக 20-32-19 (நாணம் உண்டாக)
20. தானியமுண்டாக 86-103-26
21. தன்வசமாக 80-65-50 (மைந்தர் மங்கையர்க்கு வசமாவாள்)

22. பெண்ணான்விட 80-105-86 (பெருங்கர்முக்னும் பேரழகுள்ள மனையாளைத் துறப்பான்.)
23. தூரதரிசனந் தோற்ற 18-90-81 (தூர தரிசனங் கண்டு உரைத்தல்)
24. முக்கால நிகழ்ச்சியுமுரை 60-40-51
25. காய சித்தியுண்டாக 49-70-30
26. கூடு விட்டு கூடு புக 30-15-60
27. உடல் பருக்க 89-94-0
28. ஆயுள் உண்டாக 26-80-71
29. ஆரோக்கியம் ஓங்க 16-50-75
30. பேசும் சொற்கள் தெளிவின்றி மாற 67-60-56

இதுவரை உலக பேதன வினையேவல்களை உடன்பாட்டுடன் கூறி வந்த திருமூலர் 30 முதல் எதிர்மறையாகக் கூறத் தொடங்குகின்றார்.

31. பெரும்பட்ட மழிய 6-17-52 (கட்டின பட்டம் அழியும்)
32. குணங் கெட 12-18-105 (கெட்ட குணம் உண்டாகும்)
33. மாதர், மைந்தர் மணம் பிரிய 5-16-90
34. மாதர் உறவு கெட 58-16-15
35. சுகம் கெட 15-26-82
36. வித்தை கெட 33-50-36
37. நன்மை கெட 6-75-40
38. இறப்பு ஒழிய 42-25-60
39. செட்டில்லாமற் போக 79-100-0
40. தலை தட்ட 24-5-40 (மொட்டை)
41. கெட்டது கூடாமற் போக 48-24-27 (இழந்த பொருள் கைகூடாது)
42. பாட்டு ஒழிய 20-107-28
43. மனை கெடுத்தல் 20-25-84
44. பெண் வாழாமை 61-66-58
45. ஞானங் கெட 83-106-102

46. தானியங்கெட 36-70-25
47. நாணங்கெட 107-20-80
48. தனதானியங்கெட 12-15-90
49. தூர தெரிசனங் கெட 60-17-70
50. பெண்ணாண் கெட 16-40-97
51. தன் வயமாகாமை 30-27-108
52. தண் தெரியாமை 41-68-52
53. திரிகால ஞானங்கெட 14-91-26
54. சரீர சித்தி மாற 40-26-37
55. சீர்கெட 21-20-84
56. உடல் வாட 76-48-43
57. ஆரோக்கியம் கெட 40-104-13
58. ஆயுள் கெட 87-62-94

4. மாதர் பேதன கன்மம்:

ஓம் ஆம் க்ரோம் அம்க்ஷம் சிவாய ஸ்ரீம் க்லீம் ரம் ட்சிமிரியும் ஆம் ஹம் ச்ரம் தெருளதெருள ஸ்வாஹா ॥

இந்தச் சிறப்பு மந்திரத்தை முறைப்படி சக்கரத்தில் அமைத்து ஐயன் கோயிலில் இட்டு வழிபாடு செய்தல் வேண்டும். இஃது 18 வகையாய் விரிவடைந்து நின்றது.

1. கன்னி கூடுதல் 60-50-86
2. கொங்கையரும்புதல் 100-35-36 (ஒத்த முலை உண்டாக)
3. மாதர்தெருளல் 57-36-60 (முதிர்ந்தாள் தெருள - வயது முதிர்ந்தவர் பூப்படைய)
4. கருவுண்டாக 15-78-46
5. மாதர் நயக்க 40-30-57 (பள்ளியில் வேசி போல் வசியமாயிருக்க)
6. பகம்பெருக்க 74-50-13 (யோனி பெருக்கமாக)

7. வீறுண்டாக 28-15-44 (வெறியுண்டாக)
8. போகம் பெருக்க 15-68-70
9. பெரும்பாடு போக 97-50-60
10. கொங்கை திரங்கல் 60-70-63 (நகில் சுருங்குதல்)

அறுப தெழுப தறுபத்து மூன்றுங்
குறுகி முலை சுருங்குங் கொண்டாள் கூடாள்
அறுப தறுபத்தெட் டோடைம்பத் தாறும்
அறுப தெழுப தையைஞ் சேல் தெருளாதே[1]

இதுவரை மாதர் பேதன கன்ம பிரயோகங்களை விதி முகத்தாற் கூறி வந்த திருமூலர் இனி அவற்றை மறை முகத்தாற் கூறுவான் எடுத்துக் கொண்டார். அவற்றுள் இம் மந்திரமானது மாதரின் கொங்கை சுருங்குதல், மாதர் கூடாமை, மாதர் தெருளாமை ஆகிய இம்மூன்றில் வினையேவல்கட்கும் உரிய இலக்கங்களை உணர்த்துகின்றது.

11. பெண் கூடாமை 60-68-56 (பெண் பூப்படையாமல் கணவனுடன் சேர முடியாமலிருத்தல்)
12. பெண் தெருளாமை 60-70-25 (பெண் எத்துணைச் சாந்தி செய்யினும் ருது ஆகிக் கொண்டே இருப்பாள்)
13. (1) மாதர் அருளாமை 66-35-80
    (2) மாதர் வெறுத்தல் 56-23-14.

அரிவைஅருளாதிருத்தல், அரிவையர் வெறுத்தல் ஆகிய இவைஇரண்டும் அரிவையர் நயத்தல் என்னும் 5 ஆம் எண்ணுமுறைமைக் கணின்ற விதி வினையேவலின் மறுதலை வினையேவல்களாகும்.

"ஒட்டிப் பதினெட்டாம் ஓது பெண் பேதனம்" எனப் பின்னர் வருவது பற்றி 18 என்னுந் தொகை பெற வேண்டி, இங்கு இந்த வினையேவல்கள் இரண்டையும் ஒரு வினையேவல்களாகக் கொண்டு வரையப்பட்டன.

1. திருமந்திர மாலை 297

14. கருவழிய 32-37-44 (கருப்பம் கழிந்து போக)
15. பசுஞ்சுருங்க 25-52-60 (யோனி குறுகிவிட)
16. வீறு அழிய 63-25-12 (பெண் பேசாதிருப்பின் பேசுவாள்)
17. போகங்கெட 26-15-38 (மோகங் குறைய)
18. பெரும்பாடு தரிக்க 47-70-16 (உதிரம் வெள்ளை போக பெண் போகங் கெடும்)

5. **மைந்தர் பேதன கன்மப் பிரயோகம்:**

இதனுடைய சிறப்பு மந்திரம் மூலச் சுவடிகளில் காணப்பட்டவில்லை. முன்பு மாதர் பேதன கன்மத்திற்குச் சொல்லப்பட்ட மந்திரமே இந்த மைந்தர் பேதன கன்மத்திற்கும் உரியதாகும் என அறிய முடிகிறது.

இந்த மைந்தர் பேதன வினையேவல் வகை எட்டாக உரைக்கப்படுகிறது. அவை வருமாறு:

நோக்கியவர் கூட, கண்டவர் விழைய, கோசம் வளர, தாது பெருக, பிரிவுண்டாக, பிரிந்து பிணங்க, கோசங்குறைய, தாது குன்ற என்பனவாம்.

இவைகளின் இலக்கச் சக்கரங்கள் வருமாறு:

1. நோக்கியவர் கூட 25-100-16 (விசாரித்த காரியங் கைகூடும்.)
2. கண்டவர் ஆசைப்பட 16-300-87 (குறி வீங்கிச் சுக்கிலத் தம்பனம் உண்டாகும்)
3. கோசம் வளர 17-90-28
4. தாது வர்த்திக்க 16-49-90 (வீரிய விருத்தியுண்டாகும்)
5. பிரிவுண்டாக 90-20-40 (புருஷர் தனி பேதனம்)

இந்த மைந்தர் பேதன கன்ம வகையுள் தாது வர்த்தித்தல் வரை உடன்பாட்டு முகத்தாற் கூறி வந்த திருமூலர் பிரிவுண்டாதல் முதல் எதிர்மறையாக கூறுகின்றார்.

6. பிரிந்து பிணங்க 102-11-58 (பிரிந்தவர் கூட)

7. கோசஞ் சுருங்க 70-83-16 (குறி சுருங்க)
8. தாது வர்த்தனம் குன்ற 16-85-18 (வீரிய நஷ்டம்)

6. மிருக பேதன கன்மப் பிரயோகம்:

விருக மிருக பேதன கன்மத்தின் சிறப்பு மந்திரம்

ஓம் ஆம் க்ரோம் ஹ்ரீம்
ஓம் ரம் க்லீம் ஸர்வ லோக நாயக
மீநாட்சீ சிவாய நம: ||

இதனை 16 அறைச் சக்கரத்தில் முறைப்படி அமைத்து வேண்டிய பூசனைகள் செய்து மாட்டுத் தொழுவத்தில் புதைத்து விட வேண்டிய கன்மங்கள் நிறைவேறும்.

இஃது எட்டு வகையாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அவை எருமை பாலுண்டாதல், எருமை உண்டாதல், பசு உண்டாதல், பசு பாலுண்டாதல், எருமை கெட, எருமை பால் குறைய, பசு கெட, பசு பால் குறைய என்பன.

1. எருமை பாலுண்டாக 42-47-58
(வருந்திக் கறப்பினும் பால் சுரக்காவிடினும் மிகுதியுஞ் சுரக்கும்)
2. எருமையுண்டாக 42-47-18
3. பசுவுண்டாக 18-80-81
4. பசு பாலுண்டாக 27-16-48

இதுவரை விதிமுகத்தாற் கூறி வந்த திருமூலர் இனி மறைமுகத்தால் கூறுகின்றார்.

5. எருமை கெட 52-25-30
6. எருமை பால் குறைய 84-49-96
7. பசு கெட 51-36-60
8. பசு பால் குறைய 96-11-92

7. சத்துரு பேதன கன்மப் பிரயோகம்:

இந்த சத்துரு பேதன கன்மப் பிரயோகம் எட்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது. அவை தினம் பகை யுண்டாதல், பகைவரின் படைகள் வருதல், பகைவரின் தனதானியங் கெடுதல், பகைவரின் படைக்கலம் வருதல், பகை கெடுதல், பகைவரின் சேனை கெடுதல், பகைவரின் செல்வங் கெடுதல், பகைவரின் படைக்கலங் கெடுதல் என்பனவாகும்.

ஓம் ஆம் க்ரோம் அம் கம் க்ஷம்
சிவாய ஓம் க்லீம் வம்வம்
ஹ்ரீம் ஸ்ரீம் ஐம் ஸ்வாஹா ll

இந்தச் சிறப்பு மந்திரத்தை உச்சரித்து இதே மந்திரத்தை 16 அறைச் சக்கரத்துள் அடைத்து அந்தச் சக்கரத்தைத் தந்திர கலையின் முறைமையால் வழிபாடாற்றி முற்றிய பின்பு அயலன் அறியாதவண்ணம் எடுத்துச் சென்று ஐயனார் கோயிலில் வைத்து இருவகை பலியுமிட்டு குறித்த கருமத்தைக் கருதி "ஐயனே! எனது உள்ளக் கவலை தீர்த்து அருள் புரிக" என்று விண்ணப்பித்து வேண்டிக் கொள்ளுதல் வேண்டும்.

1. நாள்தோறும் பகையுண்டாக 60-100-35
(பகைவர் வீட்டில் தினமும் சண்டை உண்டாகும்)
2. பகைவர் படைகள் வர 14-106-17
(பகைவர் கூட்டம் தொடர்ந்து வர தினமும் சண்டையிடும்)
3. பகைவரின் தனதானியந் தாழ 16-60-170
(பகையாளிக்கு நாள்தோறும் திரவிய நாசம் ஏற்படும்).
4. பகைவர் படைக்கலம் வர 15-28-25
5. பகைவர் கெட 96-13-24
6. சேனை கெட 16-17-96

7. செல்வங் கெட 78-56-43

8. பகைவர் படைக்கலங்கெட 24-105-98
(பகைவர்க் கும் படைக்கலங்கட்கும் அழிவு உண்டாகும்.)

8. மாராண கன்மப் பிரயோகம்:

அஷ்ட கன்மப் பிரயோகங்களில் இறுதியாகக் கூறப்படுவது மாராணமாகும். இஃது மாரணம் என்றும் மரணம் என்றும் குறிக்கப்படும்.

அபிசார கன்மஞ் செனிக்கிற வியா்தி வழியாகவும் பல்விதமாக வருகிற பயங்களின் வழியாகவும் ஒருவர் பேதிப்பிக்கிற பயங்கள் வழியாகவும், அகால மிருத்யுக்களாய் மரித்துப் போதலே மாரணமாகும் என்று தத்துவ நிகானுபோக சாரம் கூறுகிறது. 1

ஓம் நமோ ருத்ராய அமுதம் பசபச
மதமத தாடய தாடய நாசய
நாசய ஓம் லோகித முகே
ஸ்வாஹா! ஓம் ஹநஹந
தஹதஹ ஸ்வாஹா-ஓம் II

இஃது மாரணத்திற்குரிய சிறப்பு மந்திரமாகும். இதனை உச்சரித்தும் 16 அறைச் சக்கரத்தில் வரைந்தும் ஐங்காயம் பூசி இரவில் திருவிளக்கேற்றி நினைத்த கருமத்தின் படியே மண்ணாலே ரூபமெடுத்து சக்கரத்தை விளக்கிலே வெதுப்பி, தெற்கு முகமாயிருந்து, புவனை செபம் பண்ணி, வெள்ளிக்கிழமை நாள் முதல் சாமத்தில் விடியும் வேளையில் அர்ச்சித்து ஈமச் சிதையின் கரியால் மண்டையோட்டிலேனும் பனை ஓலையிலேனும் கரியால் முறைப்படி வரைந்து முறைப்படி வழிபடவும். பின் இந்தச் சக்கரத்தை வழிபடும் பொழுது புவனை தேவியானவள் வடகிழக்குத் திசையில்

1. அத் 4 கவுளயாமளை மதம்

8. மாரணம்

மாரண கன்மச் சக்கர இலக்கத் துருவத்தின் இயந்திரம்

துருவச் சக்கரம்

ப	க	வ	த
	க 6		த 4
	கா 3		தா 5
பி 2		வி 8	
பீ 7		வீ 1	


அத்துருவச் சக்கரம்

ப	க	வ	த
ப 9		வ 15	
பா 16		வா 10	
	கி 13		தி 11
	கீ 12		தீ 14

துருவாத்துருவ சக்கரம்

ப 9	க 6	வ 15	த 4
பா 16	கா 3	வா 10	தா 5
பி 2	கி 13	வி 8	தி 11
பீ 7	கீ 12	வீ 1	தீ 14

8. மாரணம்



பொது வடிவம்

கருமை நிறத்தையும், சூலமும் கபாலமும் பொருந்திய கைகளையும், நெற்றியிற் பொருந்திய செந்தீக் கண்ணையும் உடையவராகத் தோன்றுவாள்.

மாரண கன்மத்திற்கேற்ற திசை வடகிழக்கு. இந்த மரிப்பு வினையேவலில் வடகிழக்கு முகமாயேனும், தென் மேற்கு முகமாயேனும் முறைப்படியிருந்து மந்திர தந்திர யந்திர பூசை முதலியவற்றை விதிப்படி செய்தல் வேண்டும்.

காரி நாளும், காரி ஓரையும், நள்ளிரவும் முதுகாடும் இக் கன்மத்திற்குச் சிறந்த காலமும் இடமும் ஆகும்.

எல்லாப் புவனங்கட்கும் அன்னையாயும், கருணைக்கு இருப்பிடமாயும், உலகினை இயக்குபவராயும், உலக்கை, கலப்பை தலையோடு சூலம் ஆகியவற்றைத் தாங்கிய நான்கு திருக்கைகளையும் மாற்றாருடைய குடர்மாலையைக் கவ்விய வாயையும் உடையவராக புவனையைத் தியானித்தல் வேண்டும்.

நீல மலைக்கு ஒப்பான ஒளி, குகை போன்ற வயிறு, மாற்றாரை மென்று தின்னும் வாய், மின்னல் மூடி, கனற் கண்கள், தலையோடுகளில் ஆகிய மாலையை அணிந்துள்ள மார்பு ஆகியவற்றைப் பொருந்தியிருப்பவராகத் தியானித்துத் தொடங்கப் பெறுதல் வேண்டும்.

வரம்பு மீறியவர்களாய்ப் பெரிதும் ஒறுக்கத் தக்க கொடியவர்களின் விஷயத்தில்தான் இந்த மாரண கன்மப் பிரயோகத்தைச் செய்தல் வேண்டும். இங்ஙனம் செய்யின் தப்பாது சித்திக்கும்.[1]

இஃது இரண்டு வகையாகக் கூறப்படுகின்றது. 1. சத்துரு மாரணம் 2. விலங்கு மாரணம் என்பனவாகும். இதில் சத்ரு மாரணம் 8 வகையாகும். விலங்கு மாரணம் 6 வகையாகும்.

1. கக்ஷபுட தந்திரம்

1. சத்துரு மாரண கன்மப் பிரயோகம்:

இந்தப் பகைவர் மரிப்பு வினையேவலின் சிறப்பு மந்திரம் சுவடிகில் காணப்படவில்லை. இதன் வகை எட்டு ஆகும்.

1. சத்துரு மாரணம் 67 - 16 - 38
2. கர்ப்ப மாரணம் 67 - 18 - 56
3. குழவி மாரணம் 48 - 17 - 60
   (குழந்தை மரணம் - பால மரணம்).
4. சேனை மரிக்க 41 - 30 - 36
5. மனைவி மாரணம் 17 - 90 - 56
   (இஷ்டப்பட்ட ஸ்திரீக்கு மாரணம்)
6. கண் மாரணம் 27 - 66 - 36
   (பகைவரின் கண் நாசமடைய)
7. பகைவர் மாரணம் 28 - 30 - 51
   (பகையுள்ள எல்லோருக்கும் மாரணம்)
8. சத்துரு நாசம் 49 - 36 - 48
   (பகைவர் குலத்துக்கு ஸர்வ மாரணம்).

இரண்டாவது விலங்கு மாரணம் கூறப்படுகின்றது.

2. விலங்கு மாரணம்:

மனிதர்களுக்கு மாரண வகை கூறிய திருமூலர் விலங்குகளுக்கும் மாரண வகையாக ஆறு கூறுகின்றார்.

எட்டாம் பகை மாரணம் என்னும் விருகம்
செட்டாம் கரிசாகத் தோன்றுமறு பத்தேழ்
முட்டாத வன்பத்து நாலுடன் முப்பதும்
பட்டாற் பரிசாம் பார்வகை யினியே!

1. கரி மாரணம் 67 - 54 - 30 = 151
   (யானைக் கூட்டம் மரிக்க)

2.	மறி மாரணம்	86 - 95 - 20
	(ஆடு கூட்டத்திற்கு நாசமுண்டாக)	
3.	பரிமாரணம்	72 - 101 - 36
	(குதிரைக் கூட்டம் நாசமடைய)	
4.	எருமை நாசம்	24 - 16 - 87
5.	பசு நாசம்	14 - 167 - 36
6.	விடமாரணம்	50 - 67 - 84
	(பாம்பு முதலிய விஷ ஜந்துக்களின் நாசம்)	

இம் மாரண மந்திரம் வேறு சிறப்பு மந்திரங்களைக் கூறியும் வரைந்தும் காட்ட விளக்கமுறை வைக்கிறது.

இலக்க அறைகளுடைய வெளியே

ஓம் கலீம் ட்சீம் ஸஹஸ்ரஜ வாலஜ்
வாலிநீ நம (ஸ்ரீ) ஹ்ரீம் ஆம் க்லீம்
சவாய ஹ்ரீம் க்ரம க்ரம க்கம்
(ஹம்) ஸம் க்ரோம் கம் ககபலா
பயநக மாரண கட்ட கட்ட தாட
தாட ப்ராம் ப்ராம் ஐம் க்லீம் ஸ்வாகா!!

---

1. திருமந்திர மாலை 326

27. மறை மொழி

உலகமெங்கும் அன்பும் கருணையும் நிலவ வேண்டும். நல்ல செயல்களும், நல்ல சிந்தனைகளும் தழைத்து ஓங்க வேண்டும் என்பதே சித்தர்களின் நோக்க மாகும்.

எங்கெல்லாம் நல்ல செயல்களும், நல்ல சிந்தனைகளும் செயல்படுகின்றவோ அவைகளெல்லாம் ஒரு காலத்தில் சித்தர்களின் தவச் சாலைகளாகத் திகழ்ந்த இடங்களாகும்.

சித்தர்கள் இறைவனை வழிபட யோகத்தில் அமரும் பொழுது அவர்களது யோகத்தைக் கெடுக்க சில தீய சக்திகள் முயற்சி செய்யும். அப்பொழுது அவர்கள் தங்கள் யோக நிலைக்கு எந்தவித தீங்கும் ஏற்படாமல் இருக்கத் தங்களைச் சுற்றி ஒரு வட்டத்தை வரைந்து கொண்டனர். இஃது அவர்களது மந்திர ஆற்றல்களினால் நல்ல பாதுகாப்பு வளையமாயிற்று.

இஃது அவர்களின் தேவைக்கேற்ப பல்வேறு வடிவங்களாக உருமாற்றம் பெற்றன. ஒவ்வொரு வடிவங்களும் ஒவ்வொரு தற்காப்பு ஆயுதங்களாயின.

இந்தத் தற்காப்பு ஆயுதங்களின் பயன் அனைவரையும் சென்றடைய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தினால் சித்தர்கள் தக்கார் தகவிலார் என்று பாகுபாடு பாராமல் எல்லோரும் அந்தப் பயன் பெற வேண்டும் என்று அரிய வித்தைகளை வாரி வழங்கினர்.

விளைவு அவைகளெல்லாம் இன்று பொருள் ஈட்டும் உப தொழிலாக, தம் எதிரிகளை அழிக்கும் படைக்கலமாக, சுயநலவாதிகளால் பயன்படுத்தப்படுகின்றன. பொது நலன் கருதி உருவாக்கப்பட்ட அவ்வரிய கலைகள் பிறருக்கு உபதேசிக்கப்படாமல் தம் குலவித்தையாகத் தம் குடும்பத்தாருக்கு மட்டுமே பயிற்றுவிக்கப்பட்டமையால் ஏறத்தாழ அழிந்தே விட்டன.

இதனினும் நல்ல இதயம் கொண்டோர் சில மாட்டு எஞ்சியிருக்கும் கலைகள், குரு முகமாக தக்கவர்க்கு பயிற்றுவிக்கப்படுகின்றன.

ஈங்கு திருமூலர் சொன்ன யந்திர வகைகள் யாவும் மக்களின் நலன் கருதி இலைமறைவு காய் மறைவாக விளக்கப்பட்டவை.

யந்திரங்கள் முக்தியளிக்காது

அலசில் மந்திரமும் தந்திரங்கள் தானும்
அனைத்துயிரும் இயந்திரமே யாகு மிப்பால்
இலகு மட்ட கருமமிப் பொருள் பொருளே யல்லா தில்லை
யெனும் இயந்திரவா திக்கிது வோமுக்தி
நிலவிய அவ்வட்ட கருமத்துக் கல்லால்
நீள்முத்தி நெறியிட்ட கரும மாமோ
கலவிதனைக் காமிதனைக் கைவிட் டிந்தக்
கண்ணுதலோன் ஞானத்தைக் கருதிட்டாயே!
-தத்துவப்பிரகாசம் 206

எண்ணிறந்த மந்திரங்களும் எண்ணிந்த தந்திரங்களும் எல்லா உயிர்களுக்கும் இன்பத்தை இயந்திரத்தினால் உண்டாக்கி விட முடியும். அது மட்டுமல்லாது சித்தர்களின் வித்தைகளான வசியம், ஆகருணம், மோகனம், உச்சாடனம், தம்பனம், வித்துவேஷனம், பேதனம், மாரணம் எனும் எண்வகை வினையேவல்களும் அணிமா, மகிமா, லகுமா, கரிமா, ஈசத்துவம், வசித்துவம், பிராத்தி, பிரகாமியம் என்னும் அஷ்டமாசித்திகளையும் உண்டாக்கவல்லது. ஆகையால் இதுவே முக்திக்கு வழி என்று சில தந்திர நெறியாளர்கள் கருதுகின்றனர்.

ஆனால் இந்த யந்திர நெறியால் கிடைக்கின்ற அஷ்ட கன்மங்களும், அஷ்டமா சித்திகளும் முக்திக்கு அழைத்துச் செல்லாது. இஃது காம நெறிக்கே அழைத்துச் செல்லும். ஆகையால் இந்த யந்திர ஸ்தம்பனங்களைக் கைவிட்டு முக்தி நெறிக்கு உத்தரவாதமான சிவஞானத்தைச் சேர வேண்டும் என தத்துவப் பிரகாசம் கூறுகின்றது.

திருமந்திரம் முன்னூறு திருமந்திரம் மூவாயிரம் நூல்களில் இந்த யந்திரங்களின் செயல்பாடுகள் ஒரு பகுதியாகக் கூறப் பெற்றிருந்தாலும் இவைகளின் சரியான

பொருள் விளங்காமல் மனம் போனபடி புரிந்து கொண்டவர்களே அதிகம். யந்திர வழிபாடு ஒரு தற்காலிக நிவாரணம் அவ்வளவே. இதுவே நிரந்தரமாகாது.

இந்த நூலில் கூறப்பட்ட திருமந்திரச் சக்கரங்கள் யாவும் ஓர் இலக்கிய அறிமுகமே யன்றி முழு பூசை விதிமுறைகள் அல்ல. சாதாரண மக்களுக்கும் திருமூலரின் யந்திர அறிமுகம் கிடைக்க வேண்டுமென்பதற்காக இந்நூல் உருவாக்கப்பட்டது. சில சிக்கலான மந்திரச் சக்கரங்களுக்கு இங்குத் தெளிவான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த மந்திரச் சக்கரங்கள் தவறான செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தின் காரணமாகவே சில விளக்கங்கள் மறைமுகமாகவும் சில விளக்கங்கள் மறைக்கப்பட்டும் விளக்கப்பட்டன. மறைக்கப்பட்டவை களையும், மறுக்கப்பட்டவைகளையும் தக்க குருவின் வாயிலாக அறிந்து கொள்ளுதலே இந்த யந்திரக் கலைக்குச் செய்யும் பெரும் பேறாகும்.

இறைவன் எல்லாருக்கும் எல்லாமும் அளித்து இன்பம் அளிப்பானாக.

சி.எஸ்.முருகேசனின் சித்தர் இலக்கிய நூல்கள்

1. சித்தர்கள் கண்ட இறைமை
2. சித்தர்களின் பேருலகம்
3. சித்தர்களின் சாகாக்கலை
4. சித்தர்களின் அஷ்டமாசித்திகள்
5. சித்தர்களின் மந்திரக்கலை
6. பாரதி கண்ட சித்தர்கள்
7. திருமந்திரச் சக்கரங்கள்
8. சுழுமுனை
9. புதுச்சேரி சித்தர்கள்

அழகு பதிப்பகம்
21, டீச்சர்ஸ் கில்டு காலனி,
இராஜாஜி நகர் விரிவு,
வில்லிவாக்கம், சென்னை-600 049.
போன்: 26502086.